விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

சங்கு 15 வள்ளுவர் ஆண்டு 2045 கார்த்திகை 09 செவ்வாய்க்கிழமை (25.11.2014) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 341

# போர்க்குற்ற விசாரணைகளை ஜாதிக ஹெல உறுமய தடுக்கும்

## அக் கட்சி அறிக்கை

*(கொழும்பு)*

***ஜனாதிபதி, பாதுகாப்புச் செயலாளர், முன்னாள் இராணுவத் தளபதி அல்லது வேறு இராணுவ அதிகாரிகளாக இருந்தாலும் பயங்கரவாதத்தை ஒழித்த விடயம் தொடர்பில் போர்க்குற்றங்களை சுமத்த தமிழ் இனவாதிகள் முயற்சித்தால் அதனை தடுக்க ஜாதிக ஹெல உறுமய உயிரை துச்சமென கருதிச் செயற்படும்***

நாட்டின் ஒருமைப்பாட்டுக்கு ஆபத்தை ஏற்படுத்த எவருக்கும் எந்த சந்தர்ப்பதிலும் நாம் இடமளிக்க மாட்டோம்.

ஆனால் போர்க்குற்றங்கள் என்ற போர்வையில் நாட்டின் ஜனநாயகத்தையும் நல்லாட்சியையும் இல்லாமல் செய்ய முடியாது. நல்லாட்சி என்பது நாட்டுக்கு தற்போது அத்தியாவசியமானது.

ஊழல் மோசடிகளை ஒழித்தல், நியாயமான தேர்தலை நடத்துதல், குறிப்பாக நீதித்துறையில் சுதந்திரத்தை ஏற்படுத்துதல், அரச சேவையை வினைத்திறன்மிக்கதாக மாற்றுதல் போன்றவற்றை மேற்கொண்டு நாட்டை முன்னோக்கி இட்டுச் செல்லுதல் அத்தியாவசியமானது.

அதேபோல் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி தமக்கு தேவையான அமைச்சர்களின் எண்ணிக்கை நியமிப்பது, விரும்பிய எவரையும் உயர்நீதிமன்றத்திற்கு

24ஆம் பக்கம் பார்க்க....

## மஹாநாயக்க தேரர்களை சந்தித்தார் மைத்திரிபால



(கொழும்பு)

ஜனாதிபதி தேர்தலில் எதிர்க்கட்சிகளின் பொதுவேட்பாளராகப் போட்டியிடவுள்ள மைத்திரிபால சிறிசேன கண்டி மல்வத்தை மற்றும் அஸ்கிரிய மஹாநாயக்க தேரர்களை சந்தித்துள்ளார்.

சிங்கள மக்கள் தாம் யாருக்கு வாக்களிக்க வேண்டும் என்று தீர்மானிப்பதில் செல்வாக்கு செலுத்தக் கூடியவர்கள் இந்த ம்ஹாநாயக்க

24ஆம் பக்கம் பார்க்க....

## ஆளும் கட்சியிலிருந்து விலகுவோர் எதிரணியில் இணைந்து கொள்வர்

### எதிரணி வேட்பாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

ஆளும் கட்சியில் இருந்து விலகி தனக்கு ஆதரவு வழங்க இணையும் தரப்பினரை எதிர்வரும் நாட்களில் காணமுடியும் என பொது வேடபாளர் மைத்திரிபால சிறிசேன நேற்று கண்டியில் தெரிவித்துள்ளார்.

தேர்தல் பணிகளை ஆரம்பிக்கும் முன்னதாக தலதா மாளிகையில் வழிபாட்டில் ஈடுபடவும் மாநாயக்க தேரர்களை சந்தித்து ஆசி பெறும் நோக்கில் கண்டிக்கு சென்றிருந்த போதே அவர் இதனை கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தேர்தல் பணிகளை வெற்றிகரமான முறையில் மேற்கொள்ள

24ஆம் பக்கம் பார்க்க....

## பொது பல சேனாவும் போட்டியிடும்!

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலில் தமது அமைப்பின் சார்பில் தேசிய வேட்பாளர் ஒருவர் நிறுத்தப்படுவார் என பொது பல சேனா அமைப்பு தெரிவித்துள்ளது.

பொது வேட்பாளர் நிறுத்தப்பட்டுள்ள போதிலும் நாட்டுக்கு தேவையான பொது வேட்பாளர் நிறுத்தப்படுவார் எனவும் அவர் யார் என்பது இன்று நடைபெறும் ஊடக சந்திப்பில் அறிவிக்கப்படும் என பொது பல சேனா அமைப்பின் தேசிய அமைப்பாளர் வித்தரந்தெனியே நந்த தேரர் தெரிவித்துள்ளார்.


எவ்வாறாயினும் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவின் வழிகாட்டலில் இயங்கி வருவதாக கூறப்படும் பொது பல சேனா, சிங்கள பௌத்த வேட்பாளர் ஒருவரை ஜனாதிபதித் தேர்தலில் நிறுத்த போவதாக தெரிவித்திருந்தது.

ரணில் விக்ரமசிங்க, சந்திரிகா பண்டாரநாயக்க, மாதுளுவாவே சோபித தேரர் ஆகியோரில் ஒருவரே பொது வேட்பாளராக நிறுத்தப்படுவார் என ஊகங்கள் வெளியிடப்பட்டு வந்தன.

இதனால், பொது பல சேனா சிங்கள பௌத்த வேட்பாளரை நிறுத்த போவதாகவும் தம்மிடம் அப்படி

23ஆம் பக்கம் பார்க்க....

### 'சுடுவோம்' துண்டுப் பிரசுரம்



(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக ஆசிரியர் சங்க தலைவர் ஆர்.இராசகுமாரன் உட்பட பல்கலை மாணவர்கள் சிலரினை சுடுவோம் என எச்சரித்து துண்டுப் பிரசுரங்கள் ஒட்டப்பட்டுள்ளன.

யாழ்.பல்கலைக்கழக வளாக

24ஆம் பக்கம் பார்க்க....

## யாழ்ப்பாணத்தில் நேற்று வீதிச் சோதனைகள்!

(யாழ்ப்பாணம்)

தமிழீழ மாவீரர் தினம் இம் மாதம் 27-ம் திகதி உலகம் முழுவதும் அனுஷ்டிக்கப்படவுள்ள நிலையில், யாழ்.குடாநாட்டில் வீதிகள், பொது இடங்கள் அனைத்திலும் படையினர் நிலை நிறுத்தப்பட்டிருப்பதுடன், நேற்றைய தினம் தொடக்கம் விசேட அதிரடிப் படையினரின் சோதனை நடவடிக்கைக்ளும் உச்சக்கட்டமாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இம்மாதம் தொடர்ச்சியாக சகல இடங்களும் படையினர் மற்றும் புலனாய்வாளர்களால்

24ஆம் பக்கம் பார்க்க....

## திருச்சபைக்கு வழங்கிய வாக்குறுதியை மீறிய அரசு

24ஆம் பக்கம் பார்க்க....

## தமிழ் மக்கள் யாரை ஆதரிப்பது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆராய்வு

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலில் யாரை ஆதரிப்பது எனபது தொடர்பில் ஆராய்வதற்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின்நாடாளுமன்றக்குழு நேற்று அவசரமாகக் கூடியது.

கட்சியின் தலைவர் இரா.சம்பந்தன் தலைமையில் நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் நேற்று முற்பகல் 10 மணிக்கு இந்தக் கூட்டம் நடைபெற்றது

ஜனவரி 8-ம் திகதி நடை பெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் எதிரணியின் சார்பில் மைத்திரிபால சிறிசேனவும், அரச தரப்பு சார்பில் மகிந்த ராஜபக்ஷவும் போட்டியிடவுள்ள நிலையில் இவர்களில் யாரை ஆதரிப்பது என்பது தொடர்பில் கூட்டமைப்பு இந்தக் கூட்டத்தில கலந்துரையாடியது.

எனினும் கடந்த கால அனுபவங்களை கவனத்தில் எடுத்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ் சிவில் சமூகப்பிரதி நிதிகள் மற்றும் மக்களுடன் கலந்துரையாடி தீர்மானத்தை எடுப்பதென் முடிவு செய்துள்ளது. (சி-11)

## நிறைவேறியது பட்ஜெட்

(கொழும்பு)

2015-ம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் 95 பெரும்பான்மை வாக்குகளால் நாடாளுமன்றத்தில் நிறைவேறியுள்ளது.

152 பேர் பட்ஜெட்டுக்கு ஆதரவாகவும், 57 பேர் எதிராகவும் வாக்களித்துள்ளனர்.

அரசாங்கத் தரப்பிலிருந்து மைத்திரிபால சிறிசேன, ராஜித சேனாரத்ன உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் வெளியேறியிருந்த நிலையில், இந்த பட்ஜெட் மீதான இறுதி வாக்கெடுப்பு பரபரப்புடன் எதிர்பார்க்கப்பட்டிருந்தது.

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் ஜனநாயக தேசியக் கூட்டமைப்பு ஆகிய கட்சிகளின்

24ஆம் பக்கம் பார்க்க....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாண மண்ணுக்கு திசைகாட்டி நிறுவனத்தை அர்ப்பணிக்கின்றேன்

## இம்மாற்றம் வணிக ரீதியான உரிமை மாற்றம் மட்டுமே


**நுழைவுக்கட்டணங்கள் எதுவும் இல்லை**
**முற்பணம் என்ற பேச்சே இல்லை**

★ வீடு தேடிவந்து ஆலோசனை சொல்லவும் நான் தயார்

★ முகப்புத்தகத்தின் (Facebook) மூலம் முதுகில் குத்த நினைப்பவர்கள் உண்மைத்தன்மை இருப்பின் என்னிடம் நேரில் வரலாம் (face to face)

**பதவியேற்பு நிகழ்வில் திசைகாட்டி புதிய தலைவர் திரு. S. சுபசீலன் தெரிவிப்பு**

### நிகழ்வின் சில பதிவுகள்



புதிய தலைவர் பொறுப்புக்களை ஏற்றுக்கொள்கிறார்



மூத்த வங்கியாளர் திரு. V.S. முதலி அவர்கள் அளிக்கும் கௌரவம்



திருமறைக்கலாமன்ற நிர்வாக இயக்குநர் அருட்திரு. நீ.மரியசேவியர் அடிகள் ஆசிச் செய்தி வழங்குகிறார்.



மூத்த ஊடகவியலாளர் திரு. N.வித்தியாதரன்



யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை அதிபர் திரு. N.மகேந்திரராஜா



வலம்புரி நிர்வாக இயக்குநர் S.வெற்றிவேலாயுதம்



சிறப்பு விருந்தினர் கனடா மீகாமன் நிர்வாக இயக்குநர் திருமதி S.சுகந்தி கௌரவிக்கப்படுகிறார்.



திசைகாட்டி குடும்பத்தினர்



கலந்து சிறப்பித்தோரில் ஒரு பகுதியினர்

# திசைகாட்டி பிறைவேற் லிமிட்டட்



**175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்திச் சந்தி, யாழ்ப்பாணம்.**

**021 221 9016**

(சி-9169)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈராக்கில் தீவிரவாதிகள் கைப்பற்றிய இரு நகரங்களை இராணுவம் மீட்டது

ஈராக்கில் பெரும் பகுதியை ஐ.எஸ். ஐ.எஸ்.தீவிரவாதிகள் கைப்பற்றி தங்கள் கட்டுப்பாட்டில் வைத்துள்ளனர். இவற்றை மீட்கும் முயற்சியில் ஈராக் இராணுவமும், குர்த் 'பெஷ்மெர்கா' படையும் ஈடுபட்டுள்ளன.

இவர்களுக்கு அமெரிக்கா கூட்டு படைகள் குண்டு வீச்சு நடத்தி உதவி வருகின்றன. இதனால் பல நகரங்கள் மீண்டும் ஈராக் அரசின் கட்டுப்பாட்டுக்குள் வந்த வண்ணம் உள்ளன.

இந்த நிலையில் நேற்று முன்தினம் தலைநகர் பக்தாத் அருகே நடந்த துப்பாக்கி மோதலில் ஐ.எஸ்.ஐ.எஸ்.தீவிரவாதிகள் வசம் இருந்த 2 நகரங்கள் மீட்கப்பட்டுள்ளன. ஜலாவ்லா மற்றும் சாதியா என்ற அந்த நகரங்கள் பக்தாத்தில் இருந்து 115 கி.மீற்றர் தூரத்தில் உள்ளன.

இதன் மூலம் பக்தாத்துக்கு செல்லும் நெடுஞ்சாலையில் இருந்து தீவிரவாதிகள் அகற்றப்பட்டதால் பல மாதங்கள் தடைப்பட்டிருந்த போக்குவரத்து பாதிப்பு நீங்கியுள்ளது.

நேற்று முன்தினம் நடந்த தாக்குதலில் 23 குர்த் பெஷ்மெர்கா படை வீரர்களும், 50 தீவிரவாதிகளும் உயிரிழந்தனர். 250இற்கும் மேற்பட்டோர் காயம் அடைந்தனர்.

இந்த தகவலை குர்த் கட்சியின் தேச பக்தி பிரிவு மூத்த தலைவர் மலா பக்தியார் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையே, சிரியாவில் ஐ.எஸ். ஐ.எஸ்.அமைப்பில் சேர்க்க சிறுவர்களை தீவிரவாதிகள் கடத்துகின்றனர். அவர்களின் தலைநகரான ரக்காவில், ஆயுத பயிற்சி மற்றும் மதபோதனை வகுப்புகள் நடத்துகின்றனர்.

சிறுவர்களை தற்கொலை படை தீவிரவாதி ஆகவும், இராணுவத்தை எதிர்த்து போர் புரியவும் தயார் செய்கின்றனர்.

இவர்கள் ஈராக்கில் தங்கள் கட்டுப்பாட்டில் உள்ள மொசூல் நகரில் சோதனை சாவடிகளில் ஆயுதங்களுடன் நிற்பதை காண முடிகிறது. (இ-5)

# அதிபர்களுடன் கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் கல்வி வலயத்திற்குட்பட்ட அதிபர்களுடனான விசேட கலந்துரையாடல் நாளை புதன்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு யா/இராமநாதன் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலுக்கு அனைத்து அரச தனியார் பாடசாலை அதிபர்களை தவறாது கலந்து கொள்ளுமாறு வலிகாமம் வலயக்கல்விப் பணிப்பாளர், செ.சந்திரராஜா அறிவித்துள்ளார். (இ-7)


## வாழ்க்கையில் வெறுப்பா?

பிரச்சினை எதுவானாலும், எம்முடன் தொலைபேசியில் அல்லது நேரில் பேசுங்கள். இரகசியங்களைப் பேணுவோம்

காலை 9.00 - பி.ப 1.00

கைகொடுக்கும் நண்பர்கள்
104,4 ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.
021 222 8117

(8221)



## மரண அறிவித்தல்

**சின்னத்துரை பொன்னுத்துரை**

(2 ஆம், வட்டாரம் நயினாதீவு)

அவர்கள் நேற்று (23.11.2014) ஆம் திகதி காலமாகிவிட்டார். இவரின் இறுதிக் கிரியைகள் பற்றிய தகவல் பின்னர் அறிவிக்கப்படும். இத் தகவலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொடர்புகளுக்கு
0776251572,
0775422964

இப்படிக்கு:- திரு. பொன்னுத்துரை
ஸ்ரீபாலன் (மகன்) ஆசிரியர்
யா/ சன்மார்க்க மகா வித்தியாலயம்
யாழ்ப்பாணம்.



## உடனடியான நிரந்தர தொழில்

17-55 வயது ஆண்- பெண் இருபாலாருக்கும் கொழும்பை அண்மித்த பிரதேசங்களிலுள்ள ஏற்றுமதி தொழிற்சாலைகளான ஜேம்/ கிளவுஸ்/ காமெண்ட்/ பிளாஸ்டிக்/ பால்மா/ மின் உபகரணம் /PVC/ தேயிலை/ யோகட்/ காட்போட் மற்றும் பல... தயாரிக்கும் தொழிற்சாலைகளில்+ உற்பத்தி ✦ லேபல் ✦ பொதியிடல் ✦ தரம்பிரித்தல் பிரிவுக்கு உடனடியாக ஆட் சேகரிப்பு. உணவு+ தங்குமிடம் குறைந்த விலைகளில். சம்பளம் 19000/= 26000/= 35000/= (நண்பர்கள், குழு, தம்பதியினர் ஒரே தொழிற்சாலைகளில்) வருகை தரும் நாளிலே வேலை வாய்ப்பு. (சி-9095)

தொடர்பு:- கொழும்பு 0777889185,0778128194



## 70 ஆவது பிறந்த தின நினைவு நாள்

அமரர் திரு. சோமசுந்தரம்
**விக்னேஸ்வரன்**

மலர்வு 25.11.1944
உதிர்வு 30.08.2014



குடும்பத்தின் ஒளி விளக்காய்- அன்பின் இருப்பிடமாய் நற்பண்புகளுடன் நல் வாழ்வுக்கு வழிகாட்டி எமக்காகவே வாழ்ந்த எம் அன்புத் தெய்வத்தின் 70 ஆவது பிறந்த தின நாளை நினைவு கூருகின்றோம்- உம் பிள்ளைகள் நாம் வேண்டுகின்றோம். இறைவனிடம் உன் ஆன்மா கடவுள் சந்நிதி சேர்ந்திட

இணுவில், யாழ்ப்பாணம். (சி-9165) இங்ஙனம்: குடும்பத்தினர்.



வலம்புரி விளம்பர தொடர்புகளுக்கு:
021 221 7603
021 567 1532



## கண்ணீர் அஞ்சலி

வலி.தென்மேற்கு பிரதேசசபை தவிசாளரும்
ஓய்வு பெற்ற கிராம அலுவலருமான

அமரர்
**சண்முகம் சிவகுமாரன்** (J.P)



அவர்கள் 23.11.2014 அன்று இறைபதம் அடைந்த செய்தி கேட்டு ஆழ்ந்த துயர் அடைகின்றோம். அன்னாரின் இழப்பால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(சி/9167)

கட்டுடை,
மானிப்பாய்.

சு.சுந்தரம்பிள்ளை
(நாதஸ்வரம்)


## இராசி பலன்

25.11.2014
(கார்த்திகை 09, செவ்வாய்க்கிழமை)
சூரிய உதயம் காலை-6.03 மணிக்கு
திருதியை பிற்பகல் 3.06 மணிவரை
மூலம் பிற்பகல் 12.47 மணிவரை
இராகுகாலம் 3.12-4.42 மணிவரை
சுபநேரம் 10.42-12.12 மணிவரை
அமிர்த சித்தம்

வளவன்

**மேடம்:** இழுபறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு, தொழில் ரீதியாக இருந்த போட்டிகளைச் சமாளிப்பீர்கள்.

**இடபம்:** அடுத்தவர் விவகாரங்களில் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது, கேட்ட இடத்தில் உதவிகள் கிடைப்பது அரிது, வரவைவிட செலவு அதிகரிக்கும்.

**மிதுனம்:** நண்பர்கள் சந்திப்புண்டு, பணத் தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், உறவினர்களின் சந்திப்பால் உற்சாகமடைவீர்கள், செய்தொழில் மேன்மையுண்டு.

**கடகம்:** சச்சரவை விட்டு சாதித்துக் காட்டுவீர்கள், உடல் நலம் சீராகி உற்சாகமடைவீர்கள், தொலைபேசித் தகவல்கள் மகிழ்ச்சி தரும், கௌரவமான நாள்.

**சிம்மம்:** உள்ளம் மகிழும் சம்பவங்கள் இடம்பெறலாம், பணத் தேவைகள் பூர்த்தியாகும், சுப காரியப் பேச்சுக்கள் முடிவாகலாம், சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள்.

**கன்னி:** பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், பேச்சில் கனிவு பிறக்கும், தொலைபேசி வழியில் ஆச்சரியமான தகவல்கள் வந்து சேரலாம்.

**துலாம்:** எடுத்த காரியத்தை எளிதில் முடிக்க சகோதர வழியில் உதவிகள் கிடைக்கலாம், ஆதாயம் தரும் வேலையொன்றில் அக்கறை காட்டுவீர்கள்.

**விருச்சிகம்:** உறவினர் வருகையுண்டு, குடும்ப மகிழ்ச்சி கூடும், உஷ்ண சம்பந்தமான ரோகங்கள் ஏற்படலாம், வாக்கு மேன்மையுண்டு, [illegible] வந்து சேரலாம்.


**தனுசு:** காரிய வெற்றிக்கு கடவுளை வழிபட வேண்டிய நாள், ஆரோக்கியம் சீராக ஆகாரத்தில் கட்டுப்பாடு தேவை, மற்றவர்களின் விமர்சனங்களை மறந்து செயற்படுவது நல்லது.

**மகரம்:** வீட்டை அழகுபடுத்தும் எண்ணம் உருவாகும், ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம், சுப செலவுகள் அதிகரிக்கும் நாள், சயன சுகக் குறைவான நாள்.

**கும்பம்:** பொது வாழ்வில் பாராட்டும் புகழும் கூடும் நாள், தித்திக்கும் செய்திகள் வந்து சேரும் நாள், வருமானம் திருப்தி தரும், காரிய அனுகூலமுண்டு, போசன சுகமுண்டு.

**மீனம்:** பெரிய மனிதர்களின் தொடர்புகள் அதிகரிக்கும், தொழில் ரீதியாக புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கருவாச்சி காவியம்

## வைரமுத்து- 01

"அய்யா பெரியவங்களே! ஊர்க் காரங்களே! அதாகப்பட்டது- நம்ம சடையத்தேவர் மகன் கட்டையனுக்கும் பெரியமூக்கி மக கருவாச்சிக்கும் ஒரு வெவகாரம் இருப்பதனால நாளைக்கு எட்டுப் பட்டறையும் அரசமரத்தடியில ஒண்ணு போல வந்து கூடணும்னு நாட்டாம சாட்டச்சொல்லீருக்காக.... நாட்டாம சாட்டச்சொல்லீருக்காக..." கிணிமிட்டி.... கிணிமிட்டி... கிணிமிட்டி....ங்கிற சத்தத்தோட சாட்டிக்கிட்டே போறான் தலையாரி.

புத்துக்குள்ள இருக்கிற பாம்புக பொதுக்குன்னு தலையத் தூக்கிப் பாக்கிற மாதிரி ஊரே அண்ணாந்து பாக்குது.

இது என்னாங்கடி கூத்து... கல்யாணமாகி வெள்ளியோட வெள்ளி எட்டு... சனி ஒம்போது..... ஞாயிறு பத்து.... திங்க பதினொண்ணு.... பதினோறு நாளுக்குள்ளாயா புருசன் பொண்டாட்டிக்குள்ள புத்தியழிஞ்சு போகும்?

இது பொருந்தாத சம்பந்தமப்பா. கட்டையன் கருவாச்சியக்கொண்டு கரைசேக்கவா போறான்? ஒரே கொடத்துக்குள்ள தவளையும் பாம்பும் தண்ணி குடிக்க முடியுமா?

அப்பவே எம் புத்திக்குள்ள கவுளி கத்துச்சு.

சடையத்தேவன் குடும்பத்துக்கும் பெரியமூக்கி குடும்பத்துக்கும் நாப்பது வருசப் பகையாச்சே; நல்லது கெட்டதுக்கே வாரதில்லயே; தண்ணி மண்ணி பொழகறதில்லையே; கட்டையன் கருவாச்சி கல்யாணத்துக்குப் பெறகாவது ரெண்டு குடும்பமும் கை நனைக்கட்டு மேன்னு தான் சாதிசனமெல்லாம் நெனச்சுச்சு; சாமி ஏன்னா நெனைக்குதுன்னு தெரியலையே!

தண்ணிக் கெணத்துல- அரசமரத்தடியில- ஊர்மந்தையில- ஒழவு காட்ல- இதே பேச்சாவே இருக்கு.

சொக்கத்தேவன்பட்டி சொக்கத் தேவன்பட்டின்னு அந்த ஊருக்குப் பேரு. அந்த ஊரு இருந்தாலும் இல்லாமப் போனாலும் இந்தியசர்க்காருக்கு ஒரு கவலையுமில்ல.

கரையான்களாக்கூடிப் புத்துக்கட்டிக்கிட்ட மாதிரி சனங்களாகக் கூடி ஆளுக்கொரு வீடு கட்டிக்கிட்டாக.

காரவீடு- கூரவீடு- ஓட்டுவீடு- தகர வீடு- குச்சுவீடு- குடுசுவீடுன்னு எண்ணி நூத்தி இருவது வீடுக.



அதுல தேவமாரு வீடு தொண்ணூறு. பத்தோ பன்னன்டோ நாயக்கமாரு வீடு. கவுண்டரு, ஆசாரி, வளவிக்காரச் செட்டியாரு வீடுக வகைக்கு ஒவ்வொண்ணு. சலவக்காரக்குடும்பம் ஒண்ணு; சவரக்காரக் குடும்பம் ஒண்ணு (இந்த ரெண்டு குடும்பமும் இல்லாட்டி அந்த ஊர்ல ரொம்ப மூஞ்சிக கல்யாணம் காட் சியே கண்ட்ருக்காதுக பாத்துக்குங்க) ஒரு கோடாங்கி வீடு; ஒரு பூசாரி வீடு. இப்படி இன்னுஞ் சில குடும்பங்க உதிரி உதிரியா. எண்ணிக்கையில ஒரு ஐந்நூறுக்குள்ள அடங்கும் ஆணும் பொண்ணும்.

ஆடு மாடுக நாய்க- கோழிக- பன்னிகளோட, அப்பப்ப கரட்டுலருந்து எறங்கி வந்து கெடையாட்டங் குட்டியவோ கோழிக் குஞ்சவோ துண்டாத் தூக்கிட்டு ஓடிப்போற நரிகளையுஞ் சேத்தா அந்த ஊருக்கு உரியதுன்னு முந்நூறு முந்நூத்தம்பது தேறும் சீவராசிக. *(தொடரும்)*

# அதிசய உலகம்

### *6 வயது கூகுள் பாய்*

அரியானாவைச் சேர்ந்த ஆறு வயது சிறுவன் ஒருவன் கூகிள் இணைய தளத்திற்கு இணையாக அன்றாட நிகழ்வுகள், அரசியல், பொது அறிவு குறித்த எந்த கேள்வியைக் கேட்டாலும் சற்றும் யோசிக்காமல், அடுத்த



விநாடியே மின்னல் வேகத்தில் பதில் அளிக்கிறான்.

அந்த சிறுவனின் பெயர் கௌடில்யா.

நாடுகளின் பெயர், மொழி, நிலப்பரப்பு, மலை, கடல், கிரகங்கள், மக்கள் தொகை என எந்த கேள்விகளுக்கும் அதிரடியாக பதில் அளித்து அசத்துகிறான்.

இதனால், இவனை **கூகுள் பாய்** என செல்லமாக அழைக்கின்றனர்.

இந்த 6 வயது சிறுனான கூகுள் பாய் புகழ்பெற்ற விஞ்ஞானி ஆல்பர்ட் ஐன்ஸ்டீனைப் போலவே அதீதமான ஐ.க்யூ லெவலைக் கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

# சமைப்போம் சுவைப்போம்

## *சவ்வரிசி போண்டா*



**தேவையான பொருட்கள்:-**

**சவ்வரிசி- 1 கப்**
**அரிசிமா- அரை கப்**
**புளிப்பான கெட்டித் தயிர்- 1 கப்**
**கடலைப் பருப்பு- 1 ஸ்பூன்**
**பொடியாக நறுக்கிய வெங்காயம்- 1/4 கப்**
**வட்டமாக நறுக்கிய பச்சை மிளகாய்- 2 ஸ்பூன்**
**உப்பு- தேவையான அளவு**
**எண்ணெய்- பொரித்தெடுப்பதற்கு**

**செய்முறை**

சவ்வரிசியைக் கழுவி தண்ணீரை முழுவதுமாக வடித்துவிடவும். புளிப்புத்தயிரை லேசாகக் கடைந்து உப்பு சேர்த்து சவ்வரிசியில் கலந்து மூடி வைக்கவும். 6 மணி நேரம் அப்படியே ஊற வைக்கவும்.

கடலைப்பருப்பை அரை மணி நேரம் தண்ணீரில் ஊற வைத்து தண்ணீரை வடிக்கவும். சவ்வரிசியில் ஊற வைத்த கடலைப்பருப்பு, வெங்காயம், அரிசி மா சேர்த்து கலக்கவும், சிறிது நீர் சேர்த்து பிசைந்து கொள்ளவும். உருண்டை பிடிக்குமளவிற்கு மா பக்குவம் இருக்க வேண்டும்.

பாத்திரத்தில் எண்ணெய் விட்டு சூடாக்கி சவ்வரிசிக் கலவையிலிருந்து உருண்டைகள் செய்து எண்ணெயில் போடவும். பொன்னிறமாக பொரிந்ததும் சூடாக பரிமாறவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மைலோகிண்ண காற்பந்தாட்டபோட்டி நாவாந்துறை சென்மேரிஸ் சம்பியன்

















மைலோ கிண்ணத்தை இரண்டாவது வருடமாக கைப்பற்றி சம்பியனாகியது நாவாந்துறை சென்.மேரிஸ்.

நெஸ்லே லங்கா நிறுவனத்தின் ஏற்பாட்டில் மைலோ கிண்ண காற்பந்தாட்டப் போட்டிகள் இடம் பெறுகின்றன.

இதில் இடம்பெற்ற போட்டிகளின் படி நேற்றுமுன்தினம் இடம் பெற்ற இறுதிப் போட்டியில் நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக் கழகமும் நவிண்டில் கலைமதி விளையாட்டுக்கழகமும்மோதின.

இறுதி வரை விறுவிறுப்பாக இடம்பெற்ற போட்டியில் நாவாந்துறை சென் மேரிஸ் விளையாட்டுக் கழகம் வெற்றி பெறு சம்பியனாகியது.

போட்டி ஆரம்பம் முதலே இரு அணிகளும் எதிரணிகளின் கோல் பரப்பை ஆக்கிரமித்தன.

இதன் காரணமாக போட்டியின் 9ஆவது நிமிடத்தில் தண்ட உதை மூலம் கிடைக்கப்பெற்ற சந்தர்ப்பத்தை நாவாந்துறை சென் மேரிஸ் விளையாட்டுக் கழக வீரன் ஜுட் சாதகமாகப் பயன்படுத்தி கோலாக்கினார்.

இதனால் 1:0 என நாவாந்துறை சென்மேரிஸ் விளையாட்டுக் கழகம் முன்னிலை வகிக்க போட்டி விறுவிறுப்பாக இடம்பெற்றது.

முதல் பாதியின் போது நாவாந்துறை சென் மேரிஸ் விளையாட்டுக் கழகம் 1:0 என முன்னிலை வகித்தது.

இரண்டாவது பாதியில் நவிண்டில் கலைமதி விளையாட்டுக் கழகம் நாவாந்துறை சென் மேரிஸ் விளையாட்டுக் கழகத்தின் கோல் பரப்பை முற்றுமுழுதாக ஆக்கிரமிக்க போட்டியின் 48ஆவது நிமிடத்தில் வலுப்பிரியன் மூலம் அதிரடியாக கோல் ஒன்றினைப் பெற்று போட்டியை 1:1 என சமநிலைப் படுத்த போட்டி மேலும் சூடுபிடித்தது.

இரு அணிகளும் மாறி மாறி எதிரணியின் கோல்பரப்பை ஆக்கிரமித்தன. வெற்றியாளர் யார் என தீர்க்கமான கோலொன்றிற்காக ரசிகர்கள் காத்திருக்கையில் போட்டியின் பிற்பகுதியில் 59ஆவது நிமிடத்தில் நாவாந்துறை சென் மேரிஸ் விளையாட்டுக் கழக வீரன் ஜக்ஷன் அதிரடியாக கோலைப் போட போட்டி நாவாந்துறை சென் மேரிஸ் விளையாட்டுக் கழகத்திடம் வந்தது.

போட்டி நிறைவடையும் வரை நவிண்டில் கலைமதி விளையாட்டுக் கழகம் கோல் போட முயற்சித்தும் நாவாந்துறை சென் மேரிஸ் விளையாட்டுக் கழகத்தின் தற்காப்பு ஆட்டம் காரணமாக கோலெதனையும் பெற முடியாமல் போக இறுதியில் 2:1 என்னும் கோல் கணக்கில் நாவாந்துறை சென் மேரிஸ் விளையாட்டுக் கழகம் இரண்டாவது வருடமாக சம்பியனாகி மைலோ கிண்ணத்தை தன்வசப்படுத்தியது.

மூன்றாமிடத்தை குருநகர் பாடும் மீன் விளையாட்டுக் கழகமும் நான்காமிடத்தை உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழகமும் பெற்றன.

போட்டியின் ஆட்ட நாயகனாக நாவாந் துறை சென் மேரிஸ் விளையாட்டுக் கழகத்தின் ஜுட்டும், சிறந்த கோல் காப்பாளராக நாவாந்துறை சென் மேரிஸ் விளையாட்டுக் கழகத்தின் சுதர்ஷனும் போட்டித் தொடரி சிறப்பாட்டக்காரனாக நாவாந்துறை சென் மேரிஸ் விளையாட்டுக் கழகத்தின் அன்ரன் சாள்ஸும் தெரிவானார்கள்.

இவர்களிற்கான பரிசில்களை பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்ட வடக்கு மாகாணசபை உறுப்பினரும் விளையாட்டு அமைச்சின் இணைப்பாளருமான இ.ஆர்னல்ட். நெஸ்லே லங்கா நிறுவனத்தில் விற்பனை மேம்படுத்தல அதிகாரி சஜீவவிக்ரமசிங்க ஆகியோர் வழங்கி வைத்தனர். (க-23)

## பாலிவுட்டில் களமிறங்கிய ஸ்ரீசாந்த்



இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் வேகப்பந்து வீச்சாளர் ஸ்ரீசாந்த். 'கேபரே' என்ற இந்திப் படத்தில் நடிக்கவுள்ளார்.

இவர் கடந்தாண்டு ஐபிஎல் போட்டியில் ஸ்பாட் பிக்சிங் சூதாட்டத்தில் ஈடுபட்டதாக கைது செய்யப்பட்டார். இதனால், ராஜஸ்தான் றோயல்ஸ் அணியைச் சேர்ந்த ஸ்ரீசாந்துக்கு, கிரிக்கெட் விளையாட ஆயுட்கால தடை விதிக்கப்பட்டது. இந்நிலையில், இவர் 'கேபரே" என்ற இந்திப் படம் ஒன்றில் அறிமுகமாகிறார். இப்படத்தில் மலையாள அறிவுரையாளர் கதாபாத்திரத்தில் ஸ்ரீசாந்த் நடிக்கிறார். கேபரே நடனம் குறித்த படமாகும்.

ஏற்கனவே, தொலைக்காட்சி நிகழ்ச்சியில் பிரமாதமாக நடனம் ஆடியதாக பாராட்டுகளைப் பெற்றவர் ஸ்ரீசாந்த்.


தற்போது நடனத்தோடு, நடிப் பாற்றலும் இருப்பதாலேயே ஸ்ரீசாந்த், நடிக்க ஒப்புக் கொண்டதாக இப்படத்தின் தயாரிப்பாளர் பூஜாபட் தெரிவித்துள்ளார். கிரிக்கெட் விளையாட தடை விதிக்கப்பட்டுள்ள நிலையில், சினிமாவில் அவர் அசத்துவார் என எதிர்பார்க்கப்படுகிறது. (க)

## இன்றைய போட்டி

மாகாண மட்ட ஆளுநர் கிண்ணத்திற்கான உதைபந்தாட்டப் போட்டிகள் இடம்பெற்று வருகின்றன.

இதில் வடமராட்சி லீக்கிற்கான போட்டிகள் இடம்பெற்று வருகின்றன. இப் போட்டிகள் அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெறுகின்றது. இன்று மாலை 3 மணிக்கு இடம் பெறவுள்ள லீக் போட்டியொன்றில் பிரிவு [illegible] கொலின்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து நியூட்டன் விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது. (க-23)

## புதிய சாதனை படைத்தார் மெஸ்ஸி



ஆர்ஜென்டீனா அணியின் நட்சத்திர வீரர் மெஸ்ஸி, லா லிகா லீக் காற்பந்து வரலாற்றில் அதிக கோல் அடித்த வீரர் என்ற சாதனையை படைத்துள்ளார்.

ஸ்பெயினின் லா லிகா லீக் காற்பந்து போட்டியில் பார்சிலோனா அணி 5-1 என்ற கோல் கணக் கில் செவில் அணியைத் தோற் கடித் தது.

இந்தப் போட்டியில் பார்சிலோனா வீரர் மெஸ்ஸி ஹட்ரிக் கோல் அடித்தார். இதன் மூலம் லா லிகா வர லாற்றில் அதிக கோலடித்தவர் (253 கோல்கள்) என்ற புதிய சாதனையை படைத்துள்ளார் மெஸ்ஸி.

தனது 289ஆவது ஆட்டத்தில் அவர் இந்த சாதனையை படைத்துள்ளார்.

முன்னதாக ஸ்பெயினின் டெல்மோ சரா 251 கோல்களை (278 ஆட்டம்) அடித்ததே சாதனையாக இருந்தது குறிப்பிடத்தக்கது. (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலேரியா தடை இயக்க ஊழியர்கள் நிரந்தர நியமனம்கோரி ஆர்ப்பாட்டம்

## யாழில் நேற்று இடம்பெற்றது

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்தில் ஒப்பந்த அடிப்படையில் சேவையாற்றி வருகின்ற மலேரியா தடை இயக்க ஊழியர்கள் நிரந்தர நியமனம் கோரி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இவ் ஆர்ப்பாட்டம் நேற்று முற்பகல் 10 மணியளவில் யாழ். பண்ணைப்பகுதியில் அமைந்துள்ளவட மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம் முன்பாக நடைபெற்றுள்ளது.

அமைய நாளாந்த ஒப்பந்த அடிப் படையிலான ஊழியர்களினை நிரந்தரமாக்குமாறு 25/2014 சுற்றறிக்கையொன்று வெளிவந்துள்ளது.

இச்சுற்றறிக்கையின் படி தங்களினையும் (மலேரியா தடுப்பு இயக்க ஊழியர்கள்) ஒப்பந்த அடிப்படையிலான ஊழியர்களாக கருதி நிரந்தர சேவைக்குள் உள்வாங்க வேண்டுமென கோரியே ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.



யாழ். மாவட்டத்தில் 13 பேரும் வடக்கு மாகாணம் முழுவதும் 67 பேரும் ஒப்பந்த அடிப்படையில் மலேரியா தடுப்பு ஊழியர்களாக கடந்த 4 வருடங்களுக்கு மேலாக பணியாற்றி வருகின்ற நிலையில் தமக்கான நிரந்தர நியமனத்தினைக் கோரி வடக்கு மாகா ணத்தினை சேர்ந்த அனைவரும் இவ் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்கள் மலேரியாவை ஒழிக்க பாடுபட்ட நாம் ஒப்பந்த அடிப்படையில் இன்று வேலை நிறுத்தப்பட்டுள்ள தருணம் எம்மை அதே சேவையில் உள்வாங்க முடியாதா? 25/2014 சுற்றறிக்கையில் எம்மையும் ஒப்பந்த அடிப்படையிலான ஊழியர்களாக கருணை காட்டமாட்டீர்களா? இத்தனை வருட சேவைக்கு இன்றாவது நிரந்தர தீர்வு கிடைக்குமா?

எம்மில் பலரும் 30 வயதினை தாண்டிவிட்டோம். இனி எம்மால் அரச சேவைக்குள் நுழைய முடியாது.

இன்று எங்கள் நிலை என்ன? என எழுதப்பட்ட பதாகைகளினை ஏந்தியிருந்தனர். இது தொடர்பில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்கள் கருத்து தெரிவிக்கையில்,

இத்தனை வருடங்களாக அரச சேவையாற்றி விட்டு ஒப்பந்த காலம் முடிவடைந்து விட்டது என கூறி நாம் வீட்டில் நிற்க முடியாது.

தற்போது வெளிவந்துள்ள சுற்றறிக்கையின் பிரகாரம் எம்மையும் ஒப்பந்த ஊழியர்களாக கருதி எமக்கும் நிரந்தர நியமனம் வழங்க அதிகாரிகள் நடவடிக்கையெடுக்க வேண்டும் என அவர்கள் மேலும் தெரிவித்தனர். (இ-4)


## நடமாடும் சேவை இன்று ஆரம்பம்

யாழ். வடமராட்சி கலிகை சந்தி கலாசார மண்டபத்தில் இன்று செவ்வாய்க்கிழமை காலை 9மணி தொடக்கம் பிற்பகல் 4 மணி வரை நடமாடும் சேவை நடைபெறவுள்ளது.

நெல்லியடி பொலிஸ் பொறுப்பதிகாரி சுமித் சி. பெரேரா தலைமையில் நடைபெறவுள்ள இந்நடமாடும் சேவையானது இன்று தொடக்கம் ஒரு மாத காலத்திற்கு நடைபெறவுள்ளது.

இதன்போது தேசிய அடையாள அட்டை ,கடவுச் சீட்டு என்பன பெற்றுக் கொடுக்கப்படவுள்ளதுடன் இரத்ததான முகாம் ஒன்றும் இடம்பெறவுள்ளது.

அத்துடன் சிறு வழக்குகள் தொடர்பான விசாரணைகளும் இடம் பெறவுள்ளதாக நடமாடும் சேவை ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (இ-7-60)




## பகிரங்க ஏல விற்பனை

மல்லாகம் மாவட்ட/ நீதவான் நீதிமன்றினால் பறிமுதல் செய்யப்பட்டதும் உரிமை கோரப்படாததுமான மோட்டார் சைக்கிள்களும் துவிச்சக்கரவண்டிகளும் எதிர்வரும் 29 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளன.

மேற்படி பொருட்களை அன்றைய தினம் அரை மணித்தியாலத்திற்கு முன்னர் பொதுமக்களின் பார்வைக்கு வைக்கப்படும் எனவும் ஏலத்தில் வாங்கப்படும் பொருட்களுக்கு உடன் பணம் செலுத்தி நீதிமன்ற வளவிலிருந்து அப்புறப்படுத்த வேண்டும் எனவும் பொருட்களை ஏலத்தில் கோருபவர்கள் தேசிய அடையாள அட்டையினை கொண்டு வர வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

## சாதாரணதரப்பரீட்சை அறிவுறுத்தல் கூட்டம்

2014ஆம் ஆண்டு க.பொ.த (சா/த) பரீட்சையில் கடமையாற்றும் இணைப்பு நிலைய அலுவலர்கள், உதவி இணைப்பு நிலைய அலுவலர்கள், மேற்பார்வையாளர்கள், உதவி மேற்பார்வையாளர்களுக்கான அறிவுறுத்தல் கூட்டம் யா/ வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலையில் எதிர்வரும் முதலாம் திகதி திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு இடம்பெறவுள்ளது. இதில் கோப்பாய் கோட்டம் தவிர்ந்த யாழ்ப்பாண வலயம், தீவக வலயம், தென்மராட்சி வலயம் ஆகியவற்றை உள்ளடக்கிய பிரதேசத்தில் தெரிவு செய்யப்பட்ட அலுவலர்கள் அனைவரும் மேற்படி கூட்டத்தில் கலந்து கொண்டால் மாத்திரமே பரீட்சைக் கடமைகளில் கடமையாற்ற முடியும் என்பதனால் தவறாது கலந்து கொள்ளுமாறு யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (இ-5)

# இளைஞர் குழு மோதலால் நாவாந்துறையில் பதற்றம்

## இராணுவம்,பொலிஸ் குவிப்பு

யாழ்.நாவாந்துறையில் இருபகுதியினருக்கு இடையில் ஏற்பட்ட குழு மோதலில் பலர் படுகாயங்களுக்குள்ளானதோடு பல வீடுகளும் சேதமாக்கப்பட்டுள்ளன.

நேற்று முன்தினமிரவு நடைபெற்ற இச்சம்பவம் நேற்றைய தினமும் வழமைக்கு திரும்பாததனால் பெருமளவிலான இராணுவமும் பொலிஸாரும் சம்பவ இடத்தில் குவிக்கப்பட்டிருந்தனர்.



யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் நேற்று முன்தினம் நடைபெற்ற உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியினை முடித்துக்கொண்டு திரும்பிய வேளையிலேயே இந்த மோதல் சம்பவம் வெடித்தது.

இதில் இருபகுதியினரும் பரஸ்பரம் மோதிக்கொண்டதோடு நாவாந்துறை சந்தைக்கு அருகாமையில் உள்ள 6 வீடுகள் மற்றும் கடைகள் என்பனவும் உடைக்கப்பட்டுள்ளன.

குறித்த பகுதியிலுள்ள வீதிகள் அனைத்தும் உடைந்த போத்தல்களினால் நிரம்பிக் காணப்பட்டதோடு அருகில் இருந்த பூங்காவின் மின் விளக்குகளும் அடித்து நொறுக்கப்பட்டிருந்தன.

இச்சம்பவத்தினால் நாவாந்துறை பெரும் களேபரமாக காட்சியளித்ததோடு நேற்றைய தினம் கடைகள் மற்றும் சந்தைகள் அனைத்தும் மூடப்பட்டும் காணப்பட்டன.

சம்பவ இடத்திற்கு இராணுவமும் பொலிஸாரும் குவிக்கப்பட்டு 24 மணி நேர பாதுகாப்பிற்கும் உட்படுத்தப்பட்டுள்ளது. (இ-4)

## ஆசிரியர் உள்ளீர்ப்பு கலந்துரையாடல்


ஆசிரியர் சேவைப் பிரமாணக் குறிப்பு உள்ளீர்ப்பு தொடர்பான கலந்துரையாடல் நாளை மறுதினம் வியாழக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்ப்பாண வலயக் கல்வி அலுவலக முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெறவுள்ளதால் யாழ்.வலயக் கல்வி அலுவலகத்திற்குட்பட்ட பாடசாலை அதிபர்கள் அனைவரையும் தவறாது பங்குபற்றுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (இ-5)











திசைகாட்டி குழுமத்தின் புதிய தலைவர் எஸ். சுபசீலனின் பதவியேற்பு விழா கடந்த சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ். ஆனைப்பந்தி பருத்தித்துறை வீதியில் அமைந்துள்ள திசைகாட்டி தலைமைப் பணிமனையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் [illegible] மீகாமன் தனியார் நிறுவன நிர்வாக இயக்குநர் திரு மதி எஸ். சுகந்தி கலந்து சிறப்பித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# CIMA UK புலமைப்பரிசில்

உயர்ந்த வேலைவாய்ப்பை வழங்கும் CIMA கற்கை நெறிக்கு தற்போது மிக உயர்ந்த புலமைப்பிரிசில் வழங்கப்படுகின்றது. 16 வயதிற்கு மேற்புட்ட எவரும் பயிலக்கூடிய இக்கற்கை நெறியை பல்கலைக்கழக அனுமதி பெற்றோர், பெறாதோர், தொழில்புரிவோர் சகலரும் உயர்ந்த தொழில் வாய்ப்பிற்காகவும் பதவி உயர்வு பெறும் வெளிநாட்டிற்கு குடியமரவும் என பயின்று வருகின்றனர். மேலும் தற்போது இக்கற்கை நெறிக்கு பதிபவர்கள் சி.ஐ.எம்.ஏ. நிறுவனத் திடமிருந்தும் எம்.சி.எஸ். நிறுவனத்திடமிருந்தும் மிக உயர்ந்த புலமைப்பரிசில்களை பெறுகின்றனர்.

சி.ஐ.எம்.ஏ. பிரித்தானிய நிறுவனமானது மாணவர்களுக்கு தற்போது உயர்ந்த புலமைப்பரிசிலினை வழங்குகின்றது. மாணவர்கள் 20 பவுண்ஸ் பதிவுக்கட்டணத்துடன் இம்மாதம் 30 வரை பதிவு செய்ய முடியும். 16 வயதிற்கு மேற்பட்ட யாவரும் மாணவர்களாக பதிவு செய்ய முடியும். மேலும் 2015 ஆம் ஆண்டிற்கான வருடாந்தக் கட்டணம் 103 பவுண்ஸ் கட்டணத்திலிருந்தும் விலக்களிக்கப்பட்டுள்ளது. பல்கலைக்கழக மாணவர்கள் தாங்கள் பல்கலைக் கழகத்தில் பயிலும் காலத்தில் வருடாந்தக் கட்டணத்தை செலுத்த வேண்டியதில்லை. கடந்த 14 வருடங்களாக பெரும் எண்ணிக்கையான சி.ஐ.எம்.ஏ. தகைமையாளர்களை உருவாக்கிய MCS நிறுவனம் தற்போது மாணவர்களின் கற்கை நெறிக்கட்டணத்தை 50 வீதத்தால் குறைத்துள்ளது. பதிவு செய்யும் மாணவர்களுக்கு புத்தகப்பை மற்றும் கற்றல் உபகரணங்களும் வழங்கப்படுகின்றன.

கற்கை நெறிகள் ஞாயிறு மட்டும் மற்றும் வார நாட்கள் விரைவுப்பிரிவு என இரு பிரிவுகளாக அனைத்து மட்டங்களுக்கும் நடைபெறுகின்றது. பரீட்சைக்கட்டணங்களின் ஒரு பகுதியை தொண்டு நிறுவனங்களின் ஊடாக வழங்க ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும் சி.எம். ஏ. எனப்படும் உள்ளூர் பரீட்சைக்கு மிகக் குறைந்த கட்டணத்தில் தோற்றுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. சி.ஐ.எம்.ஏ. அனைத்து மட்டப் பரீட்சைகளையும் தற்போது யாழ். எம்.சி.எஸ். நிறுவனத்திலேயே தோற்ற முடியும்.

மேற்படி சலுகைகளிற்கு விண்ணப்பிக்க விரும்பும் மாணவர்கள் தமது முழுப்பெயர், மாவட்டம் என்பவற்றை உடன் 077 239 5895 என்ற இலக்கத்திற்கு எஸ்.எம்.எஸ். செய்யவும்.

# வெளிவாரிப் பட்டப்படிப்பு கொழும்பு பல்கலைக்கழகம்

இலங்கையின் முன்னணிப் பல்கலைக்கழகமான கொழும்பு பல்கலைக்கழகத்தின் தகவல் தொழில்நுட்ப பட்டக்கற்கை நெறி இதுவாகும். க.பொ.த. (சா.த) சித்தியடைந்த எவரும் இப்பட்டக்கற்கை நெறியை பயில முடியும். ஆனால் பல்கலைக்கழக அனுமதி கிடைக்காத மாணவர்கள் மட்டுமன்றி பல்கலைக்கழக மாணவர்கள், உயர் தொழில்நுட்ப மாணவர்கள், தொழில் புரிவோர் அனைவரும் இக்கற்கை நெறியை பயின்று வருகின்றனர். சர்வதேச தரப்படுத்தலின் உயர்ந்த இடத்தில் இருக்கும் இக்கற்கை நெறியை வெளிநாட்டு மாணவர்களும் பயின்று வருகின்றனர்.

முதற்கட்டத்தை நிறைவு செய்ததும் தகவல் தொழில்நுட்ப டிப்ளோமா தொடர்ந்து உயர் டிப்ளோமா டிகிறி என்பனவும் வழங்கப்படுகின்றது. கற்கை நெறியை முழுமை செய்தோர் அரச நியமனங்களிலும் உள்வாங்கப்படுவது மட்டுமல்லாமல் பல்தேசிய மென்பொருள் தயாரிப்பு நிறுவனங்களிலும் உயர்ந்த சம்பளத்துடன் உள்வாங்கப்படுகின்றனர்.


மிகக் குறைந்த கட்டணத்தில் இக்கற்கை நெறியைப் பயில முடியும் என்பது மாணவர்களுக்கு கிடைத்த மிகப்பெரிய சந்தர்ப்பமாகும். முதலாம் அரையாண்டிற்கான கட்டணம் 18000 ரூபா மாத்திரமே அறவிடப்படுகின்றது.

கற்கை நெறியொன்றிக்கு கட்டணம் செலுத்தும் மாணவர்கள் CIMA Web Design Ms office English Hardware Networking அனைத்து கற்கைநெறிகளையும் மேலதிக கட்டணமின்றி பயில முடியும். மாணவர்கள் பல்கலை அனுமதி கிடைக்கும் வரையான காலத்தை பயனுள்ளதாக மாற்றுவதோடு மேலும் 2 ஆண்டுகளில் தொழில் புரியும் போதே தமது டிகிறி கற்கை நெறியையும் முழுமைபெற முடியும். சிறப்பான பெறுபேற்றுக்காக கொழும்பு பல்கலைக் கழக விருதினை வென்ற MCS நிறுவனம் மாணவர்களின் நலன் கருதி வார, வார இறுதி என இரு பிரிவுகளை நடத்துகின்றது. புலமைப்பரிசிலிற்கு விண்ணப்பிக்க விரும்புவோர். தமது முழுப்பெயர், மாவட்டம் என்பவற்றை உடன் 077 2395895 என்ற இலக்கத்திற்கு எஸ்.எம்.எஸ். செய்யவும்.

# கணனிப் பொறியியலாளர் USA

உயர்ந்த சம்பளத்துடன் கூடிய வெளிநாட்டு தொழில் அனுமதிக்கானது. கற்பதற்கு வயதுக்கட்டுப்பாடு, வேறு அடிப்படைத் தகைமைகள் எதுவும் இல்லை. இதனால் இக்கற்கை நெறியை வெளிநாடு செல்ல விரும்புவோர் பல்கலைக்கழக மாணவர்கள் மட்டுமன்றி பாடசாலை மாணவர்களும் பயின்று வருகின்றனர்.

Microsoft, Cisco, Oracle, Red hat நிறு வனங்களினால் கற்கைநெறிகள் நடத்தப்பட்டு பரீட்சிக்கப்பட்டு சான்றிதழ்களும் அங்கத்துவமும் வழங்கப்படுகின்றது. கற்கைநெறியை முழுமை செய்த மாணவர்கள் BCS IEEE தகைமைகளையும் பெறுகின்றனர். வெளிநாடுகளில் உயர்ந்த பரீட்சைக்கட்டணங்களை உடைய மேற்படி கற்கை நெறிகளுக்கு இந்நிறுவனங்கள் எம்நாட்டு பரீட்சார்த்திகளுக்கு குறைந்த பரீட்சைக்கட்டணத்தையே தற்போது அறவிடுகின்றது. பரீட்சைக்கட்டணங்களின் ஒரு பகுதியை ICTA அமைப்பு வழங்குகின்றது. வெளிநாடுகளிலும் தலைநகரிலும் மிக உயர்ந்த கட்டணங்களை உடைய மேற்படி கற்கை நெறிகளுக்கு MCS நிறுவனமானது சேவை நோக்குடன் மிகக் குறைந்த கட்டணத்தை அறவிடுகின்றது. மேலும் இதன் முதலாவது கட்டத்தை பயிலும் மாணவர்கள் நிறுவனத்தின் ஏனைய கற்கை நெறிகளான BIT CIMA கற்கை நெறிகளையும் கற்கை நெறிக்கட்டணமின்றி பயில முடியும். 26 ஆம் திகதிக்கு முன்னர் பதிவு செய்யும் மாணவர்கள் பரீட்சைக்கட்டணமொன்றை புலமைப் பரிசிலாக பெற முடியும். ஆர்வமுள்ள மாணவர்கள் தமது முழுப்பெயர், பிறந்த திகதி என்பவற்றை 077 2395 895 என்ற இலக்கத்திற்கு உடன் எஸ்.எம்.எஸ். செய்யவும்.



**புலமைப்பரிசிலிற்கான வினா?**

?ற்கு பொருத்தமான எண் யாது?

Type<Name><ans> & send to 772395895

அனைத்துக்கற்கைநெறிக்குமான விண்ணப்ப முடிவுதிகதி 26 நவம்பர்

**MCS** யாழ் பல்கலை அருகில் (சி- 9168)

**O/L/A/L ICT, AL -TechSub**
புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன

# புனரமைப்பு வேலைத்திட்டம் 10 வருடத்தின் பின் ஆரம்பம்

(தெல்லிப்பழை)

யாழ். சுழிபுரம் மேற்கு புளியந்துறை மயான மண்டபத்திற்கான புனரமைப்பு வேலைத் திட்டங்கள் 10 வருடங்களுக்கு பின்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அங்குள்ள மக்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த மயானமானது கடந்த 2004 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 26 ஆம் திகதி ஏற்பட்ட சுனாமி பேரழிவினால் அழிக்கப்பட்டது. இதன் பின்பு எந்தவொரு அமைப்புக்களோ அதிகாரிகளோ இது தொடர்பில் கவனமும் செலுத்த வில்லை.

இதனைக் கருத்தில் கொண்ட அப்பிரதேச மக்கள் மயான மண்டபத்தினை புனரமைத்து தரும்படி உரியவர்களிடம் வேண்டுகோள்களை விடுத்திருந்தனர்.

இந்நிலையில் வலி. மேற்கு பிரதேச சபை செயலாளர் எஸ்.புத்திர சிகாமணி மயான புனரமைப்புக்காக 2 1/2 இலட்சம் ரூபா வினை கொடுத்துள்ளார்.

இதனையடுத்து மயான மண்டபம் புனரமைப்பிற்கான வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

சுனாமிப் பேரலை அழிவு வந்து 10 வருடங்கள் கடந்துள்ள நிலையில் இப்புனரமைப்பு இடம்பெறுகின்றது.

அத்துடன் மயான மண்டபமும் வீதியும் சுழிபுரம் மேற்கு குகன் குலச் சங்கத்தின் ஏற்பாட்டில் சிரமதானப் பணிக்கு உட்படுத்தப் பட்டுள்ளது.

குறித்த வீதியானது சுனாமிப் பேரழிவினால் பாதிக்கப்பட்ட பின்பு இரண்டு தடவைகள் சிமதானத்திற்கு உட்படுத்தப்பட்டது.

அதன் பின்பு அவ்வீதியானது சிரமதானம் இன்றி கவனிப்பாரன்றி கைவிடப்பட்ட நிலையில் காணப்பட்டு வந்தது.

இதனையடுத்து வீதியானது மக்கள் பயணிக்க முடியாதளவிற்கு சேதமடைந்ததுடன் வீதியின் இரு மருங்கிலும் உள்ள மரங்கள் ஓங்கி வளர்ந்து பற்றைகளாக காணப்பட்டன.

இதனால் அவ்வீதியால் பயணிப்போர் பல்வேறு இடையூறுகளை தாண்டி தினமும் அவ்வீதியூடாக சென்று வந்தனர்.

இது சம்பந்தமாக உரியவர்களிடம் தெரிவித்திருந்தும் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

இதனைக் கருத்திற் கொண்ட குகன் குலச் சங்கம் இவ்வீதியினை சிரமதானம் செய்ய ஆரம்பித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (இ-7-28)

# கைதான மீனவர்களை விடுவிக்க விரைந்து நடவடிக்கை எடுக்கவும்

இலங்கை சிறைகளில் வாடும் தமிழக மனவர்களையும், அவர்களது படகுகளையும் மீட்க நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி பிரதமர் மோடிக்கு கடிதம் எழுதியுள்ள தமிழக முதல்வர் ஓ. பன்னீர்செல்வம், தூக்கு தண்டனை பெற்ற 5 தமிழக மீனவர்களை மீட்க தமிழக அரசின் வலியுறுத்தலை ஏற்று தக்க நடவடிக்கை எடுத்ததற்கு நன்றியையும் தெரிவித்துள்ளார்.

இது குறித்து பன் னீர்செல்வம் எழுதியுள்ள கடிதத்தில், இலங்கையில் ஏற் கனவே 24 தமிழக மீனவர்கள் சிறை களில் அடைக்கப்பட்டுள்ள நிலையில், தற்போது மேலும் 3 விசைப் படகுகளில் சென்ற 14 தமிழக மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மொத்தமுள்ள 38 தமிழக மீனவர்களையும், இலங்கை வசம் உள்ள 78 படகுகளையும் விடுவிக்க பிரதமர் மோடி உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார்.

மேலும், இலங்கையில் தூக்கு தண்டனை விதிக்கப்பட்ட 5 தமிழக மீனவர்கள் பத்திரமாக நாடு திரும்ப தமிழக அரசு விடுத்த வலியுறுத்தலை ஏற்று தேவையான நடவடிக்கைகளை தகுந்த நேரத்தில் எடுத்து அவர்களை இந்தியா கொண்டு வர உதவிய மோடிக்கு நன்றியை தெரிவித்துக் கொள்வதாகவும் முதல்வர் ஓ. பன்னீர் செல்வம் மேலும் தெரிவித்தார். (இ-5)


கல்யாண மாலை

இவர்களுக்கு மணமகள் தேவை

| |
|---|
| பிறப்பு: 1977 இந்து<br>நட்சத்திரம்: விசாகம்<br>கி.பா: 46 1/2 சூரிசெவ் 8இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: BA/ஆசிரியர்<br>தொ.இ: B/773 |
| பிறப்பு: 1966 இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>கி.பா: 65<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: A/L/ சொந்த தொழில்<br>தொ.இ: B/3813 |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை<br>கி.பா: 55 செவ் 7இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: BSC/ LOW/ சட்டத்தரணி<br>தொ.இ: B/3814 |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: உத்தரட்டாதி<br>கி.பா: 46 செவ் 7 இல்<br>உயரம்: 180cm<br>தகைமை/தொழில்: MSC/ பொறியியலாளர்<br>தொ.இ: B/3816 |

இவர்களுக்கு மணமகன் தேவை

| |
|---|
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: பரணி<br>கி.பா: 47 1/2செவ் 8 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: BA/ அபிவிருத்தி உத்தியோகத்தர்<br>தொ.இ: G/3634 |
| பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம்<br>கி.பா: 33 1/2 செவ் 1 இல்உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: BA/ முகாமைத்துவ உதவியாளர்<br>தொ.இ: G/3827 |
| பிறப்பு: 1978 இந்து<br>நட்சத்திரம்: மூலம்<br>கி.பா: 58 சூரிசெவ் 8இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: A/L<br>தொ.இ: G/3831 |
| பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்; விசாகம்<br>கி.பா: 14<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: A/L/ முகாமைத்துவ உதவியாளர்<br>தொ.இ: G/3834 |

கல்யாண மாலை
(சர்வதேச் திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொது வேட்பாளருடன் விரைவில் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளோம்

## அத்துரலிய ரத்னதேரர் அறிவிப்பு

(கொழும்பு)

**ஆட்சி மாற்றத்தினை ஏற்படுத்த பொது வேட்பாளராக களமிறங்கியுள்ள முன்னாள் அமைச்சர் மைத்திரிபால சிறிசேனவிற்கு பொது எதிரணியில் நின்று உதவ தயார். வெகு விரைவில் பொது வேட்பாளருடன் பேச்சுவார்த்தை நடத்துவோம் எனத் தெரிவிக்கும் அத்துரலிய ரத்னதேரர் ஜனாதிபதியின் சர்வாதிகாரப் போக்கே அரசாங்கத்தில் இருந்து பலர் வெளியேறக் காரணமாகி விட்டது எனவும் தெரிவித்துள்ளார்.**

பொது வேட்பாளருக்கு ஜாதிக ஹெல உறுமய ஆதரவு வழங்கத் தயாரா? என வினவிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், அரசாங்கத்தின் பலமானதும் நம்பிக்கையான உறுப்பினர்களும் இன்று வெளியேறிக் கொண்டிருக்கின்றனர். நாங்கள் எமது அதிருப்தியினை வெளிப்படுத்தவும் இன்று அரசாங்கத்தின் முக்கிய உறுப்பினர்கள் அரசைவிட்டு வெளியேறவும் அரசாங்கத்தில் இருக்கும் ஒரு சிலரின் தன்னிச்சையான செயற்பாடுகளே காரணம். இன்று நாங்கள் எவரும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மீதோ அல்லது அவரின் குடும்பத்தின் மீதோ தனிப்பட்ட முறையில் எவ்வித த்திலும் முரண்படவில்லை. யுத்தத்தினை வெற்றிகொண்ட ஒரு சிறந்த தலைவர். அபிவிருத்தி செயற்பாடுகளிலும் அரசு நல்ல முன்னேற்றத்தினை கண்டுள்ளது. ஆனால், கடந்த காலத்தின் சூழ்நிலைகளோ போராட்டமான காலமோ இன்று இல்லை. எனவே இன்று அனைத்து தரப்பினரினதும் ஒரே எதிர்பார்ப்பு நிறைவேற்று ஜனாதிபதி முறைமையினை நீக்க வேண்டும் என்பதுவே. அதனை இந்த அரசாங்கம் மேற்கொள்ளாவிடின் முரண்படுவோம் என்பதனை ஆரம்பத்தில் இருந்தே நாங்கள் ஜனாதிபதிக்கும் அரசாங்கத்திற்கும் எச்சரித்து வந்தோம்.

மக்களின் வரப்பிரசாதத்திலும் அவர்களின் ஆதரவிலுமே எவரேனும் ஆட்சியினை அமைக்க முடியும். அதற்கு அப்பால் தமது சுய விருப்பத்தில் சர்வாதிகாரமாகவும் இராணுவ மயப்படுத்தப்படும் ஆட்சியினை கொண்டு செல்ல முயற்சிப்பதன் காரணமாகவுமே இன்று அரசாங்கத்தின் முக்கிய தூண்கள் உடைந்து வெளியேறுகின்றன. இப்போது அரசாங்கம் பலவீனமடைந்து விட்டது என்பதே உண்மை. எதிர்வரும் காலத்தில் தேர்தலுக்கு முன்னர் இன்னும் பல மாற்றங்கள் ஏற்படலாம்.

நாட்டில் அதிகாரப் பகிர்வினை மேற்கொண்டு அரசியல் மாற்றம் ஒன்றினை ஏற்படுத்த பொது வேட்பாளராக களமிறங்கியுள்ள மைதிரிபால சிறிசேனவிற்கு ஆதரவு வழங்க பொது எதிரணியில் நின்றும் தூய்மைக்கான நாளைய அமைப்பின் சார்பாகவும் ஜாதிக ஹெல உறுமய கட்சியாகவும் துணை நிற்போம். அதேபோல் சகல எதிர்க்கட்சிகளையும் ஒன்றிணைத்த பொது எதிரணியிலும் கலந்து கொள்ளத் தயாராக உள்ளோம். மேலும், ஜாதிக ஹெல உறுமயவின் மத்திய குழுக் கூட்டத்தில் கலந்தாலோசித்து எமது தீர்மானத்தினை வெளிப்படுத்துவோம். அத்தோடு பொது வேட்பாளரையும் கலந்தாலோசித்து எமது கொள்கைத் திட்டங்கள் தொடர்பில் இரு தரப்புடனும் இணக்கப்பாட்டினை ஏற்படுத்தவும் தீர்மானித்துள்ளோம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

# இனி ஆளும் கட்சியை விட்டு யாரும் செல்ல மாட்டார்கள்

முன்னாள் பொதுச் செயலாளர் மைத்திரிபால சிறிசேனபோல் இனி எவரும் சதிகளில் சிக்கி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை விட்டு செல்ல மாட்டார்கள் என மின்சக்தி எரிசக்தி அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மைத்திரிபால சிறிசேன கட்சியைக் காட்டிக் கொடுத்துள்ளது மட்டுமல்ல ரணில் விக்ரமசிங்கவை அதிகாரத்திற்கு கொண்டு வருவதில் பகடைக்காய் மாத்திரமே என அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி, சுட்டிக்காட்டினார்.

மேலும் இம்முறையும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ 25 இலட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் பெரும் வெற்றி பெற்று மீண்டும் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்படுவார் எனவும் தெரிவித்தார். (இ-5)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 100 | 100 | 100 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 100 | 110 |
| பச்சைமிளகாய் | 150 | 160 | 160 | 180 |
| தக்காளி | 200 | 210 | 150 | 150 |
| மரவள்ளிக் கிழங்கு | 30 | 40 | 40 | 50 |
| கோவா | 120 | 100 | 120 | 120 |
| கரட் | 200 | 150 | 140 | 200 |
| பூசணி | 40 | 40 | 50 | 50 |
| புடோல் | 60 | 80 | 70 | 80 |
| வாழைக்காய் | 60 | 80 | 80 | 80 |
| சின்ன வெங்காயம் | 120 | 100 | 110 | 80-120 |
| பெரிய வெங்காயம் | 100 | 120 | 120 | 100 |
| பாகற்காய் | 200 | 180 | 160 | 160 |
| வெண்டிக்காய் | 100 | 80 | 100 | 80 |
| கருணைக் கிழங்கு | 60 | 60 | 70 | 80 |
| பயற்றங்காய் | 160 | 200 | 150 | 120 |
| லீக்ஸ் | 250 | 220 | 160 | 240 |
| பீற்றூட் | 150 | 140 | 130 | 160 |
| கறிமிளகாய் | 200 | 200 | 200 | 200 |
| முருங்கைக்காய் | 150 | 250 | 280 | 160 |
| போஞ்சி | 150 | 140 | 180 | 100 |
| கத்தரிதம்புள்ள | 50 | 80 | 70 | 100 |
| கீரை - 1 பிடி | 20 | 30 | 30 | 30 |
| தேசிக்காய் | 120 | 160 | 140 | 140 |
| தேங்காய் (ஒன்று) | 25-50 | 50 | 40 | 35-40 |
| இராசவள்ளி | — | 140 | - | — |

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 203

டொறின் மன்மதநாயகம்




ராகுலன் பாலா




உடுப்பிட்டி சுதர்சன்




சக்தி வேல்




சிவா சக்தி




இராசி என்கின்ற இராமநாதன் சிந்துஜன்




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப்பரீட்சை-2014
# மாதிரி வினாத்தாள்- கிழக்கு மாகாணம்

## கணிதம் II

## 2.30 மணித்தியாலயம்

✦இவ் வினாப்பத்திரம் இரு பகுதிகளைக் கொண்டது. ஒவ்வொரு பகுதியிலிருந்தும் 5 வினாக்களை தெரிவு செய்து மொத்தமாக 10 வினாக்களுக்கு விடையளிக்கவும்.

✦ $r$ ஆரையுடைய வட்டம் ஒன்றினது சுற்றளவு= $2\pi r$, பரப்பு= $\pi r^2$

✦ $r$ ஆரையும் $h$ உயரமும் கொண்ட உருளையின் வளைமேற்பரப்பு= $2\pi rh$, மொத்த மேற்பரப்பு = $2\pi r^{2+}\ 2\pi rh$, கனவளவு= $\pi r^2h$

### பகுதி- IIA


01. A என்பவர் ரூ. 30, 000 இனை 10% கூட்டு வட்டிக்கு முதலீடு செய்கின்றார்.

1. 3 வருடங்களின் பின்னர் அவருக்கு கிடைக்கும் கூட்டு வட்டி யாது?

2. அவர் மேற்குறிப்பிட்பட்ட தொகையினை 12% பங்கிலாபம் தரும் 10/= பங்குகளில் 12/= வீதப்படி முதலீடு செய்தால் 3 வருடங்களில் அவருக்கு கிடைக்கும் பங்கிலாபம்.(வருமானம்) யாது?


3. இவ்விரு முதலீடுகளிலும் எந்த முதலீடு இலாபகரமானது எனக் காண்க?

02.




a) A,B,C என்பன முறையே 1cm, 2cm,4 cm ஆரைகளையும் 7cm உயரமும் கொண்ட 3 உருளைகளாகும். இவற்றின் கொள்ளளவுக்கிடையேயான விகிதம் யாது?

b) 88cm,30cm பரிமாணங்களைக் கொண்ட ஒரு செவ்வக வடிவான உலோகத் தட்டினைப் பயன்படுத்தி 30 cm உயரமான ஒரு உருளை படத்திற்காட்டியவாறு செய்யப்பட்டுள்ளது.




1. உருளையின் ஆரை யாது?

2. உருளையின் வளைமேற்பரப்பைக் காண்க.

3. இவ்வுருளையின் இரு திறந்த மேற்பரப்புகளும் மூடப்பட்டு பெறப்படும் மொத்த மேற்பரப்பளவு யாது?

இவ் உருளையானது 18.5l நீரை கொள்ளக்கூடியது எனக் குறிப்பிடுகின்றார்.

இக்கூற்று உண்மை என நீர் ஏற்றுக் கொள்கின்றீரா? காரணம் தருக?

03. a. 1. காரணிப்படுத்துக $4ab^2-a^3$

ii) $2^4 \times 7^4 = 784$ எனின் $\sqrt{7.84}$ என்பதன் பெறுமதி யாது?

பெறுமானங் காண்க.

i) $32^{-2/5} \div 125^{2/3}$

ii) $\frac{1}{2}\lg 9 + 2\lg 6 - 3\lg 3 + 2\lg 5$

04. 1. கவராயம், நேர்விளிம்பு என்பவற்றை மாத்திரம் பயன்படுத்தியும் அமைப்புக் கோடுகளை தெளிவாகக் காட்டியும் பின்வரும் தரவுகளுக்கமைய சரிவகம் ABCD ஐ அமைக்க.


ABCD ஒரு சரிவகம் AD//BC, BC= 8cm, AB= AD=6 cm $A\hat{B}C=60^0$

2. A யிலிருந்து BC யிற்கான செங்குத்தினைக் அமைக்க.

3. சரிவகம் ABCD இன் பரப்பளவினைக் காண்க.

05. O மையமாகவுடைய இரு ஒரு மைய வட்டங்களின் ஆரைகள் முறையே 3.5cm, 7cm ஆகும்.

$A\hat{O}B = 60°$





1. வில் AB யின் நீளம் யாது?


2. நிழற்படுத்தப்பட்ட பகுதி ABCD இன் சுற்றளவு யாது?

3. ஆரைச்சிறை AOB இன் பரப்பளவு யாது?

4. நிழற்றப்பட்ட பகுதி ABCD இன் பரப்பளவு $\frac{49\pi^2}{8}$ எனக் காட்டுக.

06.a) △ABC யின் P,Q என்பன முறையே AB,AC என்பவற்றின் நடுப்புள்ளிகளாகும். PQ,BC என்வற்றிற் கிடையேயான இரு தொடர்புகளை எழுதுக.




b. இணைகரம் ABCD இல் AC யிற்குச் சமாந்தரமாக BC யினூடு வரையப்படும் கோடு நீட்டப்பட்ட DC ஐ E இல் சந்திக்கின்றது. AE,BC என்பன X இல் இடைவெட்டுகின்றன. AC,BD என்பன Y இல் இடை வெட்டுகின்றன. எனின் XY= 1/4 DE என நிறுவுக.

### பகுதி- IIB

07.a) $A=\pi r^2$

1. மேலுள்ள சமன்பாட்டின் r ஐ எழுவாயாக மாற்றுக.

2. $\pi= 3.142$, $A= 64.47cm^2$ எனின் மடக்கை வாய்ப்பாட்டைப் பயன்படுத்தி r இன் பெறுமதியை இருதசம தானங்கட்டு திருத்தமாகக் காண்க.

b. என்னிடம் ரூ. 2 நாணயங்களும் ரூ 5 நாணயங்களும் உண்டு. மொத்த நாணயக் குற்றிகளின் எண்ணிக்கை 50 ஆகும். பணத்தின் மொத்தப் பெறுமதி ரூ 160 எனின் ஒவ்வொரு நாணயங்களின் எண்ணிக்கையும் வெவ்வேறாகக் காண்க.

08. 1. 1,8,15......... என்ற கூட்டற் தொடரின் 11 ஆம் உறுப்பு யாது?

2. 21, 18, 15......... என்ற கூட்டற் தொடரின் -12 என்பது எத்தனையாம் உறுப்பு?

3. 2X,5X ஆகிய இரு எண்களின் கூட்டலிடை 10.5 எனின் X இன் பெறுமதி யாது?

4. 10 இற்கும் 80 இற்குமிடையில் எத்தனை 3 ஆல் வகுபடும் எண்கள் உள்ளன எனக் காண்க. அவற்றின் கூட்டுத் தொகையையும் காண்க.

09. $y=x^2+2$ என்ற வரைபினை வரைவதற்கான பூரணமற்ற அட்டவணையொன்று கீழே தரப்படுகின்றது?

| $x$ | -3 | -2 | -1 | 0 | 1 | 2 | 3 |
|---|---|---|---|---|---|---|---|
| $y$ | ....... | 6 | 3 | 2 | 3 | ....... | 11 |

1. அட்டவணையைப் பூரணப்படுத்துக.

2. X அச்சில் 10 சிறிய பிரிவுகளை 1 அலகு ஆகவும் y அச்சில் 10 சிறிய பிரிவுகளை 1 அலகுகளாகவும் கொண்டு தரப்பட்ட வரைபினை வரைக.

வரைபினைப் பயன்படுத்தி பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.


3. வரைபிற்கான சமச்சீர் அச்சினை வரைந்து காட்டி அதன் சமன்பாட்டையும் எழுதுக.

4. திரும்பற் புள்ளியின் ஆள்கூறுகளை எழுதுக.

5. X இன் எப்பெறுமானங்கட்கு சார்பு பூச்சியமாகும்.

6. $y=x^2+2$ என்ற சார்பின் சமச்சீர் அச்சின் சமன்பாட்டையும் எழுதுக.

10. a) தரப்பட்ட உருவில்.





1. ஒருங்கிசையும் முக்கோணச் சோடிகளைக் குறிப்பிட்டு அவை ஒருங்கிசையும் நிபந்தனையையும் எழுதுக.

2. $B\hat{C}D = E\hat{D}C$ என நிறுவுக.

3. BC//AD ஆயும் $C\hat{A}D = 30°$ ஆயும் இருப்பின் $B\hat{C}D$ இன் பெறுமதி யாது?

b. இணைகரம் ABCD இல் BE என்பது $A\hat{B}C$ இன் இரு கூறாக்கி $B\hat{C}E = 100°$ எனின் $B\hat{E}D$ இன் பருமனைக் காண்க.





11) (a) $Sin\,30°, Sin\,60°, Cos\,30°, Cos\,60°, Sin\,90°$, என்பவற்றின் பெறுமதிகளைப் பயன்படுத்தி பின்வருவனவற்றை வாய்ப்புப் பார்க்க.

i) $Sin\,90° = Sin\,30°\ Cos\,60° + Cos\,30°\ Sin\,60°$

(b) i) $\tan\Theta = \frac{1}{3}$ எனின் $Sin\,\theta, Cos\theta$ என்பவற்றின் பெறுமதிகளைக் கணிக்க.

ii) தரப்பட்ட உருவிலுள்ள தரவுகளைப் பயன்படுத்தி AP யின் பெறுமதியைக் காண்க.




12. ஒரு பரீட்சையில் 40 பிள்ளைகள் பெற்ற புள்ளிகள் அடங்கிய மீடிறன் பரம்பலொன்று கீழே தரப்படுகின்றது.

| வகுப்பாயிடை | 0 - 10 | 11 - 20 | 21 - 30 | 31 - 40 | 41 - 50 | 51 - 60 | 61 - 70 | 71 - 80 | 81 - 90 | 91 - 100 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| மீடிறன் | 01 | 03 | 04 | 05 | 08 | 07 | 05 | 04 | 02 | 01 |

1. பரம்பலின் ஆகார வகுப்பு யாது?

2. ஆகார வகுப்பின் நடுப் பெறுமானத்தை உத்தேச இடையாகக் கொண்டு பரம்பலின் உண்மை இடையை இருதசம தானங்கட்கு திருத்தமாகக் காண்க?

3. இம் மாணவர்களுள் இடைப்புள்ளியிலும் அதிகமான புள்ளிகளைப் பெற்றோர் மொத்த மாணவர்களின் என்ன சதவீதம்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனது பாதுகாப்பு தொடர்பில் பதற்றமடைய தேவையில்லை

## மைத்திரி மக்களுக்கு அறிவுரை

(கொழும்பு)

**ஆளும்கட்சியில் என்னுடன் இருந்தவர்களில் பலரின் பாதுகாப்பு வாபஸ் பெறப்பட்டுள்ளது என்றாலும் அது குறித்து பதற்றமடைய தேவையில்லை. என்னை மக்கள் பாதுகாப்பர் என்று பொது எதிரணியின் ஜனாதிபதி வேட்பாளரான மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார். நான், மக்களுடன் இருக்கின்றேன். யார் இருந்தாலும் இல்லாவிட்டாலும் மக்கள் என்னை பாதுகாப்பர் என்றும் அவர் தெரிவித்தார்.**



நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை கோட்டை நாகவிகாரைக்கு சென்ற பொது எதிரணியின் ஜனாதிபதி வேட்பாளர் மைத்திரிபால சிறிசேன குழுவினர், விகாராதிபதி மாதுலுவாவே சோபித தேரரை சந்தித்து கலந்துரையாடினர். இதன் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசாங்கத் தரப்பில் இருந்த போது எமக்கு விசேட பாதுகாப்புக்கள் வழங்கப்பட்டன.

அத்தோடு என்னுடன் அரசிலிருந்து பிரிந்து வந்தவர்களின் பாதுகாப்பையும் மகிந்த அரசு வாபஸ் பெற்றுள்ளது. இந்தப் பாதுகாப்பு நடவடிக்கைகள் வாபஸ் பெறப்பட்டமை தொடர்பில் யாரும் கலக்கமடையத் தேவையில்லை. நானும் பயம் கொள்ளவில்லை என அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை கண்டிக்கு விஜயம் செய்யவுள்ள அவர் ஸ்ரீ தலதா மாளிகையில் விசேட வழிபாடுகளை முடித்துக்கொண்டு, அஸ்கிரிய மற்றும் மல்வத்து மகாநாயக்கர்களையும் சந்தித்து ஆசீர்வாதம் பெற்றுக்கொள்ளவுள்ளார்.

இதேவேளை, மைத்திரியின் முகப்புத்தகம் (Face Book) கணக்கு கடந்த இரண்டு நாட்களுக்குள் 53 ஆயிரம் விருப்பங்களை கடந்துள்ளது.

அத்துடன் @Maithri Next Pres என்ற பெயரில், அவர், டுவிட்டர் கணக்கொன்றையும் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை ஆரம்பித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# அரசாங்க தரப்பினர் சட்டவிரோதமாக தேர்தல் பிரசாரத்தில் ஈடுபடுகின்றனர்

## சுற்றாடல் சார் அமைப்புக்கள் குற்றச்சாட்டு

(கொழும்பு)

ஆளும் கட்சி சட்டவிரோத தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டு வருவதாக சுற்றாடல் பாதுகாப்பு அமைப்புக்களும், எதிர்க்கட்சிகளும் குற்றம் சுமத்தியுள்ளன.

தேசிய வீதிகள் சட்டம், உள்ளூராட்சி மன்றச் சட்டம் ஆகியனவற்றுக்கு புறம்பான முறையில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் தேர்தல் பிரசார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

நாட்டின் சட்டங்கள் மலினப்படுத்தப்பட்டுள்ளதாகவும், சுற்றாடல் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் குற்றம் சுமத்தியுள்ளன.

உள்ளூராட்சி மன்றம், மாநகரசபை, நகரசபைகளில் பதாகைகள், தேர்தல் பிரசார அலங்காரங்கள் செய்ய வேண்டுமாயின் குறித்த உள்ளூராட்சி மன்றங்களின் அனுமதி பெற்றுக்கொள்ளப்பட வேண்டும்.

இதற்கு மேலதிகமாக மின்கம்பங்கள், தொலைபேசி கம்பங்கள் மற்றும் பெருந்தெருக்கள் வீதிகளில் பதாகைகள் மற்றும் தேர்தல் பிரசார அலங்காரங்கள் காட்சிப்படுத்த சில நியம விதி முறைகள் காணப்படுகின்றன.

எனினும், ஜனாதிபதி தேர்தலுக்காக ஆளும் கட்சியின் தேர்தல் பிரசார நடவடிக்கைகள் இந்த நியமங்களுக்கு புறம்பான வகையில் மேற்கொள்ளப்படுகின்றது.

சட்டவிரோதமான முறையில் காட்சிப்படுத்தப்படும் பதாகைகளை அகற்றும் அதிகாரம் பொலிஸாருக்கும், உள்ளூராட்சி மன்ற நிர்வாகிகளுக்கும் காணப்படுவதாக சுற்றாடல் பாதுகாப்பு அமைப்புக்கள் குறிப்பிட்டுள்ளன.

நாடு முழுவதிலும் காணப்படும் 104 இலங்கை போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான பேருந்துச் சாலைகளிற்குட்பட்ட அரச பேருந்துக்களில் ஜனாதிபதியின் படத்தை ஒட்ட வேண்டுமென பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி சகல பேருந்துகளிலும் ஜனாதிபதியின் படங்கள் ஒட்டப்பட்டிருக்கின்றன என குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்படுவதற்கு முன்னதாகவே அரசாங்கம் இவ்வாறு சட்டவிரோத தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டுள்ளமைக்கு சுற்றாடல் பாதுகாப்பு அமைப்புக்களும்எதிர்க்கட்சிகளும்கடும் அதிருப்தியை வெளியிட்டு ள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# பொன்னான சருமம் புண்ணாகலாமா?



குழந்தைகளின் சருமம் மிக மென்மையாக இருப்பதால், அதிகம் பாதிப்புக்கு உள்ளாகும். குழந்தைகளுக்கு ஏற்படும் சருமப் பிரச்சினைகளை எப்படி எதிர் கொளவது? அதைத் தவிர்ப்பது எப்படி?

பிறந்த குழந்தைகளுக்கு உடம்பில் சிவப்புப் புள்ளிகள் இருந்தாலும், தோலின் நிறம் மஞ்சளாக இருந்தாலும், முதுகிலும் ஆசனவாயிலும் நீல நிறத்தில் தட்டுத்திட்டாக இருந்தாலும் பெரிது படுத்தத் தேவை இல்லை. 10 நாட்களில் அது தானாகவே சரியாகிவிடும்.

பிறந்த குழந்தைகளுக்குத் தலையில் படை போன்று கறுப்பாக இருந்தால், அதில் எண்ணெய் விட்டு, சீப்பால் வாரி எடுக்கக் கூடாது. இதனால் அந்த இடம புண்ணாகுமே தவிர, ஆறாது. அப்படியே விட்டாலே போதும். ஒரு மாதத்துக்குள் அந்த முடிகள் உதிர்ந்து சரியாகிவிடும்.

குழந்தைகள் மண்ணில் விளையாடுவதால் அவர்களுக்கு சொறி, சிரங்கு ஏற்படலாம். உடனே, குழந்தைகளை மருத்துவரிடம் காண்பிக்க வேண்டும். காலம் தாழ்த்தினால் சிறுநீரகத்தில் பாதிப்பு ஏற்பட வாய்ப்புள்ளது. மேலும், குடும்பத்தில் ஒருவருக்கு சொறி வந்தாலும், அது ஒட்டு மொத்தக் குடும்பத்துக்கும் பரவிவிடும். சுத்தமாக இருப்பதன் மூலம், இந்த பாதிப்பிலிருந்து தற்காத்துக் கொள்ளலாம்.

குழந்தைகளுக்கு ஏற்படும் "முத்துமரு' எனப்படும் மரு வகையும் ஒரு தொற்றுநோயே. வைரஸால் வரும் இந்த மருவுக்கும் மருத்துவரை அணுகி, சிகிச்சை எடுத்துக்கொள்வது அவசியம்.

குண்டாக இருக்கும் குழந்தைகளுக்குத் தோலில் மடிப்புகள் ஏற்படும். அந்த மடிப்பில் காற்று புக முடியாமல் சிவப்பு நிறத்தில் வெடிப்பு (Atopic dermatitis) ஏற்படும். கூடவே வேர்க்குரு, படை, அரிப்பு ஏற்பட்டு தூக்கத்தைத் தொலைத்து விடுவார்கள். இது மரபியல் ரீதியாகவும் வரலாம். இந்த பாதிப்பு இருக்கும் குழந்தைகளுக்கு சாக்லேட், பால் உணவு வகைகளைத் தவிர்ப்பது நல்லது.

Health Care
மருத்துவ உலகம்
உங்கள் நலம் உங்கள் கைகளில்

குழந்தைகளுக்குச் சருமம் சீக்கிரமே காய்ந்துவிடும் என்பதால், ஈரப்பதம் உள்ள சோப்களையும், பருத்தி உடைகளையும் பயன்படுத்த வேண்டும். மூன்று வயதுக்கு மேல் இது மாறிவிடும்.

குழந்தைகளுக்கு அதிக வயிற்றுப்போக்கு ஏற்பட்டால், ஆசனவாய் சிவந்துவிடும். இதனால் வலியுடன்கூடிய எரிச்சல் ஏற்பட்டு, குழந்தை அழலாம். பொதுவாக, குழந்தைகளுக்குத் தாய்ப்பாலில் இருக்கும் சர்க்கரையை ஜீரணிக்க முடியாதது உள்ளிட்ட காரணங்களால் வயிற்றுப்போக்கு ஏற்படுகிறது. இதுபோன்ற நேரத்தில் மலத்தில் சர்க்கரையின் அளவைப் பரிசோதிக்கவேண்டியது அவசியம். சர்க்கரை அளவு அதிகமாக இருந்தால், குழந்தைகளுக்கு வயிற்றுப் போக்கு இருக்கும் மூன்று நாட்களுக்குத் தற்காலிகமாகத் தாய்ப்பாலை நிறுத்தினால், வயிற்றுப்போக்கு நின்றுவிடும். ஆசனவாயில், தேங்காய் எண்ணெய் தடவினாலே போதும்.

பனிக்காலத்தில் குழந்தைகளின் சருமம் எளிதில் காய்ந்து, உதடுகள் வறண்டுபோகலாம். அதற்கு உடலில் ஈரப்பதம், எண்ணெய்ப்பசை இல்லாததே காரணம். தாகம் இல்லை என்றாலும், நிறைய தண்ணீர் குடிக்க வேண்டும். குழந்தைகளுக்கான மோய்ஸசரைசிங் (moistursing) கிறீம்களையும் பயன்படுத்தலாம்.

பிறந்த குழந்தைகளுக்கு முத்தம் கொடுப்பதால், குழந்தையின் சருமத்தில் கிருமிகள் தாக்கி, புண்களை ஏற்படுத்தும். மேலும், கிருமிகள் குழந்தையின் வயிற்றிலும் போய் உடல் உபாதையை ஏற்படுத்தலாம். என்வே குழந்தைகளுக்கு முத்தம் கொடுப்பதைத் தவிர்க்கவும். சுகாதாரம் குறைந்தவர்கள் குழந்தையைத் தூக்குவதால் இந்த வகைக் கிருமிகள் பரவும்.

குழந்தைகளின் ஆடைகளில் நிறத்துக்காக மட்டமான இரசாயனங்களைப் பயன்படுத்து வதால், சருமப் பிரச்சினை வரலாம். அதுவும், குறைமாதத்தில் பிறந்த குழந்தைகளுக்குச் சருமப் பிரச்சினை எளிதில் தாக்கும். குழந்தைகளுக்கு எப்போதும் மெலிதான பருத்தி ஆடைகள்தான் ஏற்றது. முடிந்த வரை வெள்ளை நிற ஆடைகளையே பயன்படுத்தலாம். குளிர் காலத்தில் தடிப்பான பருத்தி ஆடையை அணிவிக்கலாம்.

பூச்சிகள் வராமல் இருக்க, துணியில் வைக்கும் நாப்தலின் உருண்டைகளைக் குழந்தைகள் ஆடைகள் பக்கம் வைக்கவே கூடாது. குழந்தைகளுக்கு பெர்பியூம் அடிப்பதோ, அவர்களின் ஆடைகளில் சென்ட் அடிப்பதோ, தவறான செயல். இது குழந்தைகளின் சருமத்தில் அலர்ஜியை உண்டாக்கலாம்.

குழந்தைகளுக்கு நாப்கின் பயன்படுத்தினால், குறிப்பிட்ட நேர இடைவெளியில் அடிக்கடி மாற்றுவது அவசியம். கெமிக்கல் அதிகம் இல்லாத சோப், பவுடர் வகைகளையே குழந்தைகளுக்குப் பயன்படுத்த வேண்டும்.

குழந்தையை ஒரேபக்கம் தலைவைத்துத் தூங்க வைப்பதால், முடி கொட்ட வாய்ப்பு உள்ளது. மாற்றி மாற்றி தலை வைத்துத் தூங்க வைப்பதன் மூலம், இதைத் தவிர்க்கலாம்.

மைல்டு ஷாம்புக்களையே குழந்தைகளுக்குப் பயன்படுத்த வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலைவர் பிரபாவுடனான ஒப்பந்தம் மகிந்த வெற்றி பெறக் காரணமாம்

## ரணில் கூறுகிறார்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுடன் ஒப்பந்தம் செய்து கொண்டே மகிந்த ராஜபக்ஷ, கடந்த 2005 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் வெற்றியீட்டியதாக எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க குற்றம் சாட்டியுள்ளார்.

குருநாகல் பிரதேசத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற கட்சிக் கூட்டமொன்றில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார். வடக்கு மக்களை வாக்களிப்பில் பங்கேற்கச் செய்யாமல் தடுத்தே ஜனாதிபதி தேர்தல் வெற்றி கொள்ளப்பட்டது.


தேர்தல் வெற்றியின் பின்னர் போரை முடிவுக்குக் கொண்டு வர அதிகாரம் தேவையெனக் கூறி படிப்படியாக அதிகாரத்தை அதிகரித்துக் கொண்டார்.

போரின் பின்னர் அதிகாரங்கள் குறைக்கப்படும் எனவும் எனினும், போரின் பின்னர் தமக்கு எதிராக போட்டியிட்ட சரத் பொன்சேகாவை சிறையில் அடைத்தார். ஊடக சுதந்திரத்தை ஜனாதிபதி முடக்கினார். பிரதம நீதியரசரை குற்றப் பிரேரணை மூலம் பணி நீக்கினார்.

எமது கட்சியை சிதைக்க முயற்சித்தார். அது முடியவில்லை. எனினும் ஏனைய கட்சிகளை பிளவடையச் செய்தார். நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை இரத்து செய்ய எவரும் ஆதரவளிக்கவில்லை என ஜனாதிபதி தெரிவித்திருந்தார். தோல்வியடையப் போகின்றோம் என்ற அச்சம் காரணமாக அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். நிறைவேற்று அதிகாரத்தை இரத்து செய்ய ஆதரவளிக்கத் தயார்.

அந்த சவாலை நான் ஏற்றுக் கொள்கின்றேன். நாடாளுமன்றில் 19 ஆம் திருத்தச் சட்டம் சமர்ப்பிக்கப்பட்டால் அதற்கு ஆதரவளிக்கத் தயார். அவசர சட்ட மூலமாக நாடாளுமன்றில் சமர்ப்பித்து விவாதம் நடத்தி, சட்டத்தை அமுல்படுத்த முடியும் என எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

# புனித வஸ்து ஜனாதிபதியால் வைக்கப்பட்டது



அநுராதபுரத்தில் நிர்மாணிக்கப்படும் சந்தஹிரு சேய தூபியில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ புனித வஸ்துவை வைக்கும் வைபவம் நேற்று முன்தினம் காலை இடம்பெற்றது.

இந்நிகழ்வில் முதற் பெண்மணி சிராந்தி ராஜபக்ஷ, பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ மற்றும் பாதுகாப்பு அமைச்சின் சேவா வனிதா பிரிவின் தலைவி அயோமா ராஜபக்ஷ எனப்பலரும் கலந்து கொண்டனர்.

வரலாற்று சிறப்பு மிக்க அநுராதபுர நகரில் ருவன்வெலிசாய தூபிக்கு அண்மையில் சந்தஹிரு சேய நிர்மாணிக்கப்படுவதுடன் பயங்கரவாத நடவடிக்கைகளின் போது நாட்டிற்காக உயிர்த் தியாகம் செய்த இராணுவ வீரர்களை கௌரவிக்கும் வகையில் இது நிர்மாணிக்கப்படுகிறது. (இ-5)

# இராணுவ ஆட்சி முறைமைக்கு முடிவு கட்ட வேண்டும்-ரில்வின்

அரசாங்கத்தின் அரை இராணுவ ஆட்சி முறைமையை முடிவுக்குக் கொண்டு வர வேண்டுமென ஜே.வி.பி. பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

நாட்டில் சர்வாதிகார குடும்ப ஆட்சி முறை ஒன்றே முன்னெடுக்கப்படுகின்றது.

தனிப்பட்ட கருத்துக்களின் அடிப்படையிலேயே ஆட்சி நடத்தப்படுகின்றது. இது மிகவும் ஆபத்தான நிலைமையாகும்.

இந்த ஆட்சி முறைக்கு விரைவில் முற்றுப்புள்ளி வைக்கப்படாவிட்டால், நாடு ஆபத்துக்களை எதிர்நோக்குவதனை தடுக்க முடியாது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கு எது தேவையோ அந்த விளக்கத்தை உச்ச நீதிமன்றிடமிருந்து பெற்றுக்கொண்டுள்ளார்.

சட்ட விளக்கம் பெற்றுக்கொள்ள நீதிமன்றில் விசாரணை நடத்தப்படவில்லை.

வாய்மொழி மூல அல்லது எழுத்து மூல வாதப் பிரதிவாதங்களை முன்வைக்க சந்தர்ப்பம் அளிக்கப்படவில்லை.

மிகவும் இரகசியமான முறையில் இந்த சட்ட விளக்கம் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

தமக்கு எதிராக சமூகத்தில் எழும் குற்றச்சாட்டுக்களை அடக்குவதற்கு ஜனாதிபதி உச்ச நீதிமன்றினைப் பயன்படுத்திக் கொண்டார்.

ஜனாதிபதி மகிந்த மூன்றாம் தவணைக்கு போட்டியிட முடியாது என சட்டத்தரணிகள், புத்தி ஜீவிகள், சமூக செயற்பாட்டாளர்கள் மற்றும் அரசியல்வாதிகள் சுட்டிக் காட்டியிருந்தனர்.

அரசாங்க ஊடகங்கள் சட்ட விளக்கத்தை ஓர் நீதிமன்ற தீர்ப்பாகவே சித்திரிக்கின்றன.

உண்மையில் இது நீதிமன்றின் தீர்ப்பாக கருதப்பட முடியாது. இது உச்ச நீதிமன்றின் ஓர் நிலைப்பாட்டை வெளிப்படுத்தும் விளக்கம் மட்டுமேயாகும்.

எதிர்காலத்தில் இந்த விடயம் தொடர்பில் நீதிமன்ற நடவடிக்கை எடுக்கப்பட முடியும் என ரில்வின் சில்வா சிங்கள பத்திரிகையொன்றுக்கு தெரிவித்துள்ளார். (இ-5)

# இன்று ஒரு தகவல்

## அன்பு என்றால் என்ன?

ஒரு பெரியவரைப் பார்த்துக் கேட்டேன், இந்த உலகத்தில் எல்லோரும் அன்பைப் பற்றியும் அதன் பெருமைகளைப் பற்றியுமே பேசிக்கொண்டிருக்கின்றார்கள்.

அன்பு அவ்வளவு தூரம் பேச வேண்டிய ஒரு விடயமா? என்று கேட்டேன்.

இதற்கு அவர் சொன்னார்.

எமக்கு உண்மையான அன்பு என்றால் என்ன என்றே தெரியாது. அதனால் தான் அதைப் பற்றி அதிகமாகப் பேசிக்கொண்டிருக்கிறோம் என்றார்.

எனக்குப் புரியவில்லை. பின்னர் அவர் விளக்கமாகச் சொன்னார்.

பொதுவாக நாம் வாழ்ந்து பார்க்காத விடயத்தைப் பற்றி எமது மனம் அதிகமாகப் பேசும். உண்மையான அன்பை நாம் என்றும் அனுபவித்துப் பார்த்தில்லை. அது எம்மிடம் உயிரோடு இயங்கவில்லை.

உண்மையில் அன்பு இயங்கிக் கொண்டிருந்தால், நாம் அதைப் பற்றி அதிகமாகப் பேச வேண்டிய அவசியமில்லை. நாம் அதைப்பற்றி அதிகமாகப் பேசுவதிலிருந்தே அது உயிரோடு இயங்கவில்லை என்பது தெளிவாகின்றது.

நாம் பல வழிகளிலே இயங்குவது போல் ஒரு பொய்த் தோற்றத்தைக் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். அதைப்பற்றிக் கவிதை எழுதுவது மேடையில் பேசுவது நாடகம், சினிமா இப்படி எல்லாவற்றிலும் அன்பைப் பற்றி அதிகமாக சொல்லிக் கொண்டிருக்கிறோம்.

அன்பைப் பற்றி ஒன்றுமே தெரியாதவன் எழுதுகின்ற கவிதை, அன்பைப்பற்றி நன்றாகத் தெரிந்தவன் எழுதும் கவிதையைவிட நன்றாக இருக்கும்.

ஏனென்றால் தெரியாதவனிடம் இருக்கும் வெறுமை ஆழமானது. அதை அவன் வார்த்தை ஜாலங்களாலே நிரப்ப முயற்சி செய்கின்றான்.

அதனால் அன்பு என்றால் என்ன? என்பதை முதலில் புரிந்து கொள்ள வேண்டும்.

எமக்கு ஏற்படும் ஒருவித இறுக்க நிலையைத் தான் நாம் அன்பு அல்லது காதல் என்று சொல்லிக் கொண்டிருக்கின்றோம். அது முட்டாள்த்தனமான அகங்காரத்தின் வெளிப்பாடு.

அது ஒரு இறுக்க நிலை போராட்டம் மற்றும் வேறுபாட்டு நிலை. இதைத் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும்.

உண்மையான அன்பு மிகவும் அமைதியான நிலையிலே ஏற்படும். அங்கே கோபத்திற்கோ வெறுப்புக்கோ கவர்ச்சிக்கோ இடம் கிடையாது.

இன்னும் சொல்லப் போனால் உண்மையில் அது அன்பு கிடையாது. வெறுப்பும் கிடையாது. ஏனென்றால் அந்த அன்பு அடுத்தவர்களை சார்ந்திருப்பதில்லை.

இது தான் பெரியவர்கள் சொல்லும் அன்பின் விளக்கம். இந்த அன்புக்கும் நமக்கும் தற்போது எந்த சம்பந்தமும் இல்லை என்றுதான் தோன்றுகின்றது.

தென்கச்சி கோ சுவாமிநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

992

## மண்ணுக்கு வந்த இரவு!

பல்லாயிரம் வருடங்களுக்கு முன்பு, பூமியில் பகல் மட்டுமே இருந்தது.

இரவே கிடையாது.

சூரியன் மட்டுமே தெரியும்.

யாரும் நிலாவைப் பார்த்ததே இல்லை.

நட்சத்திரங்களும் கிடையாது.

அந்திவானம் என்ற சொல் இல்லை.

இரவுச் சங்கீதம் பாடும் பறவைகள் இல்லை.

மின்னல் கீற்றுகள் கிடையாது.

அந்த நேரத்தில் ஒருநாள், கடல் ராஜாவின் மகள், கடலின் ஆழத்திலிருந்து மேற்பரப்புக்கு வந்து, நீந்தி விளையாடினாள்.

பிறகு, ஒரு பாறையில் ஓய்வெடுத்துக் கொண்டிருந்தாள்.

அப்போது, அந்த வழியாக வந்த வாலிபனைப் பார்த்து வியந்தாள்.

அவளது கடல் உலகில், அழகான தோற்றம் கொண்ட யாரையும் பார்த்தது இல்லை.

எனவே, அந்த வாலிபனிடம் பேச்சுக் கொடுத்தாள்.

என்னுடன் கடல் உலகத்துக்கு வருகிறாயா? என்று கேடடாள்.

வாலிபன் சம்மதித்தான்.

கடல் இளவரசி, அவனை அழைத்துக் கொண்டு கடலுக்குள் சென்றாள்.

கடல் ராஜா வான தன் தந்தையிடம் அறிமுகப் படுத்தினாள்.

அந்த வாலிபனையே திருமணம் செய்து கொண்டாள்.

கொஞ்ச காலம் கடலில் இருவரும் மகிழ்ச்சியாக இருந்தனர்.

வாலிபனுக்கு கடல் வாழ்க்கை அலுத்துப் போனது.

நான் மீண்டும் மண்ணுலகம் செல்ல நினைக்கிறேன்.

அங்கே நாம் இன்னும் மகிழ்ச்சியாக வாழலாம் என்றான்.

கடல் இளவரசிக்கும் மண்ணுலகம் சென்று வாழ ஆசை.

அவர்கள், கடல் ர்ராஜாவிடம் விடை பெற்றுக்கொண்டு மேலே வந்தார்கள்.

வாலிபனின் அரண்மனை வீட்டை அடைந்தார்கள்.



அங்கே எல்லா வசதிகளும் இருந்தன.

ஆனால், எப்போதும் சூரியன் இருக்கும் நிலப் பகுதியின் வெப்பத்தை கடல் இளவரசியால் தாக்குப் பிடிக்க முடியவில்லை.

மிக விரைவிலேயே அவளது கண்கள் ஒளி இழந்தன.


உடல் நிறம் மாங்கியது.

வெளியே சென்றிருந்த கணவன் வந்தான்.

அவள் துவண்டுபோய் படுக்கையில் கிடந்தாள்.

இங்கு இரவே வராதா? என்று கேட்டாள்.

அங்கே இருந்தவர்கள், இரவு என்றால் என்ன? அது எப்படி இருக்கும்? என்று புரியாமல் கேட்டார்கள்.



கடலுக்கு அடியில் சென்றிருந்த போது பார்த்து, உணர்ந்து இருக்கிறேன்.

அது, குளிர்ச்சியாக இருக்கும்.

வெளிச்சம் இல்லாமல் கருநிழல் எங்கும பரந்து விரிந்திருக்கும்.

அதுதான் இரவு என்றான் வாலிபன்.

அது வந்தால்தான் நாங்களால் உறங்கச் செல்வோம் என்றாள் கடல் இளவரசி.

கவலைப்படாதே, அந்த இரவை இப்போதே வாங்கிவரச் சொல்கிறேன் என்றான் வாலிபன்.

தனது அடிமைகள் மூவரை அழைத்தான்.

நீங்கள் உடனடியாக கடலுக்கு அடியில் சென்று, கடல் ராஜாவிடம் கொஞ்சம் இரவை வாங்கி வாருங்கள் என்றான்.

மூன்று அடிமைகளும் மிகுந்த சிரமப்பட்டு, பல ஆபத்துகளைக் கடந்து, கடலுக்கு அடியில் சென்றனர்.

கடல் ராஜாவைச் சந்தித்து வணங்கினர்.

பூமியில் முழு நேரமும் பகலாக இருப்பதால், இளவரசி உடல்நலம் இல்லாமல் இருக்கிறார்.

எனவே, பகலை மறைக்கும் நிழல் இரவு வேண்டும் என்றார்கள்.

அதைக் கேட்டதும் கடல் ராஜா தன மகளை நினைத்து வருத்தப்பட்டார.

(தொடரும்)

---

11.2014

25

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- ❖1542 - ஆங்கிலேயப் படைகள் சொல்வே மொஸ் என்ற இடத்தில் ஸ்கொட்லாந்துப் படைகளைத் தோற்கடித்தன.
- ❖1758 - பிரித்தானியப் படைகள் பிரெஞ்சு வசமிருந்த Fort Duquesne (பென்சில்வேனியா)வை கைப்பற்றினர.
- ❖1783 - கடைசி பிரித்தானியப் படைகள் நியூயோர்க்நகரை விட்டுப்புறப்பட்டன.
- ❖1795 - சுதந்திரப் போலந்தின் கடைசி மன்னன் ஸ்டனிஸ்லாஸ் ஆகஸ்ட் பொனியாட்டோவ்ஸ்கி பதவியில் இருந்து அகற்றப்பட்டு ரஷ்யாவுக்கு நாடு கடத்தப்படடான்.
- ❖1833 - சுமாத்திராவில் 8.7 நிலநடுக்கம் ஏற்பட்டது.
- ❖1867 - அல்பிரட் நோபல் டைனமைட்டுக்குக் காப்புரிமம் பெற்றார்.
- ❖1905 - டென்மார்க் இளவரசன் கார்ல் நோர்வே வந்து சேர்ந்தான். இவன் பின்னர் "ஏழாம் ஹாக்கோன்" என்ற பெயரில் நோர்வேயின் மன்னனானான்.
- ❖1936 - ஜப்பான், ஜேர்மனி ஆகியன சோவியத் ஒன்றியம் தம் மீது படையெடுத்தால் அதனை கூட்டாக எதிர்கொள்ள பேர்லின் நகரில் ஒப்பந்தம் செய்து கொண்டன.
- ❖1950 - மக்கள் சீனக் குடியரசு ஐ.நா படைகளை எதிர்க்க கொரியப் போரில் ஈடுபட்டது.
- ❖1952 - அகதா கிறிஸ்டியின் மேடை நாடகமான த மௌஸ்டறப் (The Mousetrap) திரைப்படமாக வெளிவந்தது.
- ❖1973 - கிரேக்கத் தலைவர் ஜோர்ஜ் பாப்படபவுலொஸ் இர்ராணுவப்புரட்சி ஒன்றில் பதவி இழந்தார்.
- ❖1975 - சூரினாம் நெதர்லாந்திடமிருந்து விடுதலை பெற்றது.
- ❖1981 - ரொடீசியாவிலிருந்து மும்பாய்க்குப் புறப்பட்ட ஏர் இந்தியா விமானம் கடத்தப்பட்டு தென்னாபிரிக்காவின டர்பன் நகருக்குச் செலுத்தப்பட்டது.

### பிறப்புகள்

- ❖1844 - கார்ல் பென்ஸ் ஜேர்மானிய வாகனப்பொறியாளர் (இ. 1929)
- ❖1952 - இம்ரான்கான், பாகிஸ்தானின் முன்னாள் துடுப்பாட்டக்காரர்

### இறப்புகள்

- ❖1964 - துவாரம் வேங்கடசுவாமி நாயுடு கருநாடக இசை வயலின் வாத்தியக் கலைஞர் (பி: 1893)
- ❖1974 - ஊ தாண்ட், பர்மியர், முன்னாள் ஐ.நா செயலாளர் (பி. 1909)
- ❖1979 - பெல்ஜியத் தமிழறிஞர் டெசி (பி. 1898)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மிளகாய் உற்பத்தியில் தன்னிறைவை அடையக்கூடிய பயிர்ச்செய்கை முறை!

அப்மெக்ரின் (மிட்சுயீ) 06 மி.லீ/10 லீற்றர் நீர்

இமிடாகுளோபிறிட் (அட்மையர்) -10 மி. லீ/10 லீற்றர் நீர் அத்துடன் சிற்றுண்ணி தாக்கமும் காணப்பட்டது. அதாவது இலைகள் கீழ்புறமாக சுருளடைந்து இருப்பது அவதானிக்கப்பட்டமையால் கீழ் குறப்பிட்ட பூச்சி நாசினிகள் பாவிக்கப்பட்டது:

சல்பர் 80 கிராம் /10 லீற்றர் நீர்

அப்மெக்ரின் 6மி.லீ /10 லீற்றர் நீர

இவற்றைவிட கூடுதலான மருந்து பாவனை எதிர்ப்பு தன்மையை கொண்டு வருவதாலும் நுகர்வோருக்கு படிப்படியாக நச்சுப் பொருள் சேர்ந்து பாரிய நோயை உண்டாக்குவதாலும் பனிப்பூச்சி, சிற்றுண்ணி இனப் பெருக்கத்தை கட்டுப்படுத்த தெளி கருவியை பயன்படுத்தி தாவர இலைப் பரப்புக்கள் நன்கு கழுவி நீர் விசிறப்பட்டது. தொடர்ந்து காலையில் 2 வாரம் விசிறப்பட்டது.

களைகள் பூச்சிகளின் விருந்து வழங்கிகளாக இருப்பதாலும் பயிருடன் போட்டி போடுவதாலும் ஊடுசாகுபடியின் போதும் களைகள் அதிகமாக உருவாகும் போதும் கைகளால் அகற்றி கட்டுப்படுத்தப்பட்டன.

அத்தோடு பயிர்ச்செய்கைக் காலத்தில் இரு முறை மழை பெய்ததாலும் பூச்சிகளின் தாக்கம் குறைவடைந்து காணப்பட்டது. பயிர் செய்கை காலம் கூடிய வெப்பகாலமாகையால் நீர்பாசன இடைவெளியை கூட்டும்போது அதாவது, 4-5 நாட்களின் பின் பயிர்கள் நன்கு சடைத்து வளர்ந்து குளிர்தன்மையை ஏற்படுத்தியிருந்தது. அக்காலத்தில் வாடல் நோய் அவதானிக்கப்பட்டது. அதனை கட்டுப்படுத்த பங்கசு நாசினியான கப்ரான் விசிறப்பட்டு கட்டுப்படுத்தப்பட்டது.

### பயிர்செய்கை காலத்தில் அவதானிக்கப்பட்ட சாதகமானவையும பாதகமானவையும்

***சாதகமானவை***

• கூடுதலான ஊடுசாகுபடிச் செய்கை மண்ணின் காற்றோட்டத்தை கூட்டி போசணையை விரைவாக அகத்துறிஞ்சி நாற்றுக்கள் விரைவாக தமது வளர்ச்சி விதானத்தை அடைந்தது.

• ஊடுசாகுபடியின் பின் 3-4 நாட்களுக்கு காயவிட்டு பின் பசளை போட்டு இறைப்பதன் மூலம் விரைவான வளர்ச்சியை அவதானிக்க முடிந்தது.

• தரிசு நிலத்தை (2-3 வருடம் பயிர் செய்யப்படாத) தெரிவு செய்ததால் மண் வளமாக காணப்பட்டது.

***பாதகமானவை***

• கட்டாக்காலி விலங்குகளால் பாதிப்பு ஏற்பட்டதால் சுற்றிவர வேலி அமைப்பும் காவலும் போடப்பட்டது.

• விவசாய திணைக்களத்தினால் வழங்கப்பட்ட அடிப்படை விதை பயன்படுத்தியும் பரம்பரை ரீதியாகவும், விகாரத்தாலும் 0.1% வேறு வர்க்க கலப்பு அவதானிக்கப்பட்டது. அவை விதை அத்தாட்சிப்படுத்தும் உத்தியோகத்தர்களால் தகுந்த முறையில் அகற்றப்பட்டது.

**அறுவடை**

விதை உற்பத்தியாகையால் பச்சை மிளகாயை அறுவடை செய்யாது நாற்று நட்டு 70-80 நாட்களில் பழங்களாக 8-10 தடவை 7-10 நாட்கள் இடைவெளியில் அறுவடை செய்யப்பட்டது. ஒவ்வொரு அறுவடையின் போதும் உலர்காலமாக இருந்தமையால் தகுந்த முறையில் காயவிடப்பட்டு அவற்றினை தரம் பிரித்து தெரிவு செய்த விளைவாக 1100 கிலோ கிராம் உலர் செத்தல் பெறப்பட்டு சாக்குகளில் கட்டி வைத்து சேமிக்கப்பட்டது. இங்கு MI Green வர்க்கத்தில் 1 கிலோகிராம் விதை பெறுவதற்கு கிட்டத்தட்ட 4-5 கிலோ கிராம்செத்தல்தேவைப்பட்டது. பொதுவாக் நீரபாசனத்தின் கீழ் செய்கை பண்ணப் படுகின்றபோது ஒரு ஏக்கரில் 800-1200 கி.கி செத்தல் மிளகாயைப்பெறலாம்ஆனால எம்மால் பெறப்பட்ட விளைச்சல் ¾ ஏக்கரில் தரமான செத்தலாக 1100 கிலோ கிராமும் மிகுதி 100-200 கிலோகிராம் தரமற்ற செத்தலும் பெறப்பட்டது. உண்மையில் ¾ ஏக்கருக்கு சிபார்சின்படி 900 கிலோகிராம் கிடைத்தாலே போதுமானதாகும். ஆனால், 1100 கி.கிராம் செத்தல் மிளகாய் பெறப்பட்டதால் இது மிகப்பெரிய விளைச்சல்லாகும். இம் முறையில் பச்சை மிளகாயை அறுவடையாகப் பெறுவோமாயின் இன்னும் அதிக விளைச்சல் பெறப்பட்டிருக்கலாம். மேற்படி விடயங்கள் விவசாயிகளை சென்றடைவதன் மூலமாக எமது பிரதேசத்தின் பணப்பயிரான மிளகாயின் உற்பத்தியை பெருக்கி தன்னிறைவை நோக்கி பயணிக்கலாம் என்பது திண்ணமாகும் *(முற்றும்)*

| இடும்பருவம் | பசளைவகை கிலோகிராம் | | |
|---|---|---|---|
| | யூரியா | மும்மை பொசுபேற்று | மியூறியேற்றுப் பொற்றாசு |
| அடிக்கட்டுப்பசளை | - | 100 | 50 |
| மேற்கட்டுப்பசளை நட்டு 2வாரத்தின் பின் | 100 | - | - |
| நட்டு 4வாரத்தின் பின் | 125 | - | 50 |
| நட்டு 8வாரத்தின் பின் | 125 | - | - |
| நட்டு 12வாரத்தின் பின் | 125 | - | - |

திருமதி. சோதிலட்சுமி விஜயதாசன்
விவசாயப்போதனாசிரியர்
விவசாய ஆராய்ச்சி நிலையம்
திருநெல்வேலி

# ஆத்ம ஞானத்தைத் தேடி

## கவலைகள் இன்றி வாழ்தல்!

***...நான் எப்பொழுதும் மக்களிடம் சொல்வதுண்டு... நான் ஏதாவது ஒன்று சொன்னால் நீங்கள் அதை வேறொன்றாகப் புரிந்து கொள்கிறீர்கள்.. அங்குதான் பிரச்சினை***

ஆரம்பமாகிறது. ஒவ்வொருவரும் தங்களுக்குச் சொந்தமான அகராதியைக் கையில் வைத்துக்கொண்டு வார்த்தைகளுக்கு தங்களுக்கு தெரிந்த வழியில் விளக்கம் கொடுத்துக் கொண்டிருக்கிறோம்.

ஒரு சின்ன கதை......

ஒருவன் தன் மனைவியிடம் சொன்னான் உனக்குத் தெரியுமா? பெயிண்ட் பிரஷ்கள் செய்வதற்கு வருடத்திற்கு சுமார் 5000 ஒட்டங்களை உபயோகப்படுத்துகிறார்கள் என்று சொல்லப்படுகிறது. அதற்கு மனைவி சொன்னாள் ஓ கடவுளே! மிருகங்களை என்னவெல்லாம் செய்ய வைக்கிறார்கள். என்பதைப் பார்க்கும் பொழுது வியப்பாக இருக்கிறது. (சிரிப்பு)

இப்படித்தான் நம்மில் பலர் புரிந்து கொள்கிறோம் அதனால்தான் நான் வார்த்தைகள் குழப்பத்தை விளைவிக்கின்றன என்று சொல்லுகிறேன். இதில் வருத்தப்பட வேண்டிய விடயம் என்னவென்றால் மனிதனுக்குத் தெரிந்த ஒரே தொடர்பு முறை வார்த்தைகள்தான். அவன் மேலும் மேலும் வார்த்தைகளில் சிக்கிக் கொள்கிறான்.

பாருங்கள் வார்த்தைகள் மேலும் வார்த்தைகளுக்கு வழி வகுக்கும்.



ஆனால், ஒரு வார்த்தைக்கும் இன்னொரு வார்த்தைக்கும் இடையில் ஒரு அமைதி அல்லது ஒரு இடைவெளி நம்மால் உணர்ந்துகொள்ள முடியாத ஒரு மிகச்சிறிய இடைவெளி இருக்கிறது. இந்த இடைவெளி கவனிக்கத்தக்கது. நாம் உண்மையிலேயே தேடுவது இந்த இடைவெளியில்தான் இருக்கிறது. இந்த இடைவெளியில் நாம் நான் முழுவதும் பார்த்தாலும் அக்கறை கொள்ள முடியாத அளவு அணுவளவானது. நான் பேசும் பொழுது நீங்கள் அதிக உள் பேச்சியின்றி என் பேச்சில் தீவிரமாக மூழ்கிவிடுகிறீர்கள். நீங்கள் என் வார்த்தைகளில் ஆழ்ந்து மூழ்கியிருக்கும் பொழுது நான் சில இடைவெளிகளைக் கொடுக்கிறேன். இந்த இடைவெளிகளில் இருக்கும் அமைதியே நீங்கள் தேடிக் கொண்டிருக்கும் உண்மையான தீர்வு.

### ஆன்மீகம் 85

நான் சில சமயம் பேசும்பொழுது நீண்ட இடைவெளிகளை கொடுப்பேன். இந்த இடைவெளிகளை கொடுப்பது நீங்கள் அமைதியை கிரஹித்துக் கொள்ளவும், அதற்கு சாட்சியாக இருப்பதாகவுமே. அது உங்களிடம் விழிப்புணர்வை அதிகரிக்கும். ஆனால், வழக்கமாக என்ன நடக்கிறது. நான் இடைவெளிகளைக் கொடுக்கும் கணத்தில் மக்கள் அமைதியற்று இருக்கத் தொடங்குகிறார்கள். ஏதாவது அவர்களது பொருள்களை குடையைத் தொடங்குவது அல்லது சுற்றும் முற்றும் பார்த்து பேசத் தொடங்குவது- இவ்வாறு மீண்டும் வார்த்தைகளைச் சேகரிக்கிறார்கள். *(தொடரும்)*

பரமஹம்ஸ சுவாமி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்பாந்தோட்டையில் சீனக்கடற்படைத்தளமா?

இந்தியபபெருங்கடல் பிராந்தியத்தில் தனது விநியோகப் பாதையின் பாதுகாப்பை உறுதிப் படுத்திக் கொள்வதற்காக இலங்கை உள்ளிட்ட 18 நாடுகளில் சீனா கடற்படைத் தளங்களை/ அமைக்கவுள்ளதாக தி நமீபியன் என்ற நமீபிய நாட்டு நாளிதழ் வெளியிட்ட செய்தி கடந்த வாரம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது.

அந்தச் செய்தியில் அம்பாந்தோட்டைத் துறைமுகத்தில் சீனா தளம் அமைக்கத் திட்டமிட்டுள்ளதாக கூறப்பட்டிருந்தது. இந்த விவகாரம் ஊடகங்களில் பரபரப்பான செய்தியாக உலாவந்த அதே வேளை, பாராளுமன்றத்திலும் எதிர்ககடசி கேள்வி எழுப்பும் நிலைக்கு கொண்டு சென்றது.

அண்மையில் தான் இரண்டு தடவைகள் சீனக் கடற்படையின் இரண்டு நீர்மூழ்கிகள் கொழும்புத் துறைமுகத்திற்கு வந்து சென்றிருந்தன. அவற்றின் வருகை குறித்து இந்தியா கவலையும், கரிசனையும் கொண்டுள்ள சூழலில் இலங்கை உள்ளிட்ட 18 நாடுகளில் சீனா கடற்படைத் தளங்களை அமைக்கவுள்ளன என்ற செய்தி, இந்தியாவின் புருவங்களை உயர்த்த வைத்திருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

இலங்கையில் சீனா உள்ளிட்ட எந்தவொரு நாடுமே தமது தளத்தை அமைப்பதற்கு இந்தியா இடமளிக்காது. ஏனென்றால் அது இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தக்கூடியது. ஏற்கனவே, இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தும் வகையில் இலங்கையிலுள்ள துறைமுகங்களை எந்தவொரு நாட்டுக்கும் இராணுவ நோக்கங்களுக்காக இலங்கை வழங்காது என்று உறுதியளிக்கும் கடிதம் ஒன்றை முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தன இந்தியாவிடம் கொடுத்திருக்கிறார்.


அதைமீறி சீனாவுக்கு தளம் அமைப்பதற்காக அம்பாந்தோட்டைத் துறைமுகத்தையோ வேறு எந்த இடத்தையோ இலங்கை கொடுக்க முனைந்தால் அதனை இந்தியா பார்த்துக் கொண்டிருக்காது. சீனக்குடாவில் விமானப் பராமரிப்பு நிலையத்தை அமைப்பதற்கு அரசாங்கம் அனுமதி கொடுத்திருந்த போதிலும், இந்தியா தெரிவித்த எதிர்ப்பினால் இந்தத் திட்டம் இன்னமும் இழுபறியாகவே இருக்கிறது.

எனவே, அம்பாந்தோட்டையில் சீனா கடற்படைத்தளம் ஒன்றை அமைப்பது என்பது அவ்வளவு இலகுவாக நடக்கக்கூடிய காரியமன்று. இதுபற்றிய பாதுகாப்பு அமைச்சின் ஊடகநிலையப் பணிப்பாளரும் இராணுவப் பேச்சாளருமான ருவான் வணிகசூரியவிடம் கேள்வி எழுப்பப்பட்டபோது அப்படியான எந்தத் திட்டமும் இல்லை என்றார்.

அம்பாந்தோட்டையில் இரகசியமாக சீனக் கடற்படைத் தளத்தை அமைக்க முடியாது. வேண்டுமானால் அங்கு சென்று பார்த்துக் கொள்ளலாம் என்றும் அவர் கூறியிருந்தார். எனினும் பாராளுமன்றத்தில் ஐ.தே.க உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா இதுபற்றி வினவியிருநதார. அம்பாந்தோட்டைத் துறைமுகத்தில் இரண்டாவது கட்டமாக அமைக்கப்படவுள்ள 7 இறங்குதுறைகளில் 4 இறங்குதுறைகள் சீனாவிடம் கையளிக்கப்படுவதற்கு இணங்கியுள்ளது குறித்து அவர் கேள்வி எழுப்பியிருந்தார்.

மேலும் சீன அதிபர் ஜி ஜின்பிங் கொழும்பு வந்திருந்த போது கையெழுத்திடப்பட்ட ஆவணம குறித்து விளக்கமளிக்குமாறும் அவர் வலியுறுத்தியிருந்தார். சீன ஊடகம் ஒன்றை மேற்கோள் காட்டி தி நமீபியன் நாளிதழ் வெளியிட்ட தகவல் முற்றாகவே புறக்கணிக்கத்தக்கதொன்று அல்ல. அதற்காக இப்போது அம்பாந்தோட்டையில் சீனா கடற்படைத்தளத்தை அமைத்துக் கொண்டிருப்பதாகக் கூறப்படுவதும் உண்மையல்ல.

நமீபிய நாளிதழ்கூட இலங்கையில் சீனா தளத்தை அமைத்து விட்டதாகக் குறிப்பிடவில்லை. இந்த விவகாரத்தில் நமீபிய நாளிதழ் கவனம் செலுத்தியதற்கு காரணம் சீனா அமைக்கப் போவதாக கூறப்பட்ட 18 கடற்படைத் தளங்களில் ஒன்று அந்த நாட்டிலும் அமையவுள்ளது தான். நமீபியாவின் வல்வில் குடாவில்தான் அநதத் தளம் அமையவுள்ளதாக கூறப்படுகிறது. இதுபற்றி உயர்மட்டக் கலந்துரையாடல்கள் இடம்பெற்று வருவதை நமீபிய பாதுகாப்பு அமைச்சின் பேச்சாளர் லெப்.கேர்ணல் மோனிகா ஷேயா உறுதிப்படுத்தியிருக்கிறார்.



இந்தப் பேச்சுக்களில் இணக்கப்பாடு காணப்பட்டதும் அதுபற்றி நாட்டு மக்களுக்கு அறிவிக்கப்படுமென்றும் அவர் கூறியிருக்கிறார். இதனைச் சொல்ல வந்தபோதுதான் நமீபிய நாளிதழ் இலங்கை உள்ளிட்ட 18 நாடுகளில் அடுத்த 10 ஆண்டுகளில் சீனா தளங்களை அமைக்கத் திட்டமிட்டுள்ளது என்பதையும் சுட்டிக்காட்டியிருந்தது. ஆனால் தம்மிடம் அத்தகைய திட்டம் ஏதும் இருப்பதாக எந்த அதிகாரபூர்வ அறிவிப்பையும் சீனா வெளியிடவில்லை.

கடந்த ஆண்டு ஜனவரி 4 ஆம் திகதி சீன அரசின் கட்டுப்பாட்டிலுள்ள சின்ஹுவா செய்தி நிறுவனத்தினால் வெளியிடப்படும் International Herald Leader நாளிதழில் ஒரு கட்டுரை வெளியாகியிருந்தது. அதில் சீனா தனது எரிபொருள் மற்றும் பொருள் விநியோகப் பாதைகளின் பாதுகாப்புக்காக வெளிநாடுகளில் கடற்படைத் தளங்களை அமைக்க வேண்டும் என்று யோசனை கூறப்பட்டிருந்தது. அதில்தான் சீனா அமைக்க வேண்டிய 18 கடற்படைத் தளங்கள் பற்றிய விபரங்கள் பட்டியலிடப்பட்டிருந்தன. அதனை அடிப்படையாக வைத்துத்தான் தி நமீபியன் நாளிதழ் தமது நாட்டில் சீனக் கடற்படைத் தளம் அமையவுள்ளதைச் சுட்டிக்காட்டி செய்தியை வெளியிட்டிருந்தது.

சீன அரசு நாளிதழ் வெளியிட்ட கட்டுரையின் படி வடகொரியாவின் சொங்ஜின் துறைமுகம் பபுவா நியூகினியின் மொரெஸ்பி துறைமுகம், கம்போடியாவின் சிஹானுக்வில்லி துறைமுகம், தாய்லாந்தின் கோலன்ரா துறைமுகம், மியான்மாரின் சிட்வே துறைமுகம், பங்களாதேஷின் டாக்கா துறைமுகம், பாகிஸ்தானின் குவதார் துறைமுகம், இலங்கையின் அம்பாந்தோட்டைத் துறைமுகம், மாலைதீவு, செஷெல்ஸ், டிஜிபோட்டியின் டிஜிபோட்டி துறைமுகம், நைஜீரியாவின் லாகோஸ் துறைமுகம், கென்யாவின் மொம்பாசா துறைமுகம், தான்சானியாவின் தர் இஸ் ஸலாம் துறைமுகம், அங்கோலாவின் லுவாண்டா துறைமுகம் ஆகியனவே சீனா தளங்களை அமைக்க வேண்டிய இடங்களாக பரிந்துரைக்கப்பட்டிருந்தன.

எதற்காக இங்கெல்லாம் தளங்களை அமைக்க வேண்டும் என்பதற்கான விபரங்களும் அதில் கொடுக்கப்பட்டிருந்தன. சீனா பலமான கடற்படை ஒன்றை உருவாக்குவதன் மூலம் தனது எரிபொருள் விநியோகப் பாதையை குறிப்பாக மலாக்கா நீரிணையை பாதுகாக்க முடியுமென்று நம்புகிறது. அமெரிக்காவே உலகில் அதிகளவு படைகளை வெளிநாட்டில் நிறுத்தியிருக்கும் நாடாகும். உலகெங்கும் சுமார் 150 நாடுகளில் அமெரிக்கா தனது தளங்களை அமைத்துள்ளது.

அமெரிக்கா தனது நாட்டுக்கு வெளியே 16,000 படையினரை நிறுத்தி வைத்திருக்கிறது. அதன்மூலம்தான் உலக வல்லரசாகத் திகழ்கிறது அமெரிக்கா. அமெரிக்காவுக்கு இணையாக வளர முற்படும் சீனாவுக்கும் இப்போது அதே ஆசை வந்திருக்கிறது. ஆனால் சீனக் கடற்படை வலுவானதாக இருந்தாலும் அதனை முழுமையான நீலக்கடல் கடற்படை (Blue Water Navy) என்று கூற முடியாது. காரணம், சீனாவுக்கு வெளிநாடுகளில் எங்கும் தளங்கள் கிடையாது. எனவே, அந்த ஆற்றலைப் பெற முடியாத நிலையில் இருக்கிறது. அந்த நிலையை மாற்றி கடல்வழி விநியோகப் பாதைகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்த முனைகிறது சீனா. அமெரிக்கா போன்று வெளிநாடுகளில் நிரந்தரமான தளங்களை அமைக்காவிட்டாலும், தனது வசதிக்கேற்றவாறு தளங்கள் அல்லது கட்டமைப்புகளை உருவாக்க சீனா எத்தனிக்கிறது.

அதற்காகவே அண்மைக்காலமாக விமானம்தாங்கி கப்பல்கள், நீர்மூழ்கிகள், போர்க்கப்பல்களை அதிகளவில் வலுப்படுத்தி வருகிறது. அமெரிக்கா போன்று சீனா தளங்களைக் கொண்டிருக்காது போனாலும், சர்வதேச சட்டங்களுக்கு அமைய வெளிநாட்டு மூலோபாய ஆதரவுத் தளங்களைக் கொண்டிருப்பதை இனியும் தவிர்க்க முடியாது என்று சீன அரசு நாளிதழ் குறிப்பிட்டிருந்தது கவனிக்கத்தக்க விடயம்.

பரஸ்பரம் நன்மையளிக்கத்தக்க நட்பு ரீதியாக விநியோகத் தேவைக்கும் அதிகாரிகள் ஓய்வெடுக்கவும் பராமரிப்புக்காகத் தரித்து நிற்பதற்கும் எரிபொருள் நிரப்புவதற்கும் வெளிநாடுகளில் தளங்களை அமைக்கும் உரிமை சீனாவுக்கு உள்ளதாகவும் அதில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. முதல் தொகுதி ஆதரவுத் தளங்களை இந்தியப் பெருங்கடலில் சீனா அமைக்க வேணடும் என்றும் அதில் வலியுறுத்தப்பட்டுள்ளது. இந்த தளங்களை மூன்று வகையாகப் பிரிக்கப்படலாம் என்றும் அதில் யோசனை கூறப்பட்டுள்ளது. முதலாவது- அமைதிக்காலத்தில் கப்பல்களுக்கு எரிபொருளையும், பொருட்களையும் வழங்கும் தளங்கள்.

உதாரணமாக டிஜிபோட்டி துறைமுகம் ஜேமனில் உள்ள ஏடன் துறைமுகம் ஓமானில் உள்ள சலாலா? துறைமுகம் போன்றவையாகும். இரண்டாவது - நிரந்தரமான விநியோக தளங்கள். இவை போர்க்கப்பல்கள் தரித்து நிற்கவும், வேவு விமானங்கள் கடற்படை அதிகாரிகள் கரையில் ஓய்வெடுக்கவும் உதவக் கூடியவை. சிஷெல்ஸ் துறைமுகம் இதற்கு உதாரணம்

மூன்றாவது - முழுமையாகச் செயற்படும் தளங்கள். இவற்றில் பாரிய போர்க்கப்பல் ஆயுதங்கள் தரிக்கவும், ஓய்வெடுக்கவும் வசதிகள் இருக்கும். பாகிஸ்தான் இதற்கு உதார ணம். அடுத்த 10 ஆண்டுகளுக்கு மூன்று விநி யோகப் பாதைகளை அடிப்படையாக வைத்து சீனா தளங்களை அமைக்க வேண்டும் என் றும் அந்த சீன இதழில் வலியுறுத்தப்பட்டுள்ளது. முதலாவது பாதை இந்தியப் பெருங்கடலின் வடக்கில் உள்ள பாகிஸ்தான், இலங்கை, மியான்மார் ஆகிய தளங்களை இணைத்து உருவாக்கப்படும்.

இரண்டாவது பாதை இந்தியப் பெருங்கடலின் மேற்கேயுள்ள விநியோக வழி. டிஜிபோட்டி, யேமென், ஓமான், கென்யா, தன்சானியா, மொசாம்பிக் ஆகிய நாடுகளில் தளங்களை அமைத்து இதனைப் பாதுகாக்க வேண்டும்.

மூன்றாவது வழி மத்திய தெற்கு இந்தியப் பெருங்கடல்வழி. செஷெல்ஸ், மடகஸ்காரில் தளங்களை அமைத்து இதனைப்பாதுகாக்க வேண்டும் என்று சீன அரசு நாளிதழ் ஆலோசனைகளை வழங்கியிருந்தது. இந்த ஆலோசனைகளைச் சுட்டிக் காட்டிய கட்டுரைக்கும், சீன அரசுக்கும் எந்தத் தொடர்புமில்லை என்று கூற முடியாது.

ஏனென்றால், சீனாவில் அரசின் எண்ணங்களையே அந்த நாட்டு ஊடகங்கள் பிரதிபலிக்கின்றன. அத்துடன், இந்தத் திட்டத்தை சீனா ஏதோ ஒரு வகையில் செயற்படுத்த ஆரம்பித்துள்ளது என்பதற்கு நமீபியா ஓர் உதாரணம். நமீபியாவின் வல்வில் குடாவில் தளத்தை அமைக்க சீனா பேச்சுக்களை நடத்தி வருகிறது என்பதை அந்த நாட்டின் பாதுகாப்பு அமைச்சு உறுதிப்படுத்தியுள்ளது. எனவே, அடுத்த 10 ஆண்டுகளுக்குள் 18 நாடுகளில் தளங்களை அமைத்து இந்தியப் பெருங்கடலில் மூன்று விநியோக வழிகளையும் பாதுகாக்க வேண்டும் என்ற சீன நாளிதழின் கருத்தை சாதாரணமாக எடை போடவோ, உதாசீனம் செய்யவோ முடியாது.

அதேவேளை பிரிகேடியர் ருவான் வணிகசூரிய அம்பாந்தோட்டையில் சீனக் கடற்படைத் தளம் அமைக்கப்படுகிறதா என்று யாரும் சென்று பார்வையிடலாம் என்று கூறியிருந்தார். ஆனால சீனாவின் திட்டம் அவ்வாறானதல்ல. தனது படையினரை நிரந்தரமாக நிறுத்தி வைப்பதற்கான தளங்களை மட்டும் அமைக்க சீனா திட்டமிடவில்லை. விநியோகத் தேவைகளுக்கு அவ்வப்போது பயன்படுத்தும் வகையில் தளங்களை உருவாக்கவும் எத்தனிக்கிறது. சீனா கொழும்புத் துறைமுகத்தில் சீனா அமைத்துக் கொடுத்த கொள்கலன் முனையம்தான் இப்போது சீன நீர்மூழ்கிகள், போர்க்கப்பல்கள் ஓய்வெடுக்க பயன்படுத்தப்படுகின்றன.

அதுபோலவே அம்பாந்தோட்டைத் துறைமுகமும் எதிர்காலத்தில் சீனக் கடற்படையால் பயன்படுத்தப்படலாம். ஏனென்றால், அங்கு அமைக்கப்படவுள்ள நான்கு இறங்குதுறைகளின் கட்டுப்பாடு சீனாவின் வசம்தான் இருக்கப் போகிறது. அமெரிக்காவைப் பொறுத்தவரையில் தனது தளங்களை வெளிப்படையாக படைகளைக் குவித்து வைத்து பாதுகாக்கிறது.

ஆனால், சீனா அவ்வாறு செய்யவில்லை. இரகசியமாக நிதியுதவிகளைக் கொட்டி துறைமுகங்களை உருவாக்கி அவற்றின் கட்டுப்பாட்டை பேண முனைகிறது. இது இந்தியாவுக்குச் சவாலான விடயமாகவே இருக்கும். அம்பாநதோட்டைத்துறைமுகமும் சீனாவின் அத்தகையதொரு இரகசியத் தளமாகப் பேணப்படலாம். இப்போது இல்லாவிட்டாலும் எதிர்ப்புத் தெரிவிக்காது போனாலும் அம்பாந்தோட்டை துறைமுகத்தை சீனா எப்போது தனது கட்டுக்குள் கொண்டு வர முனைகிறதோ, அப்போது இந்தியா அதற்கெதிராக போர்க்கொடி உயர்த்தும் என்பதில் சந்தேகமில்லை.

**-ஹரிகரன்-**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மைத்திரிபால சிறிசேன நேர்மையான அரசியல்வாதி

## ஹிருணிகா புகழாரம்

(கொழும்பு)

**முன்னாள் மத்திய அமைச்சர் மைத்திரிபால சிறிசேன அரசியலில் தூய்மையும் நேர்மையும் கொண்டவர் எனவும் இதனால் அவர் கட்சிக்கு திரும்பி வர மாட்டார் என்பதால் கட்சியில் இருக்கும் நபர்களை பாதுகாக்க வேண்டும் எனவும் ஆளும் கட்சியின் மேல் மாகாண சபை உறுப்பினர் ஹிருணிக்கா பிரேமச்சந்திர தெரிவித்துள்ளார்.**



முன்னாள் அமைச்சர்களான ராஜித சேனாரத்னவும் மைத்திரிபால சிறிசேனவும் தனது தந்தையின் மரணத்தின் போதும் மரணத்தின் பின்னரும் தனது தந்தைக்காக அச்சமின்றி குரல் கொடுத்தவர்கள் எனவும் அவர் தெரிவித்தார்.

இப்படி ஒருவர், இருவர் என அனைவரும் சென்று விட்டால் கட்சியில் ஹெரோயின்காரர்கள், எதனோல் காரர்கள், கொள்ளைக்காரர்கள், வியாபாரிகள் மாத்திரமே எஞ்சியிருப்பர். இப்படி அனைவரும் கட்சியை விட்டுச்சென்று விட்டால் உண்மை நீல இரத்தம் கொண்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினரை தேடிக்கொள்ளவும் முடியாது. இது எமக்கு பாடத்தை கற்றுக்கொடுக்கும் காலம். சங்க, வைத்திய, குரு, விவசாயி, தொழிலாளர் என்ற பஞ்ச கொள்கை சுதந்திரக் கட்சிக்கு இருந்தது. தற்போது என்ன நேர்ந்துள்ளது. தூள், எதனோல், கொலை, ஊழல், மோசடி, கமிஷன் போன்ற விடயங்களுடன் தொடர்புடைய புதியவர்கள் கட்சிக்குள் வந்துள்ளனர். இதன் காரணமாகவே எம்மிடம் இருந்த சிறந்த மனிதர்கள் எம்மை விட்டு செல்கின்றனர் எனவும் ஹிருணக்கா பிரேமச்சந்திர தனது ஆதங்கத்தை கொட்டித் தீர்த்துள்ளார். (இ-5)

## அரசியல் சூழ்நிலைக்கேற்ப தகுந்த முடிபு எடுக்கப்படும்

(கொழும்பு)

மலையக மக்களின் நலனுக்கு எவ்வித பாதிப்புகளும் ஏற்படாத வகையில், அரசியல் சூழலுக்கேற்ப தகுந்த முடிவுகள் எடுக்கப்படும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் பெ.ராஜதுரை தெரிவித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் ராஜதுரை, ஐக்கிய தேசியக் கட்சியில் இணையவுள்ளதாக வெளிவந்த தகவல்களை உறுதிப்படுத்திக் கொள்ளும் வகையில், அவரிடம் கேட்ட போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

கடந்த 4 மாதங்களாக நாடாளுமன்றத்தில் சுயாதீனமாகவே செயற்பட்டு வருகின்றேன்.

அரசியல் நலனுக்காக அமைச்சுப் பதவிகளை பெற்றுக் கொள்கின்றார்கள்.

கடந்த காலத்தில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்க குமாரதுங்க கொண்டு வந்த பெருந்தோட்டத் துறை அமைச்சை இல்லாமல் செய்து விட்டனர்.

மலையக மக்களுக்கு தனி வீடுகள், 7 பேர்ச் காணி கொடுக்கப்பட வேண்டுமென கூறுகின்றார்கள்.

ஆனால், இதுவரை எந்த நலனையும் பெற்றுக்கொள்ள முடியாதவர்களாக மலையக மக்கள் உள்ளனர்.

தற்போதைய அரசியல் சூழலில் யார் வெற்றிபெற்றாலும் சரி, தோல்வியுற்றாலும் சரி, அது இரண்டாவது பட்சம். மலையக மக்களின் நலனில் எவ்வித பாதிப்புகளும் ஏற்படாத வகையில் தற்போதைய அரசியல் சூழ்நிலைக்கமைவாக, தகுந்த முடிவுகள் எடுக்கப்படும். என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

## கூட்டு உளநோய்க் கூற்றியல்- சமூகவியல் பிரக்ஞை
## Collective Psychopathology

(நேற்றைய தொடர்ச்சி...)

சமூகத்தின் கூட்டு எண்ணத்திலுள்ள திரிபுகளாக கூட்டுமதி குன்றுதல், கூட்டுமதி கூடுதல் (Collective Intelligence) மற்றும் கூட்டுச் சிந்தனைகள் அமையும். சமூகத்தின் ஒருமுகப்படாத புலச்சிந்தனைகள், கூட்டுக் கற்பனைச் சிந்தனைகள், கூட்டுத் திசைப்படுத்தப்பட்ட சிந்தனைகள் என்று எண்ணங்கள் திரிபு பெறும். இலங்கையில் சிங்கவம்சக் கதை ஒரு கூட்டுக் கற்பனைச் சிந்தனையே. தமிழர்களுக்கு அரசியல் தீர்வு கொடுக்கப்படாது என்பது கூட்டு ஒருமுகப்பட்ட சிந்தனையாகும். கூட்டுப் போலி நம்பிக்கையாக தமிழர் சிங்களவரை வெறுத்தல், சிங்களவர் தமிழரை வெறுத்தல், முஸ்லிம்-சிங்கள முரண்பாடுகள் அமைகின்றன.

கூட்டுப் பேச்சுத்திரிபுகளாக கூட்டான மௌனம் (Collective Silence) அமைந்துள்ளது. இது அடக்குமுறை ஆட்சியில் ஏற்படலாம்.


மக்களின் அக்கறை இன்மையினால் ஏற்படலாம். தகவல்கள் இன்மையினால் ஏற்படலாம. தகவல்களை வெளிப்படுத்த முடியாத சூழலில் ஏற்படலாம். செய்தித்தணிக்கை இதற்கு ஓர் உதாரணமாகும். மொழியாற்றல் இன்மையினால் சுதேசிகளுக்குத் தமது பிரச்சினைகளை ஆங்கிலத்தில் கூற முடியாத நிலைமையாக அமையலாம.

கூட்டான ஞாபகத் திரிபுகளாக கூட்டான மறதி அமைந்துள்ளது. (Collective Amnesia) இதில் கூட்டுப் பதகளிப்பான மறதி, அதாவது அச்சத்தின் காரணமாக நடந்தவற்றை மறத்தல். அடுத்து கூட்டுச் சோர்வான் நிலை மறதி - மனச் சோர்வினால் நடந்தவற்றை மறத்தல். அடுத்து மறக்க வேண்டும் என்ற எண்ணத்தில் கூட்டாக மறத்தல். எமது சமூகத்திற்கு ஏற்பட்ட அழிவுகள் இந்த 3 வகை அழிவுகளுக்கு உட்பட்டே உள்ளது. கூட்டான அனுபவ உணர்வுநிலை திரிபுகளாக சமூகம் தான் பெற்ற அனுபவம் மூலம் ஏற்படும் மாற்றம். உதாரணமாக 1958, 1977, 1983, 2009 அழிவுகள் தமிழ்மக்களுக்கு ஒரு சிறந்த கூட்டான அனுபவ உணர்நிலைத் திரிபினை ஏற்படுத்தி உள்ளது. இதனால் கூட்டான விழிநிலைத் திரிபுகள் பல ஏற்பட்டு உள்ளது. அவையாவன கூட்டுத் தன்மையின் ஒற்றுமையில் ஏற்படும் திரிபுகள், கூட்டுத் தன்மையின் தொடர்ச்சியில் ஏற்படும் திரிபுகள், அடுத்து கூட்டுத் தன்மையின் எல்லையினை வரையறை செய்வதில் ஏற்படும் திரிபுகள், இவற்றினைத் தமிழினம் தனது ஒற்றுமை தொடர்பாகவும், தமது இனத்தின் தொடர்ச்சி தொடர்பாகவும், அதன் எல்லைகள் தொடர்பாகவ்ும் உள்ள கூட்டான எண்ணக்கருக்களின் மாற்றத்திற்கு ஆக்கபூர்வமாகப் பயன்படுத்தலாம்.

கூட்டுவிழிநிலையில் தொடர்ச்சியில் ஏற்பட்ட மாற்றங்கள், கூட்டுத்தன்மையின் எல்லையினை வரையறை செய்வதில் உள்ள திரிபுகள் ஆகும். இதனைத் தமிழினம் தனது ஒற்றுமை தொடர்பாகவும், தனது இனத்தின் தொடர்ச்சி தொடர்பாகவும், அதன் எல்லைகள் தொடர்பாகவும் உள்ள கூட்டான எண்ணக் கருக்களின் மாற்றங்களை ஏற்படுத்துவதற்கு உதாரணமாக எடுக்கலாம்.

கூட்டான விழிநிலையில் ஏற்படும் திரிபுகளாக கூட்டான சோர்வு நிலை, கூட்டான நனவிலி நிலை (Collective Unconsciousness) கூட்டான விழிநிலை, கூட்டான மயக்கநிலை என்பன அமையும். உதாரணமாகத் தமிழ்மக்கள் இப்போது கூட்டான சோர்வு நிலையில் உள்ளனர். அரசியலைப் பொறுத்த வரையில் கூட்டான மயக்கநிலையில் உள்ளனர். கூட்டான அசைவியத் திரிபுகளாக உணர்வுகளை வெளிப்படுத்தும் போராட்டங்கள் அமையும். கூட்டான குணாம்சத் திரிபுகளாக (Collective Personality) கூட்டான சந்தேக குணம், கூட்டான தங்கிவாழும் குணாம்சம், கூட்டான கோபப்படும் குணாம்சம், கூட்டான சமூக விரோதக் குணாம்சம் என்பன் விளங்கும். கூட்டான பாலியல் திரிபுகளாக கலாசார விலகலில் இணையப்பாலியல் உறவு, ஒருபால் மணம், பலதார மணம், சிறுவர் துஷ்பிரயோகம், பாலியல் பலாத்காரங்கள் என்பன அமையும். கூட்டு உள நோய் கூற்றியல் இலங்கையின் இனப்பிரச்சினை உட்பட மத்திய கிழக்குப் பிரச்சினை, உக்ரேய்ன் பிரச்சினை, ஆபிரிக்க நாடுகளின் பிரச்சினைகளிற்கு விஞ்ஞானபூர்வமான விளக்கத்தினை அளிக்கின்றது.

உலகமயமாதலில் கணனித் தகவல் தொழில்நுட்பத்தின் வளர்ச்சி, கூட்டு வாழ்வியல் நேரடித் தாக்கத்தினால் ஏற்படுகின்றது. கூட்டு வர்த்தக கலாசார மாற்றங்களாக பணப்பரிவர்த்தனை, விரைவு உணவு என்பன அமைந்து உள்ளன. காண்பிபேசி (Skype) மூலம் உலகம் ஒரு குடும்பமாக மாறிவிட்டது. பன்முகக் கலாசார வாழ்வியலில் கூட்டு அடையாளம் சில இயங்கு தளங்களில் காணப்படுகின்றது. இவற்றில் ஒன்றே உள்நாட்டு அரசியல். இங்கு அரசியல் நடத்துபவர்கள் ஒரு, சமூகத்தின் ஒட்டுமொத்த ஆதரவினைப்பெற, கூட்டு அடையாளத்தினைத் தவறாகச் சுவீகரிப்பர்.



மருத்துவர்
சி.யமுனாநந்தா

எனவே கூட்டு அடையாளம் தொடர்பான சிறப்பான அணுகுமுறைகள், உலகில் வன்முறைகள தோன்றாது இருக்கவும், மானிட முன்னேற்றத்திற்கும் உறுதுணையாக அமையும் என்றால் மிகை இல்லை.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதுவால் தமிழகம் சீரழிய கருணாநிதி, ஜெ. காரணம்

## வைகோ பரபரப்பு குற்றச்சாட்டு



(சென்னை)


தமிழகத்தில் பூரண மது விலக்கை அமுல்படுத்த வலியுறுத்தி, கோவையில் மதிமுக சார்பில் மதுவிலக்கு விழிப்புணர்வு மரதன் ஓட்ட போட்டி நேற்று முன்தினம் நடைபெற்றது. இப்போட்டி சுந்தராபுரம் உழவர் சந்தையில் தொடங்கி மரதன் மதுக்கரை சந்தை வரை நடைபெற்றது.

பொதுப் பிரிவு, மேல்நிலைப் பாடசாலை மாணவர், உயர்நிலைப் பாடசாலை மாணவர், மாணவிகள் என நான்கு பிரிவுகளாக இப்போட்டிகள் நடைபெற்றன. போட்டியில், கல்லூரி, பாடசாலை மாணவ, மாணவியர் உட்பட ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். இதில் வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன.

போட்டியை தொடங்கி வைத்து செய்தியாளர்களிடம் வைகோ மேலும் தெரிவிக்கையில்,

தமிழகத்தில்நடைபெறும்கொலை, கொள்ளை, பாலியல் வன்முறை உள்ளிட்ட குற்றச் சம்பவங்களுக்கு மதுவே காரணம். மதுவினால் வரும் வருமானத்துக்காக மக்களை நரகத்தில் தள்ளுவதை காமராஜர், அண்ணா ஏற்கவில்லை. மதுவினால் தமிழகம் சீரழிய முதல்வர்களாக இருந்த எம்.ஜி. ஆர்., கருணாநிதி, ஜெயலலிதா ஆகியோர்தான் காரணம்.

மதுவிலக்கு குறித்து மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில், கோவையை முன்மாதிரியாகக் கொண்டு பல்வேறு நகரங்களில் மதுவிலக்கு மரதன் ஓட்டப் போட்டி நடத்த திட்டமிட்டுள்ளோம். மாணவர்கள், பொதுமக்கள் ஆகியோரது ஆதரவுடன் மதுக் கடைகளை மூடும் வரை தொடர் போராட்டங்களில் ஈடுபடுவோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)




# ஒடிசாவில் பாலம் அருகே 20 மனித மண்டைஓடுகள்

ஒடிசா மாநிலம் புரி மாவட்டத்தில் குஸ்பத்ரா என்ற ஆறு ஓடுகிறது. இந்த ஆறு ஓடும் புரி- கொனார்க் வீதியில் ஒரு மேம்பாலம் உள்ளது. இந்த பாலத்தின் கீழே 20 மனித மண்டை ஓடுகள் மற்றும் 3 எருமை மாடு மண்டை ஓடுகள் கணடெடுக்கப்பட்டது. அந்த மண்டை ஓடுகள் கறுப்பு நிறத்தில் காணப் பட்டது.

மண்டை ஓடுகளுடன் சில பூஜைப் பொருட்களும் காணப்பட்டன. ஆற்றல் தண்ணீர் வற்றியதால் இவை வெளியே தெரியவந்துள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும், "இப்பகுதியில் உள்ள சில மந்திரிவாதிகள் நடவடிக்கைகளை கவனித்து வருகிறோம். அவர்கள் இந்த மண்டை ஓடுகளை இங்கு கொண்டு வந்து போட்டார்காளா? என்பது முழு விசாரணைக்குப்பிறகே தெரிய வரும்" என. மேலும் தெரிவித்தனர். (இ-5)

# சாமியார் ராம்பால் ஆச்சிரமத்தில் ஆயுத குவியல், பாதாள சுரங்கம்

அரியானா மாநிலம் ஹிசார் மாவட்டத்தில் சத்லோக் ஆச்சிரமத்தை நடத்தி வருபவர், சாமியார் ராம்பால் (வயது 63). கடந்த 2006 ஆம் ஆண்டு தொடரப்பட்ட ஒரு கொலை வழக்கில், அவர் நீதிமன்றில் ஆஜராகாமல் இருந்து வந்ததால், அவர் மீது நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தொடரப்பட்டது.

இதில் அவரை கைது செய்ய கடந்த 18ஆம் திகதி பொலிஸார் சென்றபோது அவர்களுக்கும், சாமியாரின்ஆதரவாளர்களுக்கும்இடையே மோதல் ஏற்பட்டது. அதில், 6 பேர் பலியானார்கள். 200இற்கும் மேற்பட்டோர் காயம் அடைந்தனர். பின்னர், மறுநாள் சாமியார் கைது செய்யப்பட்டார்.

அவர் 20ஆம் திகதி நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார். அவர் மீது புதிய வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. அதன்பேரில், அவரை 5 நாடடகள் பொலிஸ் காவலில் எடுத்தனர்.கடந்த 4 நாட்களாக சாமியாரின் ஆச்சிரமத்தை சோதனையிட்டு வருகிறார்கள். 12 ஏக்கரில் ஆச்சிரமம் அமைந்திருப்பதால், அதை மூன்று மண்டலங்களாக பிரித்து சோதனையிட்டு வருகிறார்கள். பாதாள அறைகளிலும் சோதனை நடந்து வருகிறது.



இந்த சோதனையில் சாமியார் ராம்பால் சொகுசு வாழ்க்கை வாழ்ந்திருப்பது தெரிந்தது. அவரது படுக்கை அறையில் கர்ப்பத்தை கண்டறியும் கருவி இருப்பது கண்டு பிடிக்கப்பட்டது. எனவே அவர் பெண் பக்தர்களிடம் தவறாக நடந்து இருப்பார் என்ற சந்தேகம் வலுத்துள்ளது.

சோதனையில் ஆச்சிரமத்தில் நிறைய லொக்கர்கள் உள்ளன. அவற்றில், கைத்துப்பாக்கிகள், ஏர்கன்கள், இரட்டைக் குழல் துப்பாக்கிகள் மற்றும் ஏராளமான தோட்டாக்கள் இருப்பது கண்டு பிடிக்கப்பட்டன.

குண்டு துளைக்காத வாகனம், ஒரு எண்ணெய் டாங்கர் லொறி, 2 டிராக்டர்கள், ஏராளமான இரு சக்கர வாகனங்கள் உள்ளிட்டவை கண்டுபிடிக்கப்பட்டன. இச்சோதனை, மேலும் சில நாட்களுக்கு நீடிக்கும். இதற்கிடையே ஆச்சிரமத்தின் ஒரு பகுதியில் ஆயுத குவியல்கள் இருப்பதை பொலிஸார் கண்டு அதிர்ச்சி அடைந்தனர். ஒரு அறைக்குள் 26 பல்வேறு வகை துப்பாக்கிகள் இருந்தன. ஏராளமான துப்பாக்கி குணடுகளும் இருந்தன. இவ்வளவு துப்பாக்கிகளை சாமியார் ஏன் வாங்கி வைத்திருந்தார் என்று விசாரணை நடந்து வருகிறது. இதற்காக பொலிஸார், சாமியார் ராம்பாலை ஆச்சிரமத்துக்கு அழைத்து சென்று வருகிறார்கள்.

இதற்கிடையே நேற்று முன்தினம மாலை ஆச்சிரமத்தின் மற்றொரு பகுதியில் சுமார் 10 ஆயிரம் லத்தி கம்புகள் மறைத்து வைக்கப்பட்டிருந்தது கண்டு பிடிக்கப்பட்டது. மற்றொரு அறையில் ஏராளமான புல்லட் --புரூப் உடைகள் இருந்தன. சில லொக்கர் பெட்டிகள் உடைக் கப்பட்டிருந்தன. சில லொக்கர் பெட்டி களை பொலிஸார் உடைத்து திறந்தனர். அவற்றில் ஏராளமான ஆவணங்கள் இருந்தன. அவற்றை பொலிஸார் ஆய்வு செய்து வருகிறார்கள்.

சுமார் 10 லொக்கர் பெட்டிகளை உடைக்க முடியவில்லை. அந்த பெட்டிகளில் என்ன இருக்கிறது என்று தெரியவில்லை. இதற்கிடையே ஆச்சிரமத் துக்குள் சாமியார் ராம்பால் இரகசிய சுரங்க அறைகள் அமைத்திருந்ததாக பொலிசாருக்கு தகவல் கிடைத்துள்ளது. அந்த சுரங்க அறைகளை கண்டுபிடிக்க பொலிஸார் நவீன கருவிகளுடன் சோதனை நடத்தி வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# பா.ஜனதா மீது சோனியா காந்தி தாக்கு

ஜார்கண்ட் மாநிலத்தில் காங்கிரஸ் வேட்பாளர்களை ஆதரித்து பிரசாரம் செய்த சோனியாகாந்தி, பாரதிய ஜனதா மீது குற்றம் சாட்டியுள்ளார்.

தல்டோன்கஞ்ச் என்ற இடத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற தேர்தல் பிரசார கூட்டத்தில் காங்கிரஸ் வேட்பாளர் கே.என்.திரிபாதியை ஆதரித்து பேசினார். அப்போது பாரதிய ஜனதா கட்சியை அவர் கடுமையாக தாக்கினார்.

இந்தியாவை வளர்ச்சிப்பாதையில் கொண்டு சென்றதில் காங்கிரஸ் கட்சிக்கு மிகப்பெரிய பங்கு உள்ளது. முந்தைய ஐக்கிய முற்போக்கு கூட்டணி ஆட்சியின் போது கொண்டு வரப்பட்ட அபிவிருத்தி திட்டங்கள் இந்தியாவை இப்போது வளர்ச்சி அடைந்த நாடுகளில் ஒன்றாக மாற்றுவதற்கு உதவியாக அமைந்துள்ளன.

ஜார்கண்ட் மாநிலம் உருவாகி 14 ஆண்டுகள் ஆகின்றன. இதில் 11 ஆண்டுகள் பாரதிய ஜனதாதான் ஆட்சியில் இருந்திருக்கிறது. ஆனால இந்த மாநிலத்தில் முன்பு இருந்த பிரச்சினைகள் இன்னும் அப்படியே உள்ளன. மத்தியில் காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்கு கூட்டணி ஆட்சியில் இருந்த போது மின்சாரம், வீதி, குடிநீர், சுகாதாரம் போன்ற வசதிகளை செய்து கொடுப்பதற்காக ஜார்கண்ட் மாநிலத்துக்கு கோடிக்கணக்கான ரூபாய் பணத்தை வழங்கியது. ஆனால் இந்த மாநிலத்தில் அப்போது ஆட்சிப் பொறுப்பில் இருந்த பாரதிய ஜனதா அந்த நிதியை பயன்படுத்திக் கொள்ளவில்லை.

ஜார்கண்ட் மாநிலத்தில் 40 இலட்சம் குடும்பங்கள் வறுமை கோட்டுக்கு கீழே உள்ளன. மாநிலத்தில் வேலைவாய்ப்பை உருவாக்குவதற்காக முன்பு ஆட்சியில் இருந்த பாரதிய ஜனதா எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

# திரிணாமுல் காங்கிரஸ்-பா.ஜ.க தொண்டர்கள் இடையே மோதல்

(புதுடில்லி)

ஹவுரா மாவட்டத்தில் திரிணாமுல் காங்கிரஸ் - பாரதீய ஜனதா தொண்டர்கள் இடையே நேற்று முன்தினம் மோதல் நடைபெற்ற போது வெடிகுண்டு வீசப்பட்டது. இதில் 2 பேர் காயம் அடைந்தனர் என்று பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாரதிய ஜனதா கூட்டத்தில் முடிவுபெறாத வெடிகுண்டு வெடித்தபோது மக்கள் பாதுகாப்புக்காக வேகமாக ஓடியபோது இருவர் காயம் அடைந்தனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. குழப்பம் காரணமாக இச்சம்பவம் நடைபெற்றது என்று கூறப்படுகிறது. பாரதிய ஜனதா கட்சியின் தேசிய தலைவர் அமித்ஷா வரும் 30ஆம் திகதி மேற்கு வங்காளம் வருகிறார். இது தொடர்பாக பாரதிய ஜனதா கட்சியின் கூட்டம் நடைபெற்றது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. ஹவ்ரா மாவட்ட பாரதிய ஜனதா கட்சியின் இளைஞர் அணி தலைவர் உமேஷ ராய் கூறுகையில், "பாரதீய ஜனதா தொண்டர்கள் மீது, திரிணாமுல் காங்கிரஸ் கட்சியினர் திடீரென குண்டுகளை வீசினர், இதில் இரண்டு பேர் காயம் அடைந்தனர்," என்றார். இது தொடர்பாக விசாரிக்கப்பட்டு வருகிறது. (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழிற்கும் கிளிநொச்சிக்கும் இடையிலான நகரப் புகையிரதச் சேவை நாளை ஆரம்பம்

## புகையிரத திணைக்களம் தகவல்

யாழ்ப்பாணத்திற்கும் கிளிநொச்சிக்கும் இடையிலான அரச மற்றும் தனியார் துறைகளைச் சேர்ந்த பணியாளர்கள் உட்பட பொது மக்களின் நலன்கருதி நகர புகையிரத சேவையொன்று நாளை புதன்கிழமை காலை 6.05 மணிக்கு யாழ். புகையிரத நிலையத்திலிருந்து கிளிநொச்சி புகையிரத நிலையம் வரை தொடர் புகையிரத சேவையினை ஆரம்பிக்கவுள்ளதாக புகையிரத திணைக்களம் அறிவித்துள்ளது.

இது தொடர்பாக புகையிரத திணைக்கத்தினால் வெளியிடப்பட்டுள்ள செய்தி குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

யாழ்ப்பாணப் புகையிரத நிலையத்திலிருந்து காலை 6.05 மணிக்கு ஆரம்பிக்கப்படும் இச் சேவையானது கிளிநொச்சி புகையிரத நிலையத்தை காலை 7.39 மணிக்கு சென்றடையும்.

பின்னர் காலை 8.05 மணிக்கு கிளிநொச்சி புகையிரத நிலையத்தில் இருந்து புகையிரதம் புறப்பட்டு, யாழ்ப்பாண புகையிரத நிலையத்தை முற்பகல் 10.21 மணிக்கு வந்தடையும்.

அதன்பின்னர் யாழ்.புகையிரத நிலையத்திலிருந்து மாலை 4 மணிக்கு புறப்பட்டு கிளிநொச்சி புகையிரத நிலையத்தை மாலை 5.30 மணிக்கு சென்றடையும்.

அதனைத் தொடர்ந்து கிளிநொச்சி புகையிரத நிலையத்தில் இருந்து மாலை 5.55 மணிக்கு புறப்பட்டு யாழ்.புகையிரத நிலையத்தை இரவு 7.52 மணிக்கு வந்தடையும்.

இப் புகையிரத சேவை மூன்றாம் வகுப்பு ஆசனங்களைக் கொண்டதாகவும் யாழ்ப்பாணத்திற்கும் கிளிநொச்சிக்கும் இடையிலான சாதாரண கட்டணமாக 90 ரூபா மட்டுமே அறவிடப்படுமென அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப் புகையிரதத்தில் தொடர்ந்து பயணிக்க விரும்புபவர்கள் பருவகால சீட்டையினைப் பெற்று பயணிப்பதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-15)







துணுக்காய் கல்வி வலயத்திற்குட்பட்ட இடைநிலைப்பிரிவு பாடசாலை மாணவர்களுக்கு இடையில் நடைபெற்ற வலய மட்ட விஞ்ஞான உபகரணக் காட்சியும்பரிசளிப்பு நிகழ்வும் கடந்த 18 ஆம் திகதி காலைமு/மாங்குளம் மகாவித்தியாலயத்தில் நடைபெற்றபோது.

(படங்கள்:- மல்லாவி செய்தியாளர்)

# பயணிக்கக்கூடிய வகையில் வீதியை புனரமைத்துத்தர மக்கள் கோரிக்கை

(ஜெயந்திநகர்)

கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட திருநகர் ஊடாக ஜெயந்தி நகர் செல்லும் பிரதான கிரவல் வீதியில் குன்றும் குழியும் ஏற்பட்டு அவற்றில் மழை நீர் தேங்கி நிற்பதால் போக்குவரத்தின் போது இடையூறு ஏற்படுவதாக பொது மக்களால் தெரிவிக்கப்படுகின்றது.

இவ் வீதியூடாக தினமும் ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் மற்றும் வாகனங்கள் என்பன பயணித்து வருகின்றன. உருத்திரபுரத்திலிருந்து கிளிநொச்சிக்கான பேருந்து சேவை இவ் வழியூடாகவே நடைபெற்று வருகின்றது.

குன்றும் குழியுமாக காணப்படும் இவ்வீதியானது நீண்டகாலமாக திருத்தப் பணிகள் இடம்பெறாது காணப்படுகின்றது.

இவ்வீதியைத் திருத்தித்தருமாறு கிளிநொச்சி பிரதேச சபைக்கு நேரில் சென்று பொதுமக்கள் முறையிட்டும் கடிதம் மூலம் வழங்கியும் எதுவித நடவடிக்கையும் இதுவரை எடுக்கப்படாது கைவிடப்பட்ட நிலையில் காணப்படுவதாக அப்பகுதி மக்களால் சுட்டிக் காட்டப்படுகிறது.

குறித்த வீதியில் கிளி/இந்துக் கல்லூரி பாடசாலை அமைந்துள்ளது. இப்பாடசாலைக்கு பாதை வழியாகவே மாணவர்கள் சென்று வருகின்றனர். மழை காலம் ஆரம்பித்துள்ள நிலையில் குழிகளில் தேங்கி நிற்கும் நீரினால் தமது பாடசாலை சீருடைகள் அழுக்கடைவதாக மாணவர்கள் தெரிவிக்கின்றனர்.

ஏற்கனவே பலத்த சேதமடைந்துள்ள இவ் வீதியானது மழை பெய்து கொண்டிருப்பதன் காரணத்தால் பயணிக்க முடியாத சூழ்நிலை ஏற்படுமோ என மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

எனவே கவனிப்பாரின்றி காணப்படும் இவ் வீதியை புனரமைத்து தருமாறு அங்குள்ள மக்களால் சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு கோரிக்கை விடப்பட்டுள்ளது. (2-284)

### மீள்குடியேற்ற அமைச்சின் நிதியில்

# மலசலகூடங்கள், கிணறுகள் அமைக்கப்படும் பணி பூர்த்தி

மீள்குடியேற்ற அமைச்சின் 16.55 மில்லியன் ரூபாய் நிதியுதவியில், கிளிநொச்சி மாவட்டத்தில் 295 மலசலகூடங்களும் 10 பொதுக் கிணறுகளும் அமைக்கப்பட்டுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட செயலக திட்டமிடல் பிரிவுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மலசலகூடங்கள், கிணறுகள் அமைப்பதற்கான நிதி, கடந்த ஏப்ரல் மாதம் மீள்குடியேற்ற அமைச்சால் கிளிநொச்சி மாவட்ட செயலகத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சி, கண்டாவளை, பூநகரி, பச்சிலைப்பள்ளி ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளில் மலசலகூடங்கள்அமைப்பதற்கான பயனாளிகள் தெரிவும் பொதுக்கிணறுகள் அமைப்பதற்கான இடங்கள் தெரிவும் இடம்பெற்றன.

இவற்றுக்கான வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு, தற்போது 295 மலசலகூடங்களும் 10 பொதுக்கிணறுகளும் அமைக்கப்பட்டுள்ளதாகவும் அத்தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த 2013ஆம் ஆண்டும் மீள்குடியேற்ற அமைச்சின்14.8 மில்லியன் ரூபாய் நிதியில், கிளிநொச்சி மாவட்டத்தில் 200 மலசல கூடங்களும் 10 பொதுக்கிணறுகளும் அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.(2)




# முல்லை.-ஒட்டுசுட்டான் வீதியில் கட்டாக்காலிகளால் தொல்லை

### கட்டுப்படுத்துமாறு பொதுமக்கள் கோரிக்கை



(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு-ஒட்டுசுட்டான் பிரதான வீதியில் பகல் மற்றும் இரவு நேரங்களில் சுற்றித்திரியும் கட்டாக்காலிகளினால் விபத்துச் சம்பவங்கள் இடம்பெறுவதாகவும் அதனைக் கட்டுப்படுத்துவதற்கு உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

முல்லைத்தீவு தொடக்கம் மாஞ்சோலை, முள்ளியவளை ஊடாக, ஒட்டுசுட்டான் செல்லும் பிரதான வீதியில் பகல் மற்றும் இரவு நேரங்களில் கட்டாக்காலியாகத் திரியும் ஆடுகள், மாடுகள் கூட்டமாகச் சுற்றித்திரிவது, படுத்துறங்குவது என்பவற்றினால் அவ்வீதிகளின் ஊடாக பயணிக்கும் பயணிகள் பல்வேறுபட்ட அசௌகரியங்களை எதிர்நோக்கி வருவதாகக் குறிப்பிடுகின்றனர்.

குறிப்பாக இரவு நேரங்களில் மாடுகள் வீதியின் நடுவே நிற்பது மற்றும் படுத்துறங்குவது என்பவற்றினால் அடிக்கடி சிறு விபத்துச்சம்பவங்களும் இடம்பெற்று உயிராபத்து ஏற்படும் நிலை காணப்படுவதாகவும் பயணிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் முன்னாள் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சம்பிக்க ஸ்ரீவர்தன மற்றும் கரைதுறைப்பற்று பிரதேச சபையினர் இணைந்து கட்டாக்காலிகளை கட்டுப்படுத்துவது தொடர்பில் அதிகாரிகளுடனும் பொதுமக்களுடனும் கலந்துரையாடியதுடன், அது தொடர்பில் தீவிர முயற்சிகளையும் மேற்கொண்டிருந்தனர்.

கடந்த காலம் குறைவடைந்த கட்டாக்காலிகளின் தொல்லை தற்போது மீண்டும் தலைதூக்கியுள்ளதாக மக்கள் தெரிவிக்கின்றனர். (2)

## அனர்த்த பாதுகாப்பு குறித்த முகாமைத்துவச் செயலமர்வு

(மல்லாவி)

அனர்த்த பாதுகாப்பு அமைச்சின் கிளிநொச்சி மாவட்ட பிரிவின் ஏற்பாட்டில் அனர்த்த பாதுகாப்பு முகாமைத்துவம் எனும் தொனிப்பொருளில் செயலமர்வு ஒன்று இன்று செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள ஊடகவியலாளர்களுக்கு கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நடைபெறவுள்ளதாக அனர்த்த பாதுகாப்பு அமைச்சின் கிளிநொச்சி மாவட்ட உதவிப் பணிப்பாளர் ஸ். சுகுணதாஸ் அறிவித்துள்ளார். (2-15)

# விஞ்ஞான பாட விநாடிவினா போட்டி முடிபுகள்

துணுக்காய் கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் தரம் 6-11 வரையான மாணவர்களுக்கிடையில் விஞ்ஞான பாடத்தில் தமிழ் மொழி மற்றும் ஆங்கிலமொழி மூலமாக வலயமட்ட விநாடிவினாப் போட்டி அண்மையில் நடை பெற்றது.

இதில் முதல் மூன்று இடங்களையும் பெற்று வெற்றிபெற்ற மாணவர்களின் பெயர் விபரங்களை துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி எல்.மாலினி வெனிற்றன் அறிவித்துள்ளார்.

அதன்படி பெயர்விபரம் வருமாறு.

தமிழ்மொழி மூலம்(தரம்-6)

(மூவர் முதலாமிடம்) எஸ்.கிரிசன் (மு/தென்னியன்குளம் அ.த.க.பாடசாலை), ம.மதுஷா, யோ.சதுர்சன் (மு/பாலிநகர் மகா வித்தியாலயம்)

தரம்-7

போ.கபிலன், (இருவர் இரண்டாமிடம்) இ.சாதனா, பி.சதானுகா (மு/மல்லாவி மத்திய கல்லூரி)

தரம்-8

யோ.டிலானி (மு/பாலிநகர் மகா வித்தியாலயம்), ஜே.சாரங்கன் (மு/ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயம்), பா.அஜிந்தன் (மு/மல்லாவி மத்திய கல்லூரி)

தரம்-9

(இருவர் முதலாமிடம்) ர.பிறைவாணி,ம.சுலக்சனா (மு/யோகபுரம் மகா வித்தியாலயம்), ச.பிரியங்கா (மு/திருமுறிகண்டி இந்து வித்தியாலயம்)

தரம்-10

(மூவர் முதலாமிடம்) ஜெ.கேதாரணி (மு/பாலிநகர் மகாவித்தியாலயம்,யோ. நிரோஜா (மு/யோகபுரம் மகா வித்தியாலயம்),க. சோபிதன் (மு/துணுக்காய் அ.த.க.பாடசாலை)

தரம்11

ந.லினுசியா(மு/யோகபுரம்மகாவித்தியாலயம்),தி.பிரசாந்தினி, நி.சஸ்திகா (மு/பாலிநகர் மகாவித்தி யாலயம்)

ஆங்கில மொழிமூலம்

(தரம்-6)

(மூவர் முதலாமிடம்) ஜெ.துலக்சிகா,பி.டிலுக்சிகா, தி.துவாரகன்(மு/மல்லாவி மத்திய கல்லூரி)

தரம்-7

வி.மதுசன் (மு/மல்லாவி மத்திய கல்லூரி), சா.செந்தூரன்(மு/மாங்குளம் மகா வித்தியாலயம்),வ. பிரியங்கா(மு/ஒட்டுசுட்டான் மகா வித்தியாலயம்)

தரம்-8

ஜ.துவாரகா(மு/மாங்குளம் மகா வித்தியாலயம்),லு.டிலக்சன்(மு/மாங்குளம் மகா வித்தியாலயம்)

தரம்-9

ச.நஜோசிகா,இ.நிக்சனா(மு/ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயம்), லு.நிதிதா (மு/மாங்குளம் மகா வித் தியாலயம்)

இவர்களுக்கான மாகாண மட்டப் போட்டி எதிர்வரும் 30ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு வவுனியா சைவ பிரகாச மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளதாக அவா மேலும் அறிவித்துள்ளார். (2-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தல் விஞ்ஞாபனம் வெளியானதும் முடிவு

## மு.கா. அறிவிப்பு



**எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் யாருக்கு ஆதரவளிப்பது என்பது தொடர்பில் இரு பிரதான வேட்பாளர்களினதும் தேர்தல் விஞ்ஞாபனங்கள் வெளிவந்ததும் முடிவெடுக்கவுள்ளதாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் வொதுச் செயலாளர் நாயகமும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஹஸன் அலி தெரிவித்துள்ளார்.**

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிமுதல் மாலை 2 மணி வரை, கொழும்பு பம்பலப்பிட்டி சிலோன் சிற்றி ஹோட்டலில், முஸ்லிம் காங்கிரஸின் உயர்மட்ட உறுப்பினர்களுக்கிடையிலான கலந்துரையாடல் இடம்பெற்றது. இந்தக் கலந்துரையாடலில், உறுப்பினர்களின் ஏகோபித்த முடிவுக்கிணங்கவே இத்தீர்மானம் எடுக்கப்பட்டதாக ஹஸன அலி தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

முஸ்லிம் காங்கிரஸானது அவசரப்பட்டு முடிவெடுக்கும் கட்சியல்ல. முஸ்லிம் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு நீதி வழங்கக் கூடியதாகவும், வடக்கு - கிழக்கு வாழ் முஸ்லிம்களின் பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வு வழங்கக் கூடியதாகவும் எவர் எமக்கு வாக்குறிதியளிக்கிறார்களோ, அவர்களை நாங்கள் ஆதரிக்கவுள்ளோம்.

இரு தரப்பின் பிரதான வேட்பாளர்கள் இருவரும் இதுவரை தேர்தல் விஞ்ஞானபனம் தொடர்பில் தெரிவிக்கவில்லை. ஆகையினால், அவர்களின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் என்ன சொல்லபோகின்றார்கள் என்பது தொடர்பில் கூர்ந்து அவதானிக்கவுள்ளோம்.

அவர்களின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் முஸ்லிம் மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றக் கூடியவர்கள் யார் என்பது தொடர்பில் எமது கட்சியின் உயர்பீடம் கூடி முடிவெடுக்கும். அதன் பின்னரதான், எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் எவரை ஆதரிப்பது என்பது தொடர்பில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிஸ் முடிவினை எடுக்கும் என அவர் மேலும் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கரஸின் தலைவரும் அமைசசருமான ரவூப் ஹக்கீம் தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்ற கூட்டத்தில், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாணசபை உறுப்பினர்கள், உள்ளூராட்சி மன்ற தலைவர்கள் என அனைவரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-5)

## ஊடக அமைப்பு கடும் கண்டனம்

சிரச தொலைக்காட்சியில் கடந்த சனிக்கிழமை ஒளிபரப்பான சடன நிகழ்ச்சிக்கு தடங்கல் ஏற்படுத்தியது தொடர்பில் ஊடக சுதந்திரத்துக்கான செயற்பாட்டுக் குழு கடுமையான கண்டனம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக சமன்வக ஆராச்சி தலைமையிலான குறித்த அமைப்பு ஊடக அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

அரசாங்கம் கருத்துச் சுதந்திரத்தை கடுமையாக நசுக்கி வருகின்றது. பொது மக்களுககுத் தகவல்கள் சென்றடைவதை தடுக்கும் முயற்சிகளை மேற்கொண்டுள்ளது.


இதன் ஒரு கட்டமாகவே சடன நிகழ்ச்சி ஒளிபரப்பான நேரம் சிரச தொலைக்காட்சியின் ஒளிபரப்பில் தடங்கல் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இது ஊடக சுதந்திரத்தை மீறும் செயல் மட்டுமன்றி, பொதுமக்களை அச்சுறுத்தும் செயலுக்கும் ஒப்பானதாகும். தேசிய மட்ட தேர்தல் ஒன்றை நாடு எதிர்நோக்கியுள்ள நிலையில் இதனை கடுமையாக கண்டிக்கின்றோம்.

மேலும் அரசாங்கத்தின் இந்த அராஜகச் செயல் குறித்து தேர்தல் ஆணையாளரிடம் முறையிடவுள்ளோம் என்றும் ஊடக சுதந்திரத்துக்கான செயற்பாட்டுக் குழு தனது அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளது. (இ-5)

# மோடிக்கு விஜய் நன்றி தெரிவிப்பு





இலங்கை சிறையில் வாடிய 5 தமிழக மீனவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுத்த பிரதமர் மோடிக்கு நன்றி தெரிவித்து இளைய தளபதி நடிகர் விஜய் கடிதம் எழுதியுள்ளார்.

2011 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் கடலில் மீன் பிடித்துக் கொண்டிருந்த இராமநாதபுரம் மாவட்டம் தங்கச்சிமடத்தைச சேர்ந்த எமர்சன், வில்சன், அகஸ்டஸ், பிரசாத், லாங் லெட் ஆகிய 5 பேரை இலங்கைகடற படை கைது செய்து அழைத்துச் சென்றது. போதைப் பொருள கடத்தியதாக அவர்கள் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டது.

இந்த வழக்கை விசாரித்த கொழும்பு மேல் நீதிமன்றம் அவர்களுக்கு மரண தண்டனை விதித்தது. 5 மீனவர்களை காப்பாற்ற எடுத்த முயற்சியும், இராஜதந்திரங்களும் பாராட்டுக்குரியது. இந்நிலையில் மத்திய அரசு எடுத்த முயற்சியால் அவர்கள் விடுதலை செய்யப்பட்டு ஊர் திரும்புயுள்ளனர்.

இது குறித்து நடிகர் விஜய் பிரதமர் நரேந்திர மோடிக்கு கடிதம் ஒன்றை எழுதியுள்ளார். அந்த கடிதத்தில் அவர் கூறியிருப்பதாவது,

தமிழ்நாட்டில் இராமநாதபுரம் மாவட்டம் தங்கச்சிமடத்தைச் சேர்ந்த எமரசன், வில்சன், அகஸ்டஸ், பிரசாத, லாங்லெட் ஆகிய 5 மீனவர்களுக்கும் கொழும்பு மேல் நீதிமன்றம் தூக்கு தண்டனை விதித்திருந்தது.

மேற்கண்ட மீனவர்களின உயிரைக் காப்பாற்ற தாங்கள் எடுத்த முயற்சிகளும், இராஜதந்திரங்களும் மிகுந்த பாராட்டுக்குரியவை. 5 மீனவர்களின் விடுதலையால் 5 குடும்பங்கள் மட்டும் சந்தோசமடையவில்லை. ஒட்டுமொத்த தமிழகமே சந்தோசம் அடைந்துள்ளது.

தினசரி கடலுக்குள் [illegible] மீன் கிடைத்தால் மட்டுமே வாழ்க்கை என்று போராடுபவர்கள் மீனவர்கள்.

இப்படி தினம் தினம் வாழ்க்கையுடன் போராடும் மீனவர்களுக்கு இப்படி தேவையற்ற தொந்தரவுகள் மேலும் பயத்தையும், அச்சுறுததலையும் தரும்.

இந்த சமூக மக்கள் இனி வருங்காலத்திலாவது பயமின்றி நிம்மதியாக தொழில் செய்ய தகுந்த பாதுகாப்பை ஏற்படுத்தித்தர தாங்கள் முயற்சி எடுக்க வேண்டும் என்று இதன்மூலம் வேண் டுகோள் விடுக்கிறேன் என்று அவர் தனது கடிதத்தில் மே[illegible] தெரிவித்துள்ளார். (இ-5)

# சைவப்பண்பாட்டுக் கல்விச் செல்நெறியில் நாவலர்

நாவலரின் சிந்தனை வழியில் 1876 ஆம் ஆண்டு கனகரத்தின முதலியார் அவர்களால் சைவ ஆங்கில பாடசாலையாக ஸ்தாபிக்கப்பட்டுத் தொடர்ந்து அவர் மகன் செல்லப்பா முதலியார் அவர்களால் வழி நடத்தப்பட்டதே யாழ். விக்ரோறியாக் கல்லூரி என்பது தற்போது பலருக்குத் தெரியாமல் உள்ளது.

நாவலர் சைவர்கள் சைவ வாழ்க்கையை முறையாகப் பின்பற்றவும் அப்போதைய தேவையான ஆங்கில மொழி அறிவை பெற்றுக்கொள்வதற்குமான தேவையை நிறைவு செய்கின்ற வகையில் கல்லூரிகளைத் தோற்றுவிப்பதற்கான முயற்சியில் கடுமையாக உழைத்தவர் நாவலரின் அந்நோக்கை நிறைவு செய்வதாக விக்ரோறியாக் கல்லூரி அதன் ஆரம்பம் முதல் தற்காலம் வரையும் செயற்பட்டு வருகின்றது.

மிஷனரிமாரின் ஆங்கிலப் பாடசாலைகளில் கல்வி கற்கும் சைவத்தமிழ் பண்பாடு பெரிதும் கட்டுப்படுத்தப்பட்டது. என்வே சைவச்சூழலில் சைவப்பிள்ளைகள் ஆங்கிலத்தைக் கற்பதனால் சைவப் பண்பாட்டாளர்களாக மாணவர்கள் உருவாக முடியும் என்ற பெருநோக்கிலேயே சைவ ஆங்கில பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டன.


அவ்வகையில் சைவத்தையும் அதன் வளர்ச்சிக் கருவியாக தமிழையும் தன் இரு கண்ணாக மதித்துப்போற்றி அதற்காகவே இல்லற வாழ்க்கையையும் ஆசிரியத் தொழிலையும் துறந்து காலத்தின் தேவையைக் கருத்திற்கொண்டவராக ஆங்கிலம் கற்றலின் அவசியத்தையும் இன்றியமையாமையையும் உணர்ந்திருந்தமையினாலேயே நாவலர் சைவ ஆங்கில கல்லூரிகளின் தோற்றத்திற்கு வழிசமைத்தார்.

**எக்காலத்திலும் வித்தியாதானமே சிறந்தது. வித்தியானத்திற்கு மேலாகிய தருமம் யாதொன்றுமில்லை கல்வி என்பது விளக்கேற்றல்** என்பது நாவலரின் மரபுவழிப்பட்ட சிந்தனையாகும். ஆசிரியர் என்பவர் நன்னெறியாளராகவும் நுண்ணாய்வாளராகவும் இருத்தல் வேண்டும் என்பதும் கல்வியின் பயன் அறிவு, அறிவின் பயன், ஒழுக்கம் என்னும் கொள்கைக்கேற்ப பாடசாலைகள் மூலம் சிறந்த அறிவைப் பெறவும் அந்த அறிவின் பயனாக சிறந்த ஒழுக்க சீலர்கள் உருவாகவும் சைவத்தமிழ்ப் பாடசாலைகளையும் சைவ ஆங்கில பாடசாலைகளையும்ஸ்தாபிப்பதற்கு பெரும்பாடுபட்டவரே நாவலர்.

நாவலரின் கல்வி பற்றிய சிந்தனைகள் சைவக்கல்வி வரலாற்றில் மாத்திரமல்லாமல் ஈழத்துக் கல்வி வரலாற்றிலும் முக்கியத்துவம் உடையது.

இத்தகைய பெருந்தகைக்கு இலங்கையிலுள்ள முன்னோடிச் சைவப் பாடசாலைகளில்உருவச்சிலைஅமைத்து அவரின் பணிகளை நாம் நினைவு கூர்ந்து நன்றியுடையவர்களாக இருப்பதுடன் நாம் உண்மைச் சைவர்களாக வாழவும் நாவலரின் நினைவு நமக்கு அவசியமானது என்பதைக்கருத்திற் கொண்டு பெரும் பணி ஆற்றி வரும் நாவலர் நற்பணி மன்ற ஸ்தாபகரும் அதன் தற்போதைய தலைவருமான கருணை ஆனந்தன் பாராட்டப்படவேண்டியவர்.

இன்றைய தினம் யா/சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியில் நாவலரின் உருவச்சிலை திறப்பு விழா நடைபெறுவது சிறப்பான விடயமாகும். நாவலரின் கொள்கைகளை பேணிக் காத்துவரும் இப்பாடசாலையில் நாவலரைப் போற்றி வணங்குவது மாணவர்களை நல்லொழுக்க நெறிக்கு இட்டுச் செல்லும் செயற்பாடாக அமையும். நாவலர் வாழ்ந்து காட்டிய சைவப்பண்பாடு தழைப்பதற்கு ஆற்றிய பணியை சைவச் சிறார்களிடம் வளர்க்கவேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.



**திருமதி நாச்சியார் செல்வநாயகம்**
**ஓய்வுநிலை, முதுநிலை விரிவுரையாளர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வவுனியா வர்த்தக சங்கத்தினரால் கொஸ்லாந்த மக்களுக்கு பொருளுதவி



(குருமன்காடு)

வவுனியா மாவட்ட வர்த்தகர் சங்கத்தினரால் பதுளை மாவட்டத்தில் ஏற்பட்ட மண்சரிவினால் பாதிக்கப்பட்ட கொஸ்லாந்த மக்களுக்கு வவுனியா நகரில் உள்ள கடைகளில் சேகரிக்கப்பட்ட பொருட்களை அண்மையில் வர்த்தக சங்க காரியாலய அலுவலர் வர்த்தக சங்க தலைவர் ராஜலிங்கத்திடம் ஒப்படைத்தார்.

இது தொடர்பில் வர்த்தக சங்க தலைவர் தெரிவிக்கையில்,

வவுனியா மாவட்டத்திலுள்ள வர்த்தக சங்கத்தில் உள்ள வர்த்தக நிலையங்களைச் சேர்ந்தவர்கள் இன,மத வேறுபாடின்றி பாதிக்கப்பட்ட மக்களுக்கு பல பொருட்களையும் பணத்தினையும் வழங்கியிருந்தனர். தலா ஒரு குடும்பத்திற்கு 4 ஆயிரத்து 500 ரூபா பெறுமதியான பொருட்கள் பணமும் வழங்கப்பட வுள்ளதாக அவர் தெரிவித்தார். (2-250)

## வைத்தியசாலை கதிரியக்கப் பிரிவில் தீ!

(முள்ளியவளை)

முள்ளியவளை மாஞ்சோலையில் அமைந்துள்ள முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் திடீரென்று ஏற்பட்ட மின்னொழுக்கு காரணமாக தீ பரவியமையால் வைத்தியசாலையின் கதிரியக்கப்பிரிவின் அறையின் உட்புறம் முற்றாக எரிந்து நாசமாகியதுடன் அதனுள் வைக்கப்பட்டிருந்த மின்சாதனப் பொருட்களும் தீயில் கருகின.

இச் சம்பவம் நேற்றுக்காலை 7 மணியளவில் நடைபெற்றது.

இத் தீச் சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது,

வைத்தியசாலையின்கீழ் தளத்தில் உள்ள கதிரியக்க அறையில் மின்சாதனம் ஒன்றில் ஏற்பட்ட மின்னொழுக்கு காரணமாக தீ கதிரியக்க பிரிவின் அறை முழுவதும் பரவியது. இதனையடுத்து அவ் விடம் முழுவதும் புகைமண்டலமாக காணப்பட்டது.

இந்நிலையில் அவ் அறையில் கடமையில் இருந்த தாதியொருவர் வைத்தியசாலை நிர்வாகத்தினருக்கு இது தொடர்பில் அறிவித்துள்ளார்.


இதனையடுத்து இராணுவத்தினர் உதவிக்கு அழைக்கப்பட்டனர்.

சுமார் ஒரு மணிநேரம் வரை தீயைக் கட்டுப்பாட்டினுள் கொண்டு வருவதற்காக வைத்தியசாலை நிர்வாகத்தினரும் இராணுவத்தினரும் தீயணைக்கும் இயந்திரங்கள் ஊடாக போராடி தீயைக் கட்டுப்படுத்தினர்.


இத் தீயில் கருகி கதிரியக்கப் பிரிவின் அறையில் வைக்கப்பட்டிருந்த இயந்திரமொன்று முற்றாக எரிந்துள்ளதாக வைத்தியசாலை தகவல் தெரிவிக்கின்றன.

இத் தீச்சுவாலையினால் வைத்தியசாலை கட்டடம் முழுவதும் புகை பிடித்த நிலையில் காணப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது. (2-300)



## முச்சக்கரவண்டியும் மோ.சைக்கிளும் மோதிய விபத்தில் இருவர் காயம்



(குருமன்காடு)

வவுனியா, வைரவ புளியங்குளம் பகுதியில் மோட்டார் சைக்கிளும் முச்சக்கரவண்டியும் சந்தியைக் கடக்க முற்பட்ட வேளை மோதிய விபத்தில் இருவர் காயமடைந்த நிலையில் வவுனியா மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

முச்சக்கரவண்டியும் பலத்த சேதமடைந்தது. இச்சம்பவம் நேற்றுக் காலை வைரவபுளியங்குளம், கதிரேசு [illegible]வில் இடம்பெற்றது.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

கதிரேசு வீதி வழியாக பயணித்த முச்சக்கரவண்டியும் வைரவர்கோவில் வீதியில் இருந்து கதிரேசு வீதி நோக்கி பயணித்த மோட்டார் சைக்கிளும் சந்தியை கடக்க முற்பட்ட வேளை விபத்துக்குள்ளானது.

வேகமாக பயணித்த முச்சக்கர வண்டியும் விபத்தையடுத்து வீதியோரமாக இருந்த வீட்டு மதிலுடன் மோதி தடம்புரண்டது.

இவ் விபத்தில் முச்சக்கரவண்டி சாரதி மற்றும் மோட்டார் சைக்கிள் சாரதி ஆகிய இருவரும் காயமடைந்துள்ளதுடன் வீட்டு மதிலும் உடைந்துள்ளது.

இதனையடுத்து அவ்விடத்திற்கு விரைந்த பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். (2-250)

## குப்பி விளக்கில் கல்வியைத் தொடரும் எமக்கு மின்சாரம் கிடைப்பது எப்போது?

### மாணவர்கள் கேள்வி

கிளிநொச்சி மருதநகர் கிராமத்திற்கு வடக்கின் வசந்தம் திட்டத்தினூடாக மின்சாரம் வழங்கப்பட்ட போதிலும் இங்குள்ள 4 வீதிகளில் உள்ள 60 இற்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு மட்டும் மின்சார இணைப்பு வழங்கப்படவில்லையென அப்பகுதி மக்களால் தெரி விக்கப்படுகிறது. அத்துடன் இந்த நான்கு வீதிகளிற்கு மின்கம்பங்கள் நாட்டப்படுவதற்கான ஆயத்த வேலைகள் இதுவரை நடைபெறவில்லையென பாதிக்கப்பட்ட மக்களால் தெரிவிக்கப்படுகின்றது.

இப்பகுதியில் வாழ்கின்ற பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்கள் மின்சாரம் இல்லாமையால் குப்பிவிளக்குகளிலேயே தமது பாடங்களை கற்று வருகின்றனர். இது தொடர்பாக பல தடவைகள் கிளிநொச்சி மின்சார சபையினரிடமும் பாராளுமன்ற உறுப்பினர்களிடமும் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் முறையிட்ட போதிலும் இதுவரை எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லையென கவலை தெரிவிக்கின்றனர்.

தமக்கான மின்சாரத்தை வழங்குவதற்கு ஏன் தாமதம் ஏற்படுகின்றது என அவர்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இப்பகுதிக்கு நேரில் சமுகம் தந்து மக்களின் நிலையினை பார்வையிட்டு மின்சாரம் வழங்க ஆவன செய்ய வேண்டுமென கோரிக்கை விடுக்கின்றனர். (2)




## மூன்று பிள்ளைகளின் தந்தைக்கு விளக்கமறியல்

10.11.2014 அன்று 15 வயது சிறுமியைக் கடத்திச் சென்று ஒரு மாத காலமாக சட்டவிரோத முறையில் வைத்திருந்து பாலியல் வல்லுறவுக்குட்படுத்தியதாக குற்றஞ்சாட்டப்பட்ட 3 குழந்தைகளின் தந்தையை 8.12.2014 வரை விளக்கமறியலில் வைக்குமாறு முல்லை.மாவட்ட நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா உத்தரவிட்டுள்ளார்.

திருமணம் முடித்து 3 பிள்ளைகளின் தந்தையான நபருக்கு சார்பாக சட்டத்தரணி இஸ்மத் ஜமில் ஆஜராகி இருந்தார்.

சிறுமியை மாஞ்சோலை வைத்தியசாலையில் வைத்திய பரிசோதனைக்குட்படுத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறு முல்லை. மாவட்ட நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

## இலட்சக்கணக்கில் பணமோசடி செய்ததாக சந்தேகிக்கப்படும் பெண் விளக்கமறியலில்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு பொலிஸாரினால் உடப்பு பகுதியைச் சேர்ந்த பெண் ஒருவர் 11 இலட்சம் ரூபாவை வெளிநாட்டுக்கு அனுப்புவதாக கூறி மோசடி செய்ததாக குற்றஞ்சாட்டப்பட்டு முல்லைத்தீவு நீதிமன்றில் நேற்று ஆஜர் படுத்தப்பட்டார்.

மேற்படி நபரை 26.11.2014 வரை விளக்கமறியலில் வைக்குமாறு முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா உத்தரவிட்டுள்ளார். மேற்படி நபர் தொடர்பாக பல்வேறுபட்ட முறைப்பாடுகள் கிடைத்து வருவதாக பொலிஸார் மன்றில் தெரிவித்தனர். சந்தேக நபர் சார்பில் சட்டத்தரணி பரஞ்சோதி ஆஜராகி இருந்தமை குறிப்பிடத்தக்கது. (2)

## விவசாயிகளுக்கு பெரிய வெங்காய செய்கையை ஊக்குவிக்க விதைகள் வழங்கி வைக்கப்பட்டன



மன்னார் மாவட்ட விவசாயிகள் மத்தியில் பெரிய வெங்காய செய்கையை ஊக்குவிக்கும் வகையில் விவசாயிகளுக்கு பெரிய வெங்காய விதைகள் மற்றும் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு அண்மையில் மன்னார் நானாட்டான் பிரதேசச் செயலாளர் பிரிவுக்குட்பட்ட அருகங்குன்று கிராமத்தில் இடம்பெற்றது.

யு.எஸ்.ஏ.ஐ.டி அமைப்பின் நிதியுதவியுடன் விவசாய அமைச்சின் ஏற்பாட்டில் குறித்த பெரிய வெங்காய விதைகள் வழங்கி வைக்கப்பட்டன.

மன்னார் மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 370 விவசாயிகளுக்கு குறித்த பெரிய வெங்காய விதைகள் மற்றும் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

குறித்த நிகழ்விற்கு பிரதம விருந்தினராக விவசாய பிரதி அமைச்சர் வை.ஜி.பத்மசிறி, சிறப்பு விருந்தினராக யு.எஸ்.ஏ.ஐ.டி அமைப்பின் இலங்கைக்கான உதவிப்பணிப்பாளர் தோமஸ் போமா, அமைச்சர் றிசாத பதியுதீனின் மாவட்ட இணைப்பாளர் என்.எம்.முனவ்வர் மற்றும் வடமா காண திவிநெகும திட்ட பணிப்பாளர் அனுர வீரரட்ன உட்பட விவசாய திணைக்கள அதிகாரிகள், பிரதேச செயலாளர்கள், திணைக்கள தலைவர்கள், விவசாயிகள் என பலர் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் விவசாய பிரதி அமைச்சர் உரையாற்றுகையில்,

மன்னார் மாவட்டத்தில் நூறு ஏக்கர் நிலப்பரப்பில் பெரிய வெங்காய செய்கையை மேற்கொண்டு ஆயிரம் தொன் பெரிய வெய்காய உற்பத்தியை பெற்றுக்கொள்வதே இதன் நோக்கம் என தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து தெரிவு செய்யப்பட்ட விவசாயிகளுக்கு பெரிய வெங்காய விதைகள் வழங்கப்பட்டதோடு, உபகரணங்களும் வழங்கப்பட்டன.

அதனைத் தொடர்ந்து அக்கிராமத்தில் உள்ள விவசாயி ஒருவருடைய விவசாய காணியில் பெரிய வெங்காய விதைகள் வைபவ ரீதியாக நாட்டப்பட்டது.

அதன் பின்னர் இராசமடு கிராமத்தில் உள்ள தனிநபர் ஒருவருடைய தோட்டத்திற்கு சென்ற பிரதி அமைச்சர் உள்ளிட்ட குழுவினர் மரககறி செய்கையினை பார்வையிட்டமை குறிப்பிடத்தக்கது. (2-250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கார்த்திகை மாத இராசி பலன்கள்

# 17.11.2014-15.12.2014



## கும்பம்

**அவிட்டம் 3,4 ஆம் பாதங்கள், சதயம், பூரட்டாதி 1,2,3 ஆம் பாதங்கள்**

**சேமிப்பு அதிகரிக்கும் நேரம்!**

**திட்டமிட்ட காரியங்களைத் திகதி மாறாமல் செற்படுத்த வேண்டும் என்று விரும்பும் கும்ப இராசி நேயர்களே**

கார்த்திகை மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும்பொழுது மாதத்தொடக்கத்தில் உங்கள் ராசிநாதன் சனி உச்சம்பெற்றுச் சஞ்சரிப்பது யோகம்தான். உடலாரோக்கியம் சீராகும். உற்சாகத்துடனும், தன்னம்பிக்கையுடனும் செயற்படுவீர்கள். சுகாதிபதி சுக்ரன் சுகஸ்தானத்தை பார்ப்பதால் சுகங்களும், சந்தோஷங்களும் கூடும். தொழில் ரீதியாக எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும்.

இம்மாதம் அதிசார குருவின் ஆதிக்கத்தால் சில நாட்கள் உங்கள் ராசியைக் குரு பார்க்கப் போகிறார். பார்க்கும் குருவால் பலவித நன்மைகள் ஏற்படும். இதுவரை நடைபெறாதிருந்த சில சுபக்காரிய நிகழ்வுகள் இப்பொழுது நடைபெற்று மகிழ்ச்சியை வழங்கும். சென்ற மாதத்தில் ஏற்பட்ட சில சிக்கல்கள் அகலும். வீடு. இடம் வாங்குவது மற்றும் பத்திரப் பதிவுகளில் தடைகள் ஏற்பட்டிருக்கலாம். அவைகள் அகல குருவின் பார்வை கைகொடுக்கும். அஷ்டமத்தில் ராகு சஞ்சரிப்பதால் நல்ல வாய்ப்புகளை நழுவவிடும் சூழ்நிலை ஒரு சிலருக்கு உருவாகும். எனவே. ராகு- கேதுக்களுக்குரிய பரிகாரமும். நற்பலன்கள் கொடுக்க குரு வழிபாடுகளையும் தொடக்கத்திலேயே செய்வது நல்லது.

உங்கள் ராசிக்கு அடிப்படையில் தனலாபாதிபதியாக விளங்குபவர் குருபகவான். அவரது பார்வை பதியும் பொழுது தனலாபம் தொழிலில் சிறப்பாக அமையும். ஆனால், அதற்கு அவரது வழிபாடு தேவை. எனவே. குருகவசம் பாடி குரு தட்சிணாமூர்த்தியை வியாழன் தோறும் வழிபட்டு வாருங்கள். வாக்கு ஸ்தானத்தில் கேது இருப்பது அவ்வளவு நல்லதல்ல. தானே தனக்கு எதிரி என்ற சூழ்நிலையை உருவாக்கும். எனவே. எதையும் ஒரு முறைக்குப் பலமுறை யோசித்துப் பேசுவது நல்லது. தொழிலில் கொடுத்த வாக்கைக் காப்பாற்ற அதிகப் பிரயாசை எடுக்கும் சூழ்நிலை உருவாகும்.

## சேமிப்பு அதிகரிக்கும் இந்த நேரம் சுகங்களும் சந்தோஷங்களும் கூடும்

**விருச்சிக புதனின் சஞ்சாரம்!**

விருச்சிக ராசியில் நவம்பர் 20 ஆம் திகதி புதன் சஞ்சரிக்கப் போகிறார். பஞ்சம அஷ்டமாதிபதி 10 இல் சஞ்சரிக்கும் பொழுது ஒரு சிலருக்குத் தொழிலில் ஏமாற்றங்களைச் சந்திக்கும் சூழ்நிலை உருவாகும். பங்குதாரர்களிடம் கறாராகப் பேசிக் கொள்வது நல்லது. பிள்ளைகளையும் உங்கள் மேற்பார்வையில் வைத்துக் கொள்வதே நல்லது. புத-ஆதித்ய யோகம் செயற்படும் இந்த நேரத்தில் பெற்றோர் வழியில் பிரியம் கூடும். விரோதம் விலகும். அரசு வழிச் சலுகைகள் கிடைக்கும். அரசியல்வாதிகளாலும், நன்மை கிட்டும். பொது நலத்தில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு புதிய பொறுப்புகளும், பதவிகளும் வந்து சேரும். என்ன இருந்தாலும் 6இல் குரு இருப்பதால் அதிகார வர்க்கத்தினரை பகைத்துக் கொள்ளாமல் இருப்பது நல்லது.

**மகர செவ்வாயின் சஞ்சாரம்!**

நவம்பர் 22 ஆம் திகதி மகரராசியில் செவ்வாய் சஞ்சரிக்கப் போகிறார். விரய ஸ்தானத்தில் செவ்வாய் சஞ்சரிப்பது அவ்வளவு நல்லதல்ல. 3,10 இற்கு அதிபதியான செவ்வாய் 12இல் சஞ்சரிக்கும் பொழுது உடன்பிறப்புகளால் விரயங்கள் உருவாகலாம். குடும்பத்தில் குழப்பங்கள் அதிகரிக்கும். தொழில் மாற்றச் சிந்தனை மேலோங்கும். பயணங்களால் பலன் கிடைப்பது அரிது. வாகன மாற்றச் சிந்தனை மேலோங்கும். தேக நலன் சீராக இருந்தாலும் செயற்படுவதில் பிரச்சினைகள் அதிகரிக்கும். வரவைக் காட்டிலும் செலவு கூடும். தைரியத்தையும், தன்னம்பிக்கையையும் குறையவிடாமல் பார்த்துக் கொள்வது நல்லது.

**அதிசார குருவின் பலன்கள்!**

குரு சிம்ம ராசியில் அதிசாரகதியில் டிசம்பர் 3 ஆம் திகதி முதல் பிரவேசிக்கப்போகிறார். சில நாட்கள் மட்டுமே சிம்மத்தில் இருந்தாலும் நல்ல வாய்ப்புகள் வந்து சேரும். பொதுவாக தொழில் தொடர்பாக எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். தொகை வரவும் எதிர்பார்த்தபடி அமையும். பொதுவாக குரு சப்தம ஸ்தானத்தில் இருப்பதால் குடும்ப முன்னேற்றம் கருதி எடுத்த முயற்சிகளில் அனுகூலம் கிடைக்கும். குடியிருக்கும் வீட்டால் ஏற்பட்ட பிரச்சினைகள் அகலும். அத்தியாவசியப் பொருட்கள் முதல் ஆடம்பரப் பொருட்கள் வரை வாங்கிச் சேர்க்க முன்வருவீர்கள்.

**புத-சுக்ர சேர்க்கைக் காலம்!**

டிசம்பர் 7 இல் தனுசு ராசியில் சுக்ரன் சஞ்சரிக்கப் போகிறார். அடுத்த நாள் டிசம்பர் 8இல் புதனும் அவரோடு சேருகிறார். இந்தக் கூட்டுக் கிரக யோகம் ஓரளவு நன்மையை கொடுக்கும். பிள்ளைகள் வேலை சம்பந்தமாக எடுத்த முயற்சிகளில் வெற்றி கிட்டும். உதிரி வருமானங்கள் பெருகும். தாய்வழி ஆதரவு பெருகும். ஆடை, ஆபரண சேர்க்கை அதிகரிக்கும். அணிகலன்கள் மற்றும் வாகனங்கள் வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். வரவு திருப்தி தரும். இம்மாதம் கார்த்திகைத் திருநாளில் முருகப் பெருமானை வழிபட்டுவருவதோடு சனிக்கிழமை தோறும் ஜெய அனுமானை வழிபட்டு வாருங்கள்.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

யோசித்துச் செயற்பட வேண்டிய மாதம். அஷ்டமத்தில் ராகு அடியெடுத்து வைத்திருப்பதால் ஒரு தொகை செலவழிந்த பிறகே அடுத்த தொகை வந்து சேரும். குடும்ப உறுப்பினர்களின் எண்ணங்களைப் பூர்த்தி செய்வதில் இடையூறு ஏற்படலாம். அதிசார குருவின் ஆதிக்க காலத்தில் நல்ல பலன்கள் நடைபெறும். உடல்நலம் சீராகும். சென்ற மாதத்தில் நடைபெறாத சில காரியங்கள் இப்பொழுது துரிதமாக நடைபெறும். கணவன்-மனைவிக்குள் ஒற்றுமை பலப்பட விட்டுக் கொடுத்துச் செல்வது நல்லது. குமரன் வழிபாடும், குருவழிபாடும் குழப்பங்களை அகற்றும்.

# சிவல்புரி சிங்காரம்



## மீனம்

**பூரட்டாதி 4 ஆம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி**

**மாற்றுக்கருத்துடையோரையும் பேச்சாற்றல் மூலம் மாற்றும் கலைகற்ற மீன இராசி நேயர்களே!**

**உத்தியோகம் தொழிலில் உயர்வு கிடைக்கும்!**

கார்த்திகை மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது மாதத் தொடக்கத்தில் ராசிநாதன் குரு உங்கள் ராசியைப் பார்ப்பது யோகம்தான். ஆயினும். இடையில் அதிசாரத்தில் இயங்கி 6ஆம் இடத்திற்கு அல்லவா செல்கிறார். இருப்பினும் அதன்பார்வை 2, 10, 12 ஆகிய இடங்களில் பதிவதால் ஒரு சிலருக்கு திடீர் முன்னேற்றம் ஏற்படும்.

திசாபுத்தி பலமிழந்தவர்களுக்கு திடீர் திருப்பங்கள் ஏற்படும். சனியும் வலிமையடையும் நேரம் என்பதால் இடமாற்றம், வீடு மாற்றம், நாடு மாற்றம், வாகன மாற்றம் போன்ற மாற்றங்கள் தானாகவே வந்து சேரும். வரும் மாற்றங்களை ஏற்றுக்கொள்வதுதான் நல்லது.

## தொழிலில் உயர்வு கிடைத்து திடீர் திருப்பங்கள் ஏற்படும்

குறிப்பாக விலகப்போகும் சனியை முன்கூட்டியே யோக பலம் பெற்ற நாளில் சென்று வழிபட்டு வருவது நல்லது.

சகல சிவாலயங்களிலும் சனிபகவான் வீற்றிருந்து அருள்தருவதைப் பார்த்திருப்பீர்கள். அருகாமையில் உள்ள ஸ்தலத்திற்கு சனிக்கிழமை அல்லது உங்கள் நட்சத்திரத்திற்கு உகந்த யோக பலம் பெற்ற நாளில் சென்று சனி கவசம் பாடி வழிபட்டு வருவது நல்லது. இயன்றவர்கள் அன்னதானமும். வஸ்திர தானமும் செய்து வரலாம். காக வாகனத்தானை கைகூப்பித் தொழுதால் தேக நலனும் சீராகும். செல்வ நிலையும் உயரும். பரணி தீபத்தன்று தீபமேற்றி வழிபாடுசெய்வதோடு கார்த்திகைத் திருநாளில் கந்தன் புகழ்பாடுங்கள். கவலைகள் தீரும்.

**விருச்சிக புதனின் சஞ்சாரம்!**

விருச்சிக ராசியில் நவம்பர் 20 ஆம் திகதி புதன் சஞ்சரிக்கப் போகிறார். 4,7இற்கு அதிபதி 9இல் சஞ்சரிக்கும் பொழுது தாய், தந்தை வழியில் தக்கவிதத்தில் உதவி கிடைக்கும். விலகிச் சென்ற சொந்தங்கள் விரும்பி வந்து சேரும். வீடு வாங்கும் முயற்சி அல்லது கட்டும் முயற்சியில் கவனம் செலுத்துவீர்கள். வெளிநாட்டுப் பயணம் விரும்பியபடியே அமையும். மாற்று இனத்தவர்களின் ஒத்துழைப்பு கூடுதலாக கிடைக்கும்.

**மகர செவ்வாயின் சஞ்சாரம்!**

நவம்பர் 22ஆம் திகதி மகர ராசியில் செவ்வாய் சஞ்சரிக்கப் போகிறார். இந்த நேரம் ஒரு இனிய நேரமாகும். 2,9 இற்கு [illegible] ஸ்தானத்தில் [illegible] பொழுது [illegible] தார நிலை உயரும். புகழ்கூடும். உடன்பிறப்புகளும். உடனிருப்பவர்களும் உங்களுக்கு அனுசரணையாக இருப்பர். தொழில் வளம் மேலோங்கும். பாக்கிகள் வசூலாகி பரவசப்படுத்தும். வழக்குகளில் வெற்றிகிட்டும். இழப்புகளை ஈடுசெய்ய இது ஒரு இனிய நேரமாக அமையும்.

**அதிசார குருவின் பலன்கள்!**

டிசம்பர் 3ஆம் திகதி குரு அதிசாரமாகி சிம்மத்தில் சஞ்சரிக்கப் போகிறார். இக்காலத்தில் எதிர்பார்ப்புகள் அதிகரிக்கும். உத்தியோகம், தொழிலில் திடீர் மாற்றங்கள் உருவாகும். வீண் வம்பு வழக்குகள் வீடு தேடி வரலாம். விரயங்கள் கூடுதலாக இருக்கிறதே என்று கவலைப்படுவீர்கள். இக்காலத்தில் குரு வழிபாடு உங்களுக்கு அவசியம் தேவை. வியாழன் தோறும் விரதமிருந்து சுண்டல் மாலை அணிவித்து குரு தட்சிணாமூர்த்தியை வழிபட்டால் வந்த துயரங்கள் விலகி ஓடும் என்பதை அறிந்து கொள்ளுங்கள்.

**புத-சுக்ர சேர்க்கைக் காலம்!**

டிசம்பர் 7 ஆம் திகதி தனுசு ராசியில் சுக்ரன் சஞ்சரிக்கப் போகிறார். அடுத்த நாளே அவரோடு புதனும் சேருகிறார். இந்த புத-சுக்ர சேர்க்கை புதிய திருப்பங்களை உருவாக்கும். தொழிலில் திடீர் முன்னேற்றங்கள் ஏற்படும். புதிய பொறுப்புகளும் [illegible] ஒருசிலருக்கு கிடைக்கலாம். [illegible] பிரச்சினைகள் அகலும். தங்கம், வெள்ளி, ஆடை, ஆபரணங்கள் தக்க விதத்தில் வாங்கி சேர்க்க வாய்ப்புகள் கைகூடிவரும். இம்மாதம் மால்மருகன் வழிபாடு மகிழ்ச்சியை வழங்கும்.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

இம்மாதம் பயணங்களால் பலன் கிடைக்கும் மாதமாகும். பாகப்பிரிவினைகள் சுமுகமாக முடியும். குழந்தைகளின் சுபச் சடங்குகளையும், பெற்றோர்களின் பிறந்த நாள் விழாக்களையும் கொண்டாடி மகிழ்வீர்கள். கண் நோய் அகலும். காசு, பணப்புழக்கம் அதிகரிக்கும். சேமிப்பும் அவசியமாகும். பிள்ளைகளின் கல்வி நலன் கருதி கவனமாக யோசிப்பீர்கள். அதிசார குருவின் ஆதிக்க காலத்தில் விரயங்கள் அதிகரிக்கும் வாய்ப்பு உண்டு. முருகப் பெருமான் வழிபாடும். குருவழிபாடும் உங்கள் முன்னேற்றத்திற்கு வித்திடும். (முற்றும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நரி தன்கனவில் கூட கோழிகளை எண்ணிக்கொண்டேயிருக்கும்.

- வாலர்ஸ்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## மகிந்த - மைத்திரி கடும் போட்டி தேர்தல் களத்தில் பீஷ்மர்கள் பலர்

மகாபாரதப் போரில் பாண்டவர்களை வெல்லச் செய்வதற்காக பார்த்தசாரதியாகிய கிருஷ்ண பரமாத்மா பட்ட கஷ்டங்களும் செய்த சூழ்ச்சிகளும் கொஞ்சமல்ல. அவதார புருஷராகிய கிருஷ்ண பரமாத்மாவுக்கு ஏன் இத்துணை கஷ்டம் என்று யாரேனும் கேட்டால்,

கிருஷ்ணனுக்கு ஈடான பலமும் சக்தியும் ஞானமும் கொண்டவர்கள் துவாபர யுகத்தில் இருந்தது தான் காரணம் எனலாம்.

போரை நடத்தியாக வேண்டும் என்பது கிருஷ்ணனின் முடிவு அல்ல. அது இறைவனாகிய பரம்பொருள் விதித்த நியதி. இந் நியதியை மீறி போரைத் தடுக்க வேண்டுமென கிருஷ்ணன் நினைத்தால் கூட, போரை நிறுத்த முடியாது. ஏனெனில் போரை நடத்தும் பணியை கிருஷ்ணன் செய்தானேயன்றி, போரை அவன் நடத்தவில்லை.

பாரதப் போர் நடந்தாக வேண்டும் என்பது பிறவா யாக்கைப் பெரியோன் என்று சிலப்பதிகாரம் போற்றும் சாட்சாத் பரமேஸ்வரனுடைய முடிவு.

எனவே சிவப்பரம்பொருளின் முடிவை நிறைவேற்ற வந்தவரே கிருஷ்ண பரமாத்மா. அதன் காரணமாகவே தன் சகோதரி சுபத்திரையின் புதல்வன் அபிமன்யுவின் உயிரைக் கூட கிருஷ்ணனால் பாதுகாக்க முடியவில்லை.

இதிலிருந்து போரை நடத்தும் சக்தி வேறு எங்கோ உள்ளது என்பது தெளிவாகிறது. இது ஒருபுறமிருக்க இலங்கையிலும் ஜனாதிபதித் தேர்தல் பாரதப் போர் போல நடக்கப் போகிறது.

மகிந்த ராஜபக்ஷவை எதிர்த்து அவரோடு கூட இருந்த மைத்திரிபால சிறிசேன போட்டியிடுவதன் காரணமாக தேர்தல் களம் விறுவிறுப்பாகவிருக்கும் என்பதில் எந்த ஐயமுமில்லை.

குத்து வெட்டுக்கள்; பணப் பரிமாற்றங்கள்; தில்லுமுல்லுக்கள்; அடிதடிகள்; ஆர்ப்பாட்டங்கள் எனப் பலதும் நடந்தாகும்.

இந்நிலையில் எதிர்க்கட்சிகள் நிறுத்தியுள்ள பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவின் வெற்றிக்காக எதிர்க்கட்சிகள் கடுமையாகப் பாடுபடும். இதில் மைத்திரியின் தேரோட்டும் சந்திரிகா குமரதுங்க ஒரு பார்த்தசாரதியாக இருப்பார் என்று முன்னரே இவ்விடத்தில் கூறியிருந்தோம்.

இதை நாம் கூறும்போது, சந்திரிகா பார்த்தசாரதி என்றால் ஏற்கெனவே நீங்கள் குறிப்பிட்ட பரம்பொருள் யார் என்ற கேள்வி எழும்.

பரம்பொருள் இல்லாமலா மைத்திரிபால சிறிசேன மகிந்தவை எதிர்த்து வெளிக்கிட்டார். ஆகவே அவசரப்பட்டு பரம்பொருள் யார் என்று தேடுவது அவசியமற்றது.

இப்போது போரில் என்னென்ன தந்திரோபாயங்கள் கடைப்பிடிக்கப்பட வேண்டும் என்பது பற்றியே நாம் ஆராய வேண்டும்.

அந்த ஆய்வுக்காக பாரதப் போரில் வெல்ல பார்த்தசாரதி செய்த தந்திரோபாயங்களை ஒரு கணம் மீளவும் சிந்திப்பது பொருத்துடையது.

கௌரவர் பக்கம் இருக்கக்கூடிய விதுரன் வில் வித்தையில் மகாவிற்பனன். வில்லுக்கு விதுரன் என்றே கூறப்பட்டு வந்தது. வில்வித்தையில் விற்பனன் ஆகிய விதுரன் கௌரவர் பக்கத்தில் நின்று போர் புரிவானாயின் அருச்சுனன் உயிர் துறப்பது உறுதி.

ஆகையால் கௌரவர் சபையில் வைத்து விதுரன் தன் வில்லை உடைக்குமாறு கண்ணன் சூழ்ச்சி செய்தான். இதனால் கௌரவர் சேனை மிகப்பெரும் பலத்தை இழந்தது. இப்போது பீஷ்மர் போர்க்களத்தில் நிற்கிறார். உடம்பால் துரியோதனுக்காகப் போரிட்டாலும் பீஷ்மரின் மனம் பாண்டவரின் வெற்றிக்காகப் பிரார்த்தித்துக் கொண்டேயிருந்தது. பீஷ்மரின் இந்த பிரார்த்தனையே பாண்டவரின் வெற்றிக்கு மூல காரணம் எனலாம்.

அப்படியானால் நம்நாட்டில் நடக்கப் போகும் தேர்தல் களத்தில் யார் பீஷ்மர் என்று கேட்டால் பலரைக் காட்ட முடியும். கட்சி ஒன்றாகவும் ஆதரவு இன்னொன்றுக்காகவும் இருக்கக்கூடிய வாய்ப்புக்கள் நிறையவே இருப்பதால், எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் பீஷ்மர்களுக்குப் பஞ்சமேயில்லை.

# ஜனாதிபதிக்கான ஆதரவை பரிசீலிக்கும் கூட்டணிக் கட்சிகள்

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலில் எதிரணியின் பொதுவேட்பாளராக மைத்திரிபால சிறிசேன அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், ஆளும்கூட்டணியில் அங்கம் வகிக்கும் கட்சிகள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை ஆதரிக்கும் தமது முடிவுகளை மீள்பரிசீலனை செய்யத் தொடங்கியுள்ளன.

ஜனாதிபதித் தேர்தலில் எவரை ஆதரிப்பது மற்றும் ஆளும் கூட்டணியில் தொடர்ந்து அங்கம் வகிப்பதா என்பது குறித்து சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை ஆராய்ந்துள்ளது.

இந்தக் கூட்டத்தில் சிறி லங்கா முஸ்லிம் காங்கிரஸின் உள்ளூராட்சி சபைகள், மாகாண சபைகள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

இந்தக் கூட்டத்தில் இலங்கையின் தற்போதைய அரசியல் சூழ்நிலையில் முஸ்லிம் மக்களின் மன உணர்வுகளும், எண்ணங்களும் வெளிப்படுத்தப்பட்டதாக அதில் கலந்து கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம்.ஹரீஸ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

இக்கூட்டத்தில் மக்கள் பிரதிநிதிகள் வெளியிட்டுள்ள கருத்துக்களை உள்வாங்கி கட்சியின் உயர்பீடம் விரைவில் இறுதி முடிவை எடுக்கும்.

இந்தக் கூட்டத்தில் வெளிப்படுத்தப்பட்ட கருத்துக்களை இறுதித் தீர்மானம் எடுக்கும் வரை ஊடகங்களுக்கு வெளிப்படுத்துவதில்லை என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஆயினும், இன்றைய முஸ்லிம் சமூகத்தின் நிலை சம்பந்தமாக அரசாங்கத்தின் மீதுள்ள அதிருப்திகளை பிரதிநிதிகள் வெளிப்படுத்தியிருந்தார்கள் என்று மேலும் குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை, ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு நிபந்தனையுடன் ஆதரவு வழங்க ஏற்கெனவே இணக்கம் தெரிவித்திருந்த மலையக மக்கள் முன்னணி தமது முடிவு குறித்து மீள்பரிசீலனை செய்யவுள்ளதாக தெரிவித்துள்ளது.

மலையக மக்களின் வீடமைப்பு, சுகாதாரம் மற்றும் வேலைவாய்ப்பு உள்ளிட்ட விடயங்களில் தமது கட்சி முன்வைத்திருந்த கோரிக்கைகள் தொடர்பாக, ஜனாதிபதியிடம் இருந்து தெளிவான பதில் கிடைக்காத காரணத்தினாலேயே, தமது கட்சி இந்த முடிவுக்கு வந்துள்ளதாக மலையக மக்கள் முன்னணியின் அரசியல் தலைவரும் அமைச்சருமான வி.இராதாகிருஷ்ணன தெரிவித்துள்ளார்.

அதேவேளை, ஆளும் கூட்டணியில் இடம்பெற்றுள்ள மற்றொரு கட்சியான அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் நேற்று முக்கிய கூட்டம் ஒன்றை நடத்தியமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

## இந்திய - இலங்கை படைகளின் கூட்டுப் போர்ப் பயிற்சி நிறைவு

(கொழும்பு)

இந்தியா - இலங்கை சிறப்புப் படைப் பிரிவுகள் இணைந்து நடத்திய மூன்று வாரகால கூட்டுப் போர்ப்பயிற்சி நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை அம்பாந்தோட்டையில் முடிவுக்கு வந்தது.

இந்தப் போர்ப்பயிற்சி மித்ர சக்தி என்ற பெயரில், குடாஓயாவில் உள்ள கொமாண்டோ பயிற்சிப் பாடசாலையில் இம்மாத ஆரம்பத்தில் தொடங்கியிருந்தது.

அம்பாந்தோட்டை மாகம்புர சர்வதேச மாநாட்டு நிலையத்தில் இந்த பயிற்சியின் இறுதி நாள் நிகழ்வு இடம்பெற்றது.

பயிற்சியை முடித்துக் கொண்ட படையினருக்கு, இலங்கை படைத்தரப்பின் மத்திய படைகளின் தலைமையக கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மனோ பெரேரா சான்றிதழ்களை வழங்கினார்.

இந்திய படைத்தரப்பின் படை நடவடிக்கைகளுக்கான பிரதிப் பணிப்பாளர் பிரிகேடியர் ஜெனரல் சுதாகர் தலைமையில் 5 அதிகாரிகளும், 37 படையினரும் இந்தக் கூட்டுப் பயிற்சியில் பங்குபற்றியிருந்தனர்.

இலங்கை படைத்தரப்பின் கொமாண்டோ மற்றும் சிறப்புப் படைப்பிரிவுகளின் 168 படையினரும், கடற்படை மற்றும் விமானப்படையின் தலா 16 பேர் கொண்ட அணிகளும் இந்தப் போர்ப் பயிற்சியில் கலந்து கொண்டன.

இலங்கைக்கு கடந்த மாதம் விஜயம் செய்திருந்த இந்திய படைத்துறை அமைச்சின் செயலாளர் ஆர்.கே.மாத்தூர் தலைமையிலான அதிகாரிகளுக்கும், இலங்கை படைத்துறை செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவுக்கும் இடையில் நடத்தப்பட்ட பேச்சுக்களை அடுத்தே, இந்தப் போர்ப் பயிற்சி இடம்பெற்றது. (எ-11)

## கட்டுப்பணம் செலுத்தலாம்

(கொழும்பு)

2015ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடவிருக்கின்ற வேட்பாளர்கள், டிசம்பர் மாதம் 7 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணி வரை கட்டுப்பணம் செலுத்தலாம் என்று தேர்தல்கள் செயலகம் அறிவித்துள்ளது.

கட்டுப்பணத்தை ஏற்கும் நடவடிக்கை நேற்று முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தேர்தல்கள் செயலகம் அறிவித்துள்ளது.

கட்டுப்பணத்தை, வாரநாட்களில் காலை 8.30 முதல் 4.15 வரையிலும் செலுத்தலாம். வேட்புமனுக்களை ஏற்கும் தினத்துக்கு முதல் நாளான டிசம்பர் 7 ஆம் திகதி காலை 8.30 முதல் நண்பகல் 12 மணிவரையும் செலுத்தலாம்.

ஏற்றுக்கொள்ளப்பட்ட அரசியல் கட்சிகளைச்சேர்ந்த வேட்பாளர்கள் 50ஆயிரம ரூபாயையும்ஏனைய வேட்பாளர்கள்75ஆயிரம் ரூபாயையும் கட்டுப் பணமாக செலுத்தவேண்டும் என்றும் தேர்தல்கள் செயலகம் அறிவித்துள்ளது. (எ-11)

## ஆதரவாளருக்கு ஆப்பு வைத்த அரசு

(கொழும்பு)

பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவின் ஆதரவாளர் மாகாண அமைச்சுப் பதவியிலிருந்து நீக்கப்பட்டுள்ளார்.

வடமத்திய மாகாணசபையின் உணவு, கூட்டுறவு, கைத்தொழில் மற்றும் கிராம அபிவிருத்தி அமைச்சர் பேசல ஜயரட்னவே இவ்வாறு பதவியிலிருந்து நீக்கப்பட்டுள்ளார்.

இந்த அமைச்சுப் பதவியை வட மத்திய மாகாண முதலமைச்சர் எஸ்.எம். சமரக்கோன் பொறுப்பேற்றுக்கொண்டுள்ளார்.

வட மத்திய மாகாண ஆளுநர் கருணாரட்ன திவுல்கனே முன்னிலையில் முதலமைச்சர் சமரக்கோன் குறித்த அமைச்சிற்காக பதவிப் பிரமாணம் செய்து கொண்டுள்ளார்.

இதேவேளை, அமைச்சுப் பதவியிலிருந்து நீக்கப்பட்டமை குறித்து பேசல ஜயரட்னவிற்கு அறிவிக்கப்படவில்லை.

மைத்திரிபால சிறிசேனவின் நெருங்கிய சகாவாக பேசல ஜயரட்ன செயற்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மைத்திரிபால ஆளும் கட்சியை விட்டு விலகியதன் பின்னர், அண்மையில் பொலநறுவையிலும் அனுராதபுரத்திலும் ஜனாதிபதி பங்கேற்ற நிகழ்வுகளில் பேசல ஜயரட்ன பங்கேற்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (எ-11)

## வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை 2014

''இயற்கையே எனது இறைவன். எனக்கு இயற்கை புனிதமானது. மரங்கள் என் கோயில்கள், காடுகள் என் தேவாலயங்கள்''

-மிகைல் கோர்ப்பசேவ் (சோவியத் யூனியனின் முன்னாள் அதிபர்)

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

### பரந்த மனம் வேண்டும்



- எல்லையற்ற ஆற்றலும், தூய்மையும் உனக்குள்ளேயே நிறைந்து இருக்கிறது.
- ஒவ்வொரு மனிதனும் தனக்கென தனி இலட்சியத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டியது அவசியம்.
- தன்னை நெறிப்படுத்தி வாழ்பவனே, உலகத்தையும் சரியான பாதையில் செலுத்தும் தகுதி படைத்தவனாகிறான்..
- பரந்த இந்த உலகம் போல எப்போதும் உன் மனதையும் விரிவுபடுத்திக் கொள்.
- மனிதன் எப்போதும் தாழ்ந்த உண்மையில் இருந்தே, மேலான உண்மைக்கு பயணம் செய்கிறான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கென்யா இராணுவ நடவடிக்கையால் 100 தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர்



ஆபிரிக்க நாடான கென்யாவில் கடந்த 2011 ஆம் ஆண்டு முதல் சோமாலியாவை சேர்ந்த அல் சகாபாப் என்ற தீவிரவாத இயக்கம் பல்வேறு தாக்குதல்களை நடத்தி வருகிறது. சோமாலியாவில் செயற்பட்டு வந்த இஸ்லாமிய போராளிகளை அடக்க கென்யா படைகளை அனுப்பியது அது முதல் கெனயாவில் தாக்குதல் கள் நடைபெற்றுவருகிறது.

இந்த நிலையில் கடந்த 22ஆம் திகதி கென்யா தலைநகர் நைரோபியை நோக்கி பயணிகள் பேருந்து ஒன்று வந்து கொண்டு இருந்தது. தீவிரவாதிகள் பேருந்தை கடததி சென்றனர் . பின்னர் பேருந்தில் இருந்த ஒவ்வொருவரையும் புனித குரான்படிககுமாறு கூறனர். இதில் இஸ்லாமியர் அலலாதவர்களை தனியாக பிரித்து அவரகளை சுட்டு கொன்றனர்

இந்நிலையில் கென்ய அப்போதுசோமாலியா எல்லை அருகே மண்டேரா கவுண்டி அருகே இராணுவம் நடத்திய தீவிர வேட்டையில் 100 தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர்.

இது குறித்து கென்யா துணை ஜனாபதி வில்லியம் ருடோ கென்ய தலைநகர் நைரோபியில் தெரிவிக்கையில்,

கொலைகார தீவிரவாதிகள் மீது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளில் 100க்கும் மேற்பட்ட தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர். நமது செய்தி தெளிவானது. உங்கள் தாக்குதல்கள் அப்பாவி மக்கள் மீதானதாக இருக்கும் ஆனால் கென்ய மக்கள்மீது தாக்குதல் தொடரந்தால் நாங்கள் தொடர்ந்து இது போன்ற நடவடிக்கைகளில ஈடுபட நேரிடும். இவ்வாறு அவர் மேலும் தெரிவித்தார்.(இ-5)

## எதிரான விசாரணைகளுக்கு ஆதரவளிக்கும் நாடுகளுக்கு வடகொரியா கடும்எச்சரிக்கை

மனித உரிமை மீறல் குறித்து சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் விசாரணைகளை முன்னெடுப்பதற்கு ஆதரவு தெரிவிக்கும் நாடுகள் மிகுந்த அவதானத்துடனேயே செயற்பட வேண்டும் என வடகொரியா எச்சரிக்கை விடுத்துள்ளது. தமது நாட்டுக்கு எதிராக வாக்களிக்கும் எந்தவொரு நாடும் அதற்கான பின் விளைவுகளை சந்திகக நேரிடும் என வடகொரிய ஜனாதிபதி கிம் ஜோங் உன் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

பியோங்யோங் விவகாரத்தில் பொது மக்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டமை , கொலை, பாலியல் வன்கொடுமைகள் உள்ளிட்ட மனித உரிமை மீறல்களில் வடகொரியா ஈடுபட்டதாக ஐ.நா பாதுகாப்பு பேரவையில் தெரிவிக்கப்பட்டது.

அத்துடன் இது தொடர்பில ஹேக்கிலுள்ள சர்வதேச குற்றவியல்நீதிமன்றத்தில்விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என வாக்கெடுப்பின் மூலம் தீர்மானிக்கப்பட்டது.

எனினும் இறுதி முடிவு எட்டுவதற்கு முன் ஐ.நாவில் மற்றுமொரு வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது

இந்நிலையில் தமது நாட்டுக்கு எதிராக வாக்களிக்கும் பட்சத்தில் கடுமையான பின் விளைவுகளை எதிர்கொள்ள நேரிடும் என வடகொரியா எச்சரித்துள்ளது குறிப்பிடத்தக்கது. (இ-5)




# கரப்பந்தாட்ட போட்டியில் தற்கொலைத் தாக்குதல்

## பலி எண்ணிக்கை 57 ஆக உயர்வு

கிழக்கு ஆப்கானிஸ்தானில் கரப்பந்தாட்ட போட்டியின் போதுஇடம்பெற்ற தற்கொலை குண்டுத் தாக்குதலில் 57 பேர் இதுவரை பலியானதுடன் 40 பேர் காயமடைந்துள்ளனர் என வெளிநாட்டுச் செய்தி சேவை தெரிவித்துள்ளது.



நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மேற்கொள்ளப்பட்டுள்ள இந்த தற்கொலைத் தாக்குதலில் 50ற்கும் அதிகமானவர்கள் காயமடைந்துள்ளதாக ஆப்கானிஸ்தான் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

கிழக்கு ஆப்கானிஸ்தானில் உள்ள யஹ்யா கேல் பிராந்தியத்தில் இடம்பெற்ற கரப்பந்தாட்ட இறுதி போட்டியை பார்வையிட்டு கொண் டிருந்த போதே இந்த தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் பேச்சாளர் கூறியுள்ளார்.

இந்த தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களில் அதிகமானோர் பொதுமக்கள் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஆப்கானிஸ்தானில் இருந்து 13 ஆண்டுகளின் பின்னர் வெளிநாட்டு படைகள் வாபஸ் பெறப்பட்டதை தொடர்ந்து, இந்த வருடத்தில் அங்கு தலிபான் தீவிரவாதிகளால் மேற்கொள்ளப்படும் தாக்குதல்கள் அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை ஆப்கானிஸ்தான்படையினருக்கு உதவுவதற்காக பயிற்சியளிக்கப்பட்ட12ஆயிரம் துருப்பினர் அடுத்த வருடம் அங்கு செல்லவுள்ளதாக சர்வதேச செயதிகளில் கூறப்பட்டுள்ளது. (இ-5)



# குழந்தை திருமணங்களை தடுக்க ஐக்கிய நாடுகள் சபை தீர்மானம்

குழந்தைத் திருமணங்களைத் தடுப்பதற்காக, ஐக்கிய நாடுகள் மன்றம் முதன் முறையாக ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்துள்ளது. இதன்மூலம் உலகின் பல நாடுகளில் குழந்தைத் திருமண நடவடிக்கைகள் பெருமளவு தடுக்கப்படும் என்று கூறப்பட்டுள்ளது.

உலகெங்கும் ஒவ்வொரு ஆணடும் சுமார் ஒரு கோடியே 50 இலட்சம் பெண் குழந்தைகள் குழந்தைத்திருமணத்தில் ஈடுபடுத்தப்படுகிறார்கள்.

மேலும் 70 கோடி பெணகள் 18 வயதுக்கு முன்பே திருமணத்தில் ஈடுபடுத்தப்படுகிறார்கள் என்று ஐ.நா. கூறியுள்ளது.

இந்த நிலை இப்படியே நீண்டால் 2050 ஆண்டுக்குள் சுமார் 120 கோடி பெண் குழந்தைகளுக்குக் குழந்தைத் திருமணம் நடைபெற்றிருக்கும் எனவும் அது கூறியுள்ளது. இதில் நைஜர், வங்கதேசம் மற்றும் இந்தியா ஆகிய நாடுகளில்தான் அதிக அளவில் பெண் குழந்தைத் திருமணங்கள் நடைபெறுகின்றன.

**குழந்தைத் திருமணத்துக்கு எதிரான சட்டங்கள்**

இந்த முறையை ஒழிப்பதற்கு கனடா மற்றும் சாம்பியா ஆகிய நாடுகள், உலகின் மற்ற நாடுகளை குழந்தைத் திருமணத்துக்கு எதிரான சட்டங்களை ஏற்படுத்துமாறு வலியுறுத்தியுள்ளன. ஆனால் பிரித்தானியாவோ, குழநதைகளுக்கு முறையான பாலியல் கல்வி அளிக்கப்பட வேண்டும் என்றும், தங்களின் பாலினம் குறித்த உரிமைகளைப் பற்றி அவர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும் என்றும் கூறியுள்ளது.

குழந்தைத்திருமணத்தை வறுமை, பாதுகாப்பின்மை மற்றும் மரபுரீதியான வழக்கங்கள் ஆகியவற்றோடு தொடர்புபடுத்தி, குழந்தைத் திருமணங்களுக்கு எதிரான சட்டத்தை இயற்றுவதற்கு வாடிகன் பிரதிநிதி ஒப்புக் கொணடுள்ளார். எனினும், பாலியல் கல்வி மற்றும் உரிமை தொடர்பான கருத்துகளை அவர் எதிர்த்துள்ளார்.

இந்தக் கருத்துகள் எல்லாம் தொகுக்கப்பட்டு பொது சபைக் கூட்டக் குழுவினர் தீர்மானமாக நிறைவேற்ற ஒப்புக்கொண்டுள்ளனர். அடுத்த மாதத்தில் நடைபெறும் பொதுக் கூட்டத்தில் இவை நிறைவேற்றப்படும் என்று கூறப்பட்டுள்ளது. (இ-5)


# சிறையிலடைக்கப்பட்ட பெண் பிணையில் விடுவிக்கப்பட்டார்

ஈரானில் பெண்கள் கரப்பந்தாட்ட் விளையாட்டு போட்டிக்கு கடந்த 2012ஆம்ஆண்டு தடை விதிக்கப்பட்டது. பெண்கள் கரப்பந்தாட்டத்தில் ஈடுபட்டால் அவர்களை அநாகரிகமாக நடந்து கொள்ளும் ஆண் பார்வையாளர் களிடம் இருந்து பாதுகாக்க வேண்டியுள்ளது என்று ஈரான் அதிகாரிகள் தெரிவித்தனர்.

இங்கிலாந்து தலைநகர் லண்டனில் உள்ள ஷெபர்ட்ஸ் புஷ் பகுதியைச் சேர்ந்தவர் இங்கிலாந்து-ஈரானிய சமூக ஆர்வலரான கோன்சே கவாமி (வயது 25). லண்டன் பல்கலைகழகத்தில் படித்த இவர் ஒரு குழுவாக கடந்த ஜூன் மாதம் 20ஆம் திகதி ஈரானில் அந்நாட்டு அணியுடன் இத்தாலி அணி மோதிய ஆண்கள் கரப்பந்தாட்ட போட்டியை காண சென்றார். அந்த குழுவினரை பொலிசார் அடித்து உதைத்து கைது செய்து பின்னர் விடுவித்தனர்.

கவாமி மட்டும் மீண்டும் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். அவர் கரப்பந்தாட்ட் போட்டியை காண முயன்றதற்காக கவாமிக்கு ஓராண்டு சிறை தண்டனை விதித்து ஈரான் நீதி மன்றம் உத்தரவிட்டுள்ளது. இதற்கு சர்வதேச அளவில் கடும் எதிர்ப்பு கிளம்பியுள்ளது. கவாமியை உடனே விடுதலை செய்யக் கோரி 7 இலட்சத்திற்கும் அதிகமானோர் சமூக வலைதளங்களில் தங்களது ஆதரவை தெரிவித்து உள்ளனர்.

இநத நிலையில் கோன்சே கவாமி நேற்று சிறையில் இருந்து ஜாமினில் விடுவிக்கப்பட்டதாக ஈரான் அரசு அதிகாரி ஒருவர் தெரிவித்து உள்ளார்.



அவருக்கு நீதிமன்றம் 18.5 இலட்சம் பிணை தொகையில் ஜாமீனில் அவரை விடுவித்து உள்ளது.

கவாமியின் தந்தை மோஸ் தாகியான் கூறும்போது, எனது மகள் குற்றவாளி அல்ல அவர் நிரபராதி என்று நீதிமன்றத்தில் நிரூபிப்பேன் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது என்று கூறினார். (இ-5)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஆளும் கட்சியினருக்கு எதிராக நடவடிக்கை எடுக்காதது ஏன்?

குற்றச் செயல்களில் ஈடுபட்ட ஆளும் கட்சியினருக்கு எதிராக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை என ஜே.வி.பியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

ஆளும் கட்சியினர் குற்றச் செயல்களில் ஈடுபடுவது தொடர்பிலான கோவைகள் இருந்தால் ஏன் அவர்களுக்கு எதிராக ஜனாதிபதி சட்ட நடவடிக்கை எடுக்கவில்லை என அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் பங்கேற்ற போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அண்மையில் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியை விட்டு வெளியேறி எதிர்க்கட்சிகளுடன் இணைந்து கொண்ட உறுப்பினர்கள தொடர்பான ஆவணங்கள் தம்மிடம் இருப்பதாகவும் அவர களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப் போவதில்லை என ஜனாதிபதி தெரிவித்திருந்தார்.

பயங்கரவாதம் இல்லாதொழிக்கப்பட்டதன் பின்னர், லஞ்ச ஊழல் மோசடிகளை தடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வாக்குறுதியளித்திருந்தார் என அனுரகுமார திஸாநாயக்க சுட்டிக் காட்டியுள்ளார்.

என்ன காரணத்திற்காக ஜனாதிபதி ஊழல் மோசடிகளில ஈடுபட்டவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்காமல் இருக்கின்றார் என்பதனை புரிந்து கொள்ள முடியவில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

கொள்ளைக் கூட்டத்தின் தலைவன் கொள்ளையர்களை பாதுகாப்பதனைப்போன்று ஜனாதிபதி கருத்து வெளியிட்டுள்ளதாக அனுரகுமார சுட்டிக்காட்டியுள்ளார்.

கொள்ளையர்கள் இன்றி கொள்ளைக் கூட்டத் தலைவனினால் பிழைப்பு நடத்த முடியாத காரணத்தினால் ஜனாதிபதி இவ்வாறு கொள்ளையர்களை பாதுகாத்து வருவதாகக் குறிப்பிட்டுள்ளார். (எ-11)


## தவறிவிட்டது (8423)

சச்சிதானந்தன் சர்மிலன் ஆகிய எனது N2738141 இலக்கம் கொண்ட கடவுச்சீட்டு அண்மையில் யாழ்ப்பாணத்திற்கும் சுதுமலைக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து 0778164606 என்ற தொலைபேசி இலக்கத்திற்கு அறியத் தரவும் தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை ஆசிரியை,
திருமதி நா.கஜேந்திரகுமார்
அவர்களின் அன்புத் தந்தை
அமரர்
மாசானம்பிள்ளை
சேதுபாண்டியர்
இறைபதமடைந்ததையிட்டு
அன்னாரின் குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவித்துக் கொள்வதுடன்
அவரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்
கிளி/கிளிநொச்சி இந்துக் கல்லூரி

(C-9171)

## கண்ணீர் அஞ்சலி



அமரர்
மாசானம்பிள்ளை
சேதுபாண்டியர்
எமது சக அதிபர் மா.அம்பிகைபாகன்
அவர்களின் அன்புத்
தந்தை அமரர் மாசானம்பிள்ளை
சேதுபாண்டியர் இறைபதம்
அடைந்ததையிட்டு
அன்னாரின் குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவித்துக் கொள்வதுடன்
அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

அதிபர் சங்கம்,
கிளிநொச்சி மாவட்டம்.

(சி-9172)

## ஓராண்டு நினைவலைகள்



அமரர்
சின்னத்தம்பி
பொன்னம்பலம்
(ஓய்வுபெற்ற அலுவலர் – வீதி அபிவிருத்தி அமைச்சு)
தோற்றம் : 15.09.1947
மறைவு : 25.11.2013

எம் வாழ்வில் ஒளியேற்றிய தெய்வமே
இன்னும் பலர் வாழ்வில் ஒளியேற்றுவீர்
என எண்ணி இருந்த வேளை
விதி வந்து உங்களை அழைத்தது ஏனோ
ஓராண்டு ஆனாலும் உன் நினைவு
எம் மனதை விட்டு அகலாது
உன் பிரிவை எண்ணி தவிக்கின்றோம் – நாம்

செந்தூரகம், அல்வாய் வடக்கு, அல்வாய்
க.கோபிதவன், அலுவலக உதவியாளர், மாவட்ட நீதிமன்றம், முல்லைத்தீவு.
க.சுமங்கல்யா, ஆயுள்வேத ஊழியர், சித்த போதனா வைத்தியசாலை, யாழ்.

(சி-9170)


# இந்தியன் சுப்பர் லீக் கால்பந்து சென்னை அணி 5-வது வெற்றி

இந்தியன் சுப்பர் லீக் கால்பந்து போட்டியில் சென்னை அணி 3-0 என்ற கோல் கணக்கில் மும்பையை சாய்த்து 5-வது வெற்றியை பெற்றது.

இந்தியன் சுப்பர் லீக் (ஐ.எஸ்.எல்) கால்பந்து தொடரில் மும்பையில் நேற்று முன்தினம் நடந்த 39-வது லீக் ஆட்டத்தில் மும்பை சிட்டி எப்.சி.-சென்னையின் எப்.சி. அணிகள் சந்தித்தன. காயம் காரணமாக நட்சத்திர வீரர் இலனோ சென்னை அணியில் இடம் பெறவில்லை. விறுவிறுப்பாக




தொடங்கிய ஆட்டத்தில் 25-வது நிமிடத்தில் மும்பை வீரர் ஆண்ட்ரே மொரிட்ஸ் அடித்த சுப்பர் ஷாட்டை, சென்னை கோல் கீப்பர் பிராசிக்லியானோ தடுத்து முறியடித்தார். முதல் பாதியில் இரு அணியினராலும் கோல் ஏதும் அடிக்க முடியவில்லை.

பிற்பாதியில் சென்னை வீரர்கள் அமர்க்களப்படுத்தினர். 71-வது நிமிடத்தில் சென்னை வீரர் புருனோ பெலிஸ்சரி எளிதாக கோல் போட்டு முன்னிலையை ஏற்படுத்தினார். 81-வது நிமிடத்தில் ஜெய்ரோ சுவாரஸ் அடித்த ஷாட்டை மும்பை கோல் கீப்பர் சுப்ரதா பால் துள்ளி குதித்து தடுத்து வெளியே அனுப்பினார். ஆனால் அவர் சுதாரிப்பதற்குள் மற்றொரு சென்னை வீரர் தனசந்திர சிங் பந்தை கோலுக்குள் உதைத்து விட்டார்.

இதைத் தொடர்ந்து. 89-வது நிமிடத்தில் எதிரணி வீரர் பவுல் செய்ததால் சென்னைக்கு பிரிகிக் அதிர்ஷ்டம் கிட்டியது. 21.50 மீட்டர் தூரத்தில் இருந்து பிரிகிக் வாய்ப்பில் சென்னை அணியின் மாற்று ஆட்டக்காரர் கிறிஸ்டியன் டல்கோ உதைத்த ஷாட், சுவர் போன்று வரிசையாக நின்ற மும்பை வீரர்களையும். கோல் கீப்பர் சுப்ரதா பாலையும் ஏமாற்றி பிரமாதமாக கோலானது. முடிவில் சென்னை அணி 3-0 என்ற கோல் கணக்கில் மும்பையை வீழ்த்தி 5-வது வெற்றியை பெற்றது.

நாளை 7 மணிக்கு நடக்கும் லீக் ஆட்டத்தில் கேரளா பிளாஸ்ரர்ஸ்-எப்.சி கோவா அணிகள் மோதுகின்றன. (க)

# பொது பல...

யான வேட்பாளர் ஒருவர் இருப்பதாகவும் கூறி வந்தது.

இந்த நிலையில், எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளராக மைத்திரிபால சிறிசேன அறிவிக்கப்பட்டார்.

மைத்திரிபால பொது வேட்பாளராக போட்டியிடுவது தொடர்பில் அறிவிக்கப்பட்டதும், மைத்திரிபால பொது வேட்பாளராக போட்டியிடுவார் என தமது அமைப்பு எதிர்பார்த்திருக்கவில்லை என பொது பல சேனா அமைப்பின் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

# பொலிஸ் உத்தியோகத்தர் தூக்கிட்டுத் தற்கொலை

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் பணிபுரிந்துவந்த பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் பொலிஸ் தங்குமிடவிடுதியில் தூக்கில் தொங்கிய நிலையில் நேற்று மாலை சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சடலமாக மீட்கப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர் பொலநறுவை மாவட்டத்தைச்சேர்ந்த தெயட்கண்டி பகுதியைச் சேர்ந்த ரசங்க ரத்னாயக்க(வயது-27) என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கோப்பாய் பொலிஸ் நிலைய வளாகத்திலுள்ள பொலிஸ் தங்குமிட விடுதியில் தனது அறையில் தூக்கிட்டு தற்கொலைசெய்து கொண்ட குறித்த பொலிஸ் உத்தியோகத்தரின் சடலம் யாழ்.நீதவான் நீதிமன்ற நீதிவான் பெ.சிவகுமார் முன்னிலையில் நேற்று மாலை 5 மணியளவில் தூக்கிலிருந்து இறக்கப்பட்ட அதேவேளை சடலம் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு பிரேத பரிசோதனைக்காக ஒப்படைக்கப்பட்டது.

கடந்த சில நாட்களுக்கு முன்பே குறித்த பொலிஸ் உத்தியோகத்தர் விடுமுறையில் வீட்டுக்கு சென்றுவிட்டு பணிக்கு திரும்பியிருந்தார் என்றும் அவரது தற்கொலைக்கு குடும்ப பிணக்கு காரணமாகயிருக்கலாம் என்றும் சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (எ-6-11)


## பாராட்டும், பிறந்தநாள் வாழ்த்துக்களும்



ஜெயராசா
லக்சகா
யா/இந்துமகளிர் ஆரம்ப பாடசாலை மாணவி 175 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்த ஜெயராசா லக்சிகா இன்று தனது பிறந்த நாளை வெகுவிமரிசையாகக் கொண்டாடுகிறார்.
அவரை பல்கலையும் கற்று பல்லாண்டு காலம் நீடூழி வாழ வாழ்த்துவதுடன் புலமை பரிசில் சித்தியடைந்தமைக்காக பாராட்டும் தெரிவித்துக் கொள்கின்றோம்.



கரந்தன் றோட், ஊரெழு கிழக்கு, சுன்னாகம்.
வாழ்த்துவோர் - குடும்பத்தினர்
(C-9174)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## போர்க்குற்ற...

நியமிப்பது, தான் விரும்பியவர்களை அமைச்சுக்களின் செயலாளர்களாக நியமிப்பது போன்ற தன்னிச்சையான அதிகாரங்களை உடனடியாக கட்டுப்படுத்தியாக வேண்டும்.

நாட்டில் தற்போது அமுலில் இருக்கும் விகிதாசார தேர்தல் முறையில் மாற்றங்களை செய்ய வேண்டும். போர்க்குற்றங்கள் என்ற போர்வையில் இவற்றை கீழடிப்புச் செய்ய முடியாது.

அப்படி செய்வது புலியை காட்டி முயலை கொல்வது போன்ற செயல். இதனால் இவை இரண்டையும் வெவ்வேறாக நாம் கருத வேண்டும்.

விடுதலைப் புலிகள் மற்றும் வெளிநாட்டு சக்திகளிடம் நாங்கள் சிக்கியிருப்பதாக பொய் பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அப்படியான எந்த சக்திகளிடமும் நாங்கள் சிக்கவில்லை எனவும் ஜாதிக ஹெல உறுமய குறிப்பிட்டுள்ளது. (எ-11)

## மஹாநாயக்க...

தேரர்கள் என்று கருதப்படும் நிலையில், சிறிசேனவின் இந்த சந்திப்பு அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாக பார்க்கப்படுகிறது.

தேரர்களை சந்தித்த பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய மைத்திரிபால, தான் போட்டியிடவுள்ள கூட்டணியின் பெயர் சின்னம் போன்றவை அடுத்த ஓரிரு தினங்களில் மக்களுக்கு அறிவிக்கப்படும் எனக் கூறினார்.

தான் அரசாங்கத்தை விட்டு வெளியேறிய 72 மணி நேரங்களில் தனக்கு பலத்த மக்கள் ஆதரவு கிடைத்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறை ஒழிக்கப்படுவது பற்றி மக்களுக்கு தகவல் அளிக்கும் துண்டு பிரசுரங்களை ஜாதிக ஹெல உறுமய கட்சியினர் கொழும்பில் விநியோகித்துள்ளனர்.

போர்க்குற்ற குற்றச்சாட்டுகளை காரணம் காட்டி நாட்டின் ஜனநாயகத்தை முடக்குவதற்கு அரசாங்கத்துக்கு இடமளிக்க முடியாது என அக்கட்சியின் செயலாளரும் முன்னாள் அமைச்சருமான பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

ஜாதிக ஹெல உறுமய கட்சி உறுப்பினர்கள் கடந்த வாரம்தான் அரசாங்கப் பொறுப்புகளில் இருந்து விலகியிருந்தனர்.

எதிர்க்கட்சிகளின் பொதுவேட்பாளருக்கு தமது கட்சி ஆதரவு வழங்குவது பற்றிய தீர்மானம் இன்று வெளியிடப்படும் என அவர் தெரிவித்தார். (எ-11)

## ஆளும்...

நான் எதிர்பார்த்துள்ளேன்.

பொது வேட்பாளராக போட்டியிட நான் முன் வந்து கடந்த 72 மணிநேரத்தில் அரசியலில் பாரிய மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன.

நான் எதிர்பார்த்ததை விட நாட்டு மக்களின் ஆசியும் ஆதரவும் கிடைத்துள்ளது. எனக்கு கிடைக்கும் தகவல்கள் என்னை ஆச்சரியத்திற்கு உள்ளாகியுள்ளது. அந்தளவுக்கு நாட்டில் மாற்றங்கள் ஏற்பட்டு வருகிறது.

அதேபோல் நீதியானதும் நியாயமானதுமான தேர்தல் நடத்தப்படும் என எதிர்பார்ப்பதாகவும் மைத்திரிபால சிறிசேன கூறியுள்ளார்.

அதேவேளை அனுராதபுரத்திற்கு நேற்று மாலை சென்ற மைத்திரிபால சிறிசேன ஸ்ரீ மஹாபோதி விகாரையில் வழிபாடுகளில் ஈடுபட்டார்.

கண்டியில் நடைபெற்ற நிகழ்வுகளில் நாடாளுமன்ற உறுப்பினர்களான கரு ஜயசூரிய, லக்ஷ்மன் கிரியெல்ல, அர்ஜுனரணதுங்க, எம்.கே.டி.எஸ் குணவர்தன ஆகியோரும் கலந்து கொண்டனர். (எ-11)

## யாழ்ப்பாணத்தில்...

அவதானிக்கப்பட்டுவந்த நிலையில் நேற்று முதல் குடாநாட்டில் அதியுச்சமாக வீதிகள், பொது இடங்கள் அனைத்திலும் பாதுகாப்புபலப்படுத்தப்பட்டு படையினர் நிலை நிறுத்தப்பட்டிருக்கின்றனர்.

கடந்த வருடத்தைப் போன்று குடா நாட்டின் பல ஆலயங்களுக்குச் சென்ற படையினர் 27-ம் திகதி நடைபெறவிருக்கும் அனைத்து பூஜை வழிபாடுகளையும், நிறுத்த வேண்டும் என கூறியிருக்கின்றனர்.

மேலும் இளைஞர்கள் அதிகம் கூடி நிற்கும் சனசமூக நிலையங்கள் மற்றும் பொது இடங்களில் 27-ம் திகதி எவரும் நிற்க கூடாது என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் நேற்று யாழ்.பல்கலைக்கழகம், மற்றும் மாணவர் விடுதி ஆகியவற்றை சுற்றி துவிச்சக்கர வண்டிகளில் பெருமளவு படையினர் உதிரிகளாக களமிறக்கப்பட்டிருப்பதுடன், யாழ்.பிறவுண் வீதி, இராமநாதன் வீதி, பலாலி வீதி, சிவனம்மன் கோவிலடி போன்றவற்றிலும் படையினர் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதுடன், ஆங்காங்கே விசேட அதிரடிப்படையினரின், சோதனை நடவடிக்கைகளும் அதிகரிக்கப்பட்டிருக்கின்றன.

இந்நிலையில் 27-ம் திகதி இத்தகைய கெடுபிடிகள் இன்னமும் அதிகரிக்கப்படலாம என மக்கள் அச்சத்தில் ஆழ்ந்துள்ளமையினைக் காண முடிகின்றது. (எ-11)

## திருச்சபைக்கு...

புனித பாப்பரசரின் விஜயத்தை அண்மித்து தேர்தல் நடத்தப்படாது என்று கத்தோலிக்கத் திருச்சபைக்கு வழங்கிய வாக்குறுதியை அரசாங்கம் மீறியுள்ளதாக குற்றம் சாடப்பட்டுள்ளது.

அத்துடன், புனித பாப்பரசரின் பயணத்தை அரசியல் நோக்கங்களுக்கு பயன்படுத்தக் கூடாது என்ற கோரிக்கையையும் அரசாங்கம் உதாசீனப்படுத்தியுள்ளது.

பாப்பரசரின் பயணத்தை அரசியல் பரப்புரைகளுக்குப். பயன்படுத்தக் கூடாது என்ற கத்தோலிக்கத திருச்சபையின் கோரிக்கைகளை மீறி அரசாங்கம் ஏற்கெனவே பரப்புரைகளை மேற்கொள்ள ஆரம்பித்துவிட்டது.

ஜனாதிபதி மற்றும் பாப்பரசரின் படங்களைத் தாங்கிய பதாகைகள் கத்தோலிக்க மக்கள் வாழும் பகுதிகளில் பல இடங்களில் வைக்கப்பட்டுள்ளன.

புனித பாப்பரசர் பிரான்சிஸ் எதிர்வரும் ஜனவரி மாதம் 13ஆம் திகதி முதல் 15ஆம் திகதி வரை இலங்கைக்கு பயணம் மேற்கொள்ளவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், ஜனாதிபதித் தேர்தல் எதிர்வரும் ஜனவரி மாதம் 8ஆம் திகதி நடத்தப்படவுள்ள நிலையில், இத்தேர்தலுக்கும் பாப்பரசரின் பயணத்துக்கும் இடையில் ஐந்து நாட்களே இடைவெளி உள்ளது.

இத்தேர்தலுக்குப் பின்னர் அரசியல் ரீதியான குழப்பம் மற்றும் வன்முறைகள் இடம் பெற்றால், அது பாப்பரசரின் பயணத்தைப் பாதிக்கும் என்று ஏற்கெனவே கத்தோலிக்க திருச்சபையின் தரப்பில் எச்சரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

ஆயினும், இத்தேர்தலினால் பாப்பரசரின் வருகை பாதிக்கப்படாது என்றும், அவருக்கு முழுமையான பாதுகாப்பு அளிக்கப்படும் என்றும் அரசாங்கம் வத்திக்கானிடம் உறுதியளித்திருந்தது.

இந்நிலையில், பாப்பரசர் வருகையை அண்மித்து ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ளமை மற்றும் அவரின் பயணத்தை அரசியல் பரப்புரைகளுக்குப் பயன்படுத்துவது தொடர்பிலும் கத்தோலிக்கத் திருச்சபை அதிர்ச்சி அடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (எ-11)

## நிறை...

நாடாளுமன்ற உறுப்பினர்கள் வரவுசெலவுத் திட்டத்துக்கு எதிராக வாக்களித்தனர்.

ஜனாதிபதி தேர்தலில் மகிந்த ராஜபக்ஷவை எதிர்த்து போட்டியிடுவதற்காக அரசாங்கத்திலிருந்து வெளியேறியிருந்த மைத்திரிபால சிறிசேன உள்ளிட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஜாதிக ஹெல உறுமய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களும் வாக்கெடுப்பின்போது சபையில் பிரசன்னமாகியிருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (எ-11)

## சுடுவோம்...

த்தில் உள்ள கட்டடங்களில் பரவலாக இத்துண்டுப்பிரசுரங்கள் ஒட்டப்பட்டுள்ளன.

தமிழீழ விடுதலைப் புலிகளினை மீள உருவாக்க முயல்கின்றனர், மாவீரர் தினத்தினை அனுஷ்டிக்க விட மாட்டோம் என துண்டுப்பிரசுரத்தில் குறிப்பிடப்பட்டே ஒட்டப்பட்டுள்ளன.

இதனால் யாழ்.பல்கலையில் நேற்றையதினம் பதற்றம் நிலவியதோடு அச்ச நிலையும் காணப்பட்டது. (எ-4)

**தென்னங்கன்றுகள் தேவை**

நடுகைக்கு உகந்த நல்லின தென்னங்கன்றுகள் உடன் தேவை

தொடர்பு:0776521675 (இ)

**ALLIANCE FRANÇAISE DE JAFFNA**

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

af பிரெஞ்சு மொழி af Alliance Française de Jaffna

கற்பதற்கு FRENCH EMBASSY யின்கீழ் இயங்கும் முதல்தர சர்வதேச நிறுவனம் AF மட்டுமே (யாழில் 1976 முதல்). 136+ நாடுகளில் 1040+ கிளைகள். பிரெஞ் ஆசிரியரிடம் சரியான உச்சரிப்போடு படிக்க, CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS. யாரும் படிக்கலாம் இன்றே பதிவு செய்யுங்கள் (9173)

021 222 8093 61, கச்சேரி - நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்..

**பெயர் மாற்றம்**

மட்டுவில் தெற்கு சாவகச்சேரியில் வசிக்கும் 752734356V எனும் அடையாள அட்டை இலக்கமுடைய ஆறுமுகம் துரைசாமி என்று இதுவரை வழங்கப்பட்டு வந்த எனது பெயரை இன்று தொடக்கம் **ஆறுமுகம் சுரேஸ்குமார்** என மாற்றம் செய்துள்ளேன் என்பதனையும் தொடர்ந்து இப் பெயரையே சகல ஆவணங்களிலும் பயன்படுத்துவேன் என இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு மக்களுக்கு அறியத் தருகின்றேன்.

உண்மையுள்ள
ஆ.சுரேஸ்குமார்.

(8420)

**தேவை Wanted**

Job! Job! Job!....

0774458134 நீங்கள் O/L பயின்றவரா? இவ்விலக்கத்திற்கு உடனே அழைத்து உங்கள் பதிவுகளை பதிவு செய்க. நாடு முழுவதும் 40 பேருக்கு முன்னுரிமை.

☆நிர்வாக அதிகாரி ☆செயற்றிட்ட அதிகாரி
☆அலுவலக உதவியாளர் ☆மேற்பார்வையாளர்

**தங்குமிடவசதி செய்து தரப்படும் அனுபவம் அவசியமில்லை**
**பயிற்சிக்காலம் 12000/= -15000/= பின் குறைந்தது 45000/=**
**இல.225, 3-ம் குறுக்குத்தெரு, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (சுகவாழ்வு நிலையத்துக்கு அருகில்)** (8422)

**A/L பொருளியல்**
**உற்பத்தி & செலவுக் கோட்பாடுகள்**
இரண்டாம் பதிப்பு ரூபா 20
**வே.கருணாகரன்**
பூபாலசிங்கம் புத்தகசாலை,
அன்னை புத்தகசாலை (8421)

**அரச துறை, தனியார் துறை மற்றும் NGOகளில் தற்போது கோரப்பட்டுள்ள வேலைவாய்ப்புகள் பற்றிய வழிகாட்டல், ஆலோசனை மற்றும் உதவிகளுக்கு..**

**கோலாசிற்றி** 021 320 2787 தொழில் வங்கி
224/1, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (இலுப்பையடி சந்திக்கு அருகில்)
இனி நாம் இருக்கிறோம் நேரில் வரவும்

**பெருவகையடைகின்றோம்**



Mr.T.Thanendran. SLTES
(B.Com (Hons), M.M.SPI (Jaf),
H.N.Dip.IN.ACC.(Cey)
P.G.Dip.IN.Edu. (Jaf,AAT (SL)
Cer.in, Prof.Eng (O.U.S.L)
Dip.In, Eng (Colombo University)
MATE (Inte) (O.U.S.L)
Lecturer (English)
National Collage of Education
Dharga town

தர்க்கா நகர் தேசிய கல்வியியல் கல்லூரி விரிவுரையாளரும் எமது நண்பருமான T. தனேந்திரன் அவர்கள் இலங்கை கணக்கீட்டு தொழில்நுட்பவியலாளர் சங்கத்தினால் வழங்கப்படும் உயர் நிலை விருதான MAAT தகைமையை 25.11.2014 இன்று BMICH இல் நடைபெறும் பட்டமளிப்பு விழாவில் பெறுவதையிட்டு வாழ்த்துவதுடன் மேலும் பல பட்டங்கள் பெற வேண்டுமென வாழ்த்துக்கள் கூறுகின்றோம்.

வாழ்த்துவோர்:-
நண்பர்கள்
P.உமாசங்கர் (மருதானை தொழில் நுட்ப கல்லூரி)
P.கமல்தாசன் (யாழ்/இந்து மகளிர் கல்லூரி)

(சி-9161)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 25.11.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org